436

மங்கை

பெண்களின் புத்தகம்



ஆகஸ்ட்டு 1947

கவியரசி சரோஜினி தேவி
ஐக்கிய மாகாண கவர்னராகிருர்

ஆண்களோடு பெண்களும்
சரி நிகர் சமானமாக
வாழ்வமிந்த நாட்டிலே—பாரதியார்

தேசந்தோறும் காலம் மாறும் ஆனல்!



மேலே படத்தில் காட்டியிருப்பது லண்டனமா நகரத்திலுள்ள செனட் பாலஸ் மாதாகோவில் கீழே இருக்கும் படம் லக்ஷமணபுரியிலுள்ள ஜார்ஜ் அரசர் வைத்தியக் கல்லூரி.

லண்டன் மக்கள் படுத்துறங்கும்போது, லக்ஷ்மண புரி மக்கள் துயில்நீத்து எழுந்திருக்கிறார்கள். தேசந்தோறும் காலம் மாறும். ஆனல் மாருமல் இருப்பது 'வெஸ்ட் எண்ட்' கடிகாரங்களின நீடித்த உழைப்புத்தான். எந்தத் தினுசான 'வெஸ்ட் எண்ட்' கடிகாரமும் மிக அழகாகவும வனப்புடனும் வெகு நாட்கள் நிலைத்திருக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

பெருவாரியான ஆர்டர்களுக்கும் சப்ளை செய்யக்கூடும். ஆனலும், தேவைக்கு வேண்டிய அளவில் இறக்குமதி செய்வதில் இன்னும் கஷடங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

உங்கள் வெஸ்ட் எண்ட் கடிகாரத்தில்



"செகண்ட்ஸ்" நிபூ காலிபர் வளைந்தது

West End

WATCH CO.

BOMBAY & CALCUTTA

வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனி

பாம்பே — கல்கத்தா

சுதந்திர தினம்

●

ஆகஸ்ட்டு 15-ல் வெளி வருகிறது

காந்திமகான் கதை

(நாட்டுப் பாடல்)

●

இந்திய தேசிய இயக்கம் படிப்படியாக வளர்ந்து சுதந்திர மடைந்ததுவரை நடந்த வரலாறுகளை நாட்டுப் பாடல் வடிவத்தில் ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு இயற்றி யிருக்கிறார்.

●

டெம்மி அளவில் சுமார் 240 பக்கம் நல்ல காகிதத்தில்

விலை ரூ. ஐந்து

(தபால் செலவு தனி)

●

சக்தி காரியாலயம்

சென்னை—14.

பொருள் அடக்கம்

1947 ஆகஸ்டு

தொகுதி 2 : பகுதி 2

பெண்ணும் ஆணும்	...	தலையங்கம்	5
தாயின் மணிக்கொடி	...	கவியரசி சரோஜினி தேவி	7
பெண்களுக்கு	...	விஜயலட்சுமி பண்டிட்	9
கறிவேப்பிலை	...	'டாக்டர்'	11
ஆணும் பெண்ணும் வித்தியாச...	...	எஸ். வி.	12
ஆகாரம்	...	செல்லம்	13
அழகுக் குறிப்பு	...	நாகலக்ஷ்மி	15
மாமியார்	...	டி. எஸ். ரங்கதேவி	17
யோசனை சொல்வீர்களா ?	...	'ஒரு மங்கை'	18
செல்லக் குழந்தை	...	பாப்பா	21
இல்லாள்	...	ஸ்ரீமதி ராதாசகி	24
சிட்டிவேலி நண்டு	...	'காசிவாசி'	26
பருமன்	...	டாக்டர் நாமகிரி	29
அழகி	...	கல்பனா	33
மனோரதம்	...	ய. ல. நா.	40
இந்தப் புருஷர்கள்	...	வேம்பு	47
பெண்களும் யோக ஆசனமும்	...	சீதாலட்சுமி குமாரஸ்வாமி	49
வேலன்	...	ஜயலக்ஷ்மி R. ஸ்ரீனிவாசன்	53
எங்கே பெற்றாய் ?	...	எச். விஜயகுமார்	64
ராதையின் காதல்	...	குமாரி எஸ். என். என்.	65
பேய் வீடு	...	சகுந்தலாராஜன்	67
மரகதம்	...	'நாகு'	71
ஜைனப் பெண்கள்	...	ஸ்ரீ ஜெயின்	77

ஆசிரியர் : எஸ். விசாலாட்சி

✻



ஆயிரங் காலப் பயிர்

நம் நாட்டில் திருமணத் தம்பதிகளை 'ஆயிரங் காலப் பயிர்' என்று வாழ்த்துவார்கள். நம் நாட்டுப் பண்பாட்டின் அறிகுறியாய்—நம்மவர் திருமணத்தின் மதிப்புக்குரிய சின்னமாய் இலங்கும் திருமங்கலியத்தை எண்ணிப் பெருமைப் படாதவர் யாருமே இல்லை.

திருமங்கலியத்தை யார் வேண்டுமானாலும் செய்யலாமா என்ன? ஆயிரங் காலப் பயிரல்லவா திருமங்கலிய தாரணம்! எனவே, புகழ் பெற்ற நகை வியாபாரியின் அனுபவமும், ராசியும் அவசியம்.

பாபாலால் கம்பெனியார் செய்யும் இத்தகைய அணிகள் உங்கள் வீட்டுக்கு அழகு மட்டுமல்லாமல் கிருஹ லட்சுமியையும் சேர்த்து வைக்கின்றன.

197642

// மங்கை //

பெண்களின் புத்தகம்

தொகுதி 2	சென்னை, ஆகஸ்ட்டு 1947	பகுதி 2

பெண்ணும் ஆணும்

●

பெண்களின் கிளர்ச்சி புருஷர்ளுடன் சம்பந்தப் பட்டது தான். அடிமைத் தளையிலோ அல்லது சுதந்தரத்தின் வாழ்விலோ ஆண்களின் உயர்வும் தாழ்வும் பெண்களுடனேயே தான் இருக்கிறது. அஞ்ஞான இருளி லிருந்து ஆணுடன் சமமாக இயற்கையின் தங்கப் படிகளி லேறி புருஷனுடன் இரவு பகல்களைப் பகிர்ந்து கொண்டு, ஒரே லட்சியத்தை மேற்கொண்டு உலகின் வருங்கால மக்களின் வளர்ச்சியைத் தன் பொறுமையால் வகித்துக் கொண்டு, முன்னேக்கிச் செல்லும் பெண்மணி, கூனிக் குறுகி, அகமகிழ்ச்சியைச் சிறிதும் அறியாது, அடிமை வாழ்வில் அமிழ்ந்து கிடந்தால் மனித வர்க்கத்திற்கு உய்யும் வழி ஏது? உலக மாதாவே, நீ தனிமையில் உழைத்து இளைக்க வேண்டாம்.

பெண் மக்களின் உயர்வுக்காக ஏற்பட்டது போன்ற தோற்றத்தோடு சில புல்லுருவிகள் அவர்களின் தாழ்விற்கு அடிகோலி விட்டன. இம் மூடப்பழக்க வழக்கங்களி லிருந்து பெண் மக்கள் விடுதலை யடைய வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் தன் சுய உரிமைகளை உணரவேண்டும். தன் பெண்மைக்குக் கேடு வாராமல் தன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் பூரணச் சொத்துரிமை அடையவும் தீவிரமாய் முனைய வேண்டும்.

ஆணைவிட பெண் எவ்வகையிலும் தாழ்ந்த சிருஷ்டி யல்ல. பலதரப்பட்ட ஜீவராசிகளே போல ஆணிலிருந்து மாறுபட்ட பிரகிருதியே யாகும். ஆணைப் போலவே பெண்ணு மிருந்து விட்டால் மன்மதனுக்கு வேலையேது? இரு பாலரையும் பிணைக்கும் சக்தி அவர்க ளிடையே யுள்ள மாறுபட்ட சிருஷ்டி வித்தியாசமே யன்றோ?

இனி வருங்காலத்தில் பெண்கள் மேலும் மேலும் ஆண்களைப் போல சில வகைகளில் மாற வேண்டும். ஆண்களும் பெண்களின் இனிய ஸ்வபாவத்தையும் உயர்ந்த பண்பையும் அடக்கத்தையும் பகிர்ந்துகொள்ள வேண்டும். பெண்கள் உலகை வெல்லும் தோள் வலிமையில் ஆணுடன் போட்டி யிட்ட போதிலும் தன் உத்தமமான பெண்மையை இழந்துவிட லாகாது. ஆடவர்களுடைய அகன்ற மனப் பான்

மையை அடைவதில் தமது இயற்கையான பொறுப்புகளைப் புறக்கணித்து விடலாகாது. வருங்காலப் பயிர்களை வளர்க்கும் பொறுப்பையும் தட்டிக் கழிக்கலாகாது. இருதயப் புண்களை ஆற்றும் இங்கிதமான ஸ்வபாவத்தை இழந்துவிடக் கூடாது. இனிய சங்கீதத்திற் கேற்ற சாகித்தியமேபோல்பொலிவுடன் விளங்க வேண்டும்.

"நாகரீகப்" படிப்புப் படித்த பெண்கள் தமது இயற்கையான அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு போன்ற உயர்ந்த குணங்களைப் புறக்கணித்து விட்டு ஆண்களுடன் சமமாகப் படாடோப வாழ்க்கை நடத்துவதில் மூழ்குகிறார்கள். அத்தகைய படிப்பு பெறாத சகோதரிகளோ சுகாதாரத்திற்காக ஏற்பட்ட சில பழக்கங்களை சம்பிர தாயங்களாக மாற்றிக்கொண்டு குருட்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். முதற் கூறியவர்களை ஆண்கள் தமது விளையாட்டுக் கருவிகளைப் போலவும் பின்னால் குறிப்பிட்டவர்களைப் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும் நடத்துகிறார்கள்.

பாரத தேசத்தின் மீது சுதந்தர ஜோதி உதயமா யிருக்கிறது. இப்பொழுது உலக மக்களிடையே சமமாகத் தலைநிமிர்ந்து செல்ல நமக்குக் கௌரவம் ஏற்பட் டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் பெண்களுக்குச் சம அந்தஸ்தளிப்பது ஆண்களின் கடமை. அந்த அந்தஸ்துக்கு யோக்கிய தாம்சம் பெற வேண்டியது பெண்மக்களின் லட்சியம்.

வரதட்சணை, கணவனின் கொடுங் கோன்மை போன்ற இடுக்கண்கள் இன்னும் பெண்களின் முன்னேற்றத்தைத் தடை செய்து கொண்டுதா னிருக்கின்றன. அதனால் தேசத்தின் வருங்காலமே பாழாய்விடக் கூடும் என்பதைப் புருஷர்கள் உணர்ந்து தேச விடுதலையோடு பெண்களின் விடுதலையையும் சிறப்பாகக் கொண்டாட பகவான் அனுக்கிரகம் செய்யத் தொழுவோமாக.

வருந்துகிறோம்

"என் உலகம் பாழடைந்து விட்டது. என் கணவருடைய ஆத்மா சாந்தியடைவதற்காகப் பகவானைப் பிரார்த்தனை செய்வதைவிட இனி எனக்கொரு வேலையுமில்லை" என்று துக்க சாகரத்திலிருக்கும் ஸ்ரீமதி ஆங்ஸான் (மாஜி பர்மா பிரதமரின் மனைவி) செய்தி யனுப்பியிருக்கிறார்.

ஸ்ரீமதி ஆங்ஸானுக்கு முப்பது வயதுதான் ஆகிறது. மூன்று குழந்தைக ளிருக்கின்றன. இந்த இளம் வயதில் ஏற்பட்டிருக்கும் அதிர்ச்சியைச் சகிக்கப் பகவான் தான் உதவிசெய்ய வேண்டும். அவர் தினமும் தம் கணவனின் கல்லறைக்குச் சென்றுப் பிரார்த்தனை செய்து வருகிறார். மற்ற நேரங்களில் தனி அறையிலேயே அடைபட்டுக் கிடக்கிறார்.

ஸ்ரீமதி ஆங்ஸானுக்கு சகிப்புத் தன்மையைக் கொடுக்கும்படி இந்தியப் பெண்களும் பகவானைத் தொழுவோமாக.

தாயின் மணிக்கொடி

கவியரசி சரோஜினி தேவி

முதல் மகா யுத்தம் முடிந்தவுடன் நியூயார்க்கில் நடந்த சமாதான மகா நாட்டில் நாற்பத்திரண்டு நாடுகள் கலந்து கொண்டன. அந் நாடுகளின் தேசீயக் கொடிகள் அப்போது கம்பீரமாகப் பறந்தன. இந்த சபையிலேயே நம் தேசியக் கொடி சரித்திரப் பிரசித்தி வாய்ந்த நம் நாட்டின் மணிக் கொடி பறக்கவில்லையே என்று மனம் நொந்தேன்.



மற்றொரு முறை நாற்பத்திரண்டு நாடுகளின் மாதர் பிரதிநிதிகள் பெர்லினில் சர்வதேச மகா நாட்டில் கலந்து கொண்டனர். அப்போது சகலநாடுகளின் கொடி, அணிவகுப்பு நடைபெற்றது. நம் கொடி மட்டும் இல்லை! மகா நாட்டிலே கலந்து கொண்ட இந்திய மாதர்களில் சிலர் தங்களது பச்சை-வெள்ளை, குங்குமக் கலர்ப் புடவைகளைக் கிழித்தும் தேசியக் கொடியை உண்டாக்கினர்.

சமீபத்தில் நடந்த ஆசிய உறவு மகா நாட்டில் கூட தேசியக் கொடி பறக்கவில்லை. காரணம் அது ஒரு கட்சியினரால் அம் மகா நாடு கூட்டப்பட்டதல்ல என்பதற்குத்தான்.

இப்பொழுது நம் கொடி சகலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தேசியக் கொடியாக, இந்தியாவின் கொடியாகிவிட்டது. லட்சக் கணக்கான ஆண், பெண், குழந்தைகளின் தியாகத்தின் வாயிலாகப் பிறந்த நம் சுதந்திரக்கொடி இனிக் கம்பீரமாகப் பறக்கும்.

இக் கொடியிலே திகழும் அசோகனின் தர்ம சக்கரம் சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும், சர்வதேச நட்பையும் உண்டாக்கக்கூடிய சின்னமாகும். உதய சூரியனின் உருவத்தை—எழுச்சியை இந்தச்சக்கரத்திலே நாம் காண்கிறோம். மனிதஜாதியின் தெய்விக உணர்வைப் பிரதிபலிக்கிறது இந்தச் சக்கரம்.

இக் கொடியின்கீழ் அரசனுக்கும், ஆண்டிக்கும், செல்வருக்கும் எளியவருக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் உயர்வு தாழ்வில்லை. ஆதலால் நவ இந்தியாவின் சகோதர சகோதரிகளே, ஹிந்துக்களே, முஸ்லீம்களே, கிறிஸ்தவர்களே, பார்ஸிகளே, நீங்கள் அனைவரும் ஐக்கிய உணர்வும், பிரிக்க முடியாத ஆத்மாவும் கொண்டவர்கள். ஆகவே தலை நிமிர்ந்து இக்கொடியை வணங்குமாறு உங்களை அழைக்கிறேன்.

சக்தி வாய்ந்த நூல்கள்

லெனின் பிறந்தார் : ஆர். ராமநாதன் எழுதியது

லெனின் பிறந்தார் என்றால் கூடவே புரட்சி இயக்கமும் பிறந்தது என்றுதான் பொருள். இந் நூலில் லெனின் வரலாறு சொல்லும் வகையில் புரட்சி இயக்கம் வளர்ந்த வகையையும் ஆசிரியர் விளக்கி யிருக்கிறார். படங்களுடன்

விலை ரூ. மூன்றரை — தபால் செலவு தனி

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

டால்ஸ்டாய் எழுதியது ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்தது இந் நூல். "உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்" எனும் அரிய சித்தாந்தம்தான் இந் நூலில் அடங்கி யிருக்கிறது. இப்போது தமிழில் மூன்றாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அழகிய மொழிபெயர்ப்பு

விலை ரூ. மூன்று — தபால் செலவு தனி

உலோகமும் நாமும் : மு. அருணாசலம் எழுதியது

உலோகங்களைப் பற்றிய விரிவான முறையில் தெளிவாய் விளக்குவது இந் நூல். தமிழ் உலகுக்குப் புதிது.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

ஹிந்து பத பாதுஷாஹி

வீர சாவர்க்கர் எழுதியது 'அபிநவம்' மொழி பெயர்ப்பு

இந்து சாம்ராஜ்ய வீழ்ச்சியை விவரிக்கும் சிறந்த நூல்.

விலை ரூ. 3-12-0 — தபால் செலவு தனி

தயாராகின்றன

ஆசிய நாடுகள் — கு. அழகிரிசாமி எழுதியது.

ஆசியாவிலுள்ள முப்பத்து நான்கு நாடுகளைப் பற்றிய சரித்திர, பூகோள, இலக்கிய, அரசியல் விவரங்களைத் தெரிவிப்பது இந் நூல். ஆசிய உறவு மகா நாட்டு நிகழ்ச்சி முறையும், சொற்பொழிவுகளும் அடங்கியது. பல படங்களோடு வெளிவரும்,

முத்திரா ராக்ஷஸம்

வடமொழியில் விசாக தத்தர் எழுதிய சிறந்த அரசியல் நாடகத்தின் அழகான மொழிபெயர்ப்பு.

சக்தி காரியாலயம்—சென்னை 14.

பெண்களுக்கு

•

விஜயலக்ஷ்மி பண்டிட்

இந்த நாட்டிலுள்ள எல்லாக் கல்விப் பயிற்சியுடைய பெண்மணிகளும் தாய் நாட்டின் நலனுக்காகப் பணியாற்ற முன்வர வேண்டும். ஆண் மக்களைவிடப் பெண்கள்தான் இந்த நெருக்கடியான கட்டத்தில் அதிகப்பொறுப்புடன் பணியாற்ற வேண்டும்.

அந்நியர்கள் நம் தாய் நாட்டின் மீது பல முறையும் படையெடுத்து வந்த போதும் கூட, ஐக்கியமாக நின்றே நாம் அவைகளைச் சமாளித்தோம். ஆயினும் இன்று நம் நாடு படுமோசமான நிலையிலிருக்கிறது. இதற்கு நம்மிடையே யுள்ள ஐக்கியக் குலைவும், பலவீனமும்தான் காரணம். அந்நிய அரசாங்கத்தால் இன்று பிரிவினை நம்மீது திணிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்குக் காரணமென்னவென்பதை நாம் சிந்திக்க வேண்டும். அன்பையும், நல்லுணர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட நவ இந்தியாவை நாம்தான் ஏற்படுத்த வேண்டும். பழைய மனக்கசப்புகளை மறக்க வேண்டும்.

பாஞ்சாலம், எல்லைப்புறம், சிந்து ஆகிய மாகாண மக்களின் சோகக் கதையைக் கேட்டு அவர்கள் துன்பத்தை ஆற்றும் புனிதமான கடமையை பெண்களே செய்ய வேண்டும். நவ இந்தியாவை நிர்மாணிக்கும் திறமையும், உவமையும் நமக்குத்தான் உண்டு. மனித சமூகத்தில் பரஸ்பர உறவும், அன்பும் பெருகி வளரச் செய்யவேண்டியது நம் முக்கிய கடமையாகும்.

கல்லூரி மாணவிகள் தங்களது சக்தியை ஆக்க வேலைகளில் ஈடுபடுத்தவேண்டும். வயிற்றுக்குச் சோறில்லாத, கட்டவும் துணியில்லாத நிலைமை இன்னமும் நீடிக்குமானால் வரப்போகும் சுதந்தரத்தால் ஒரு பயனும்

இல்லை. நம்மை எதிர்நோக்கியுள்ள சிக்கலான பிரச்னைகளைத் தீர்த்தால்தான் உண்மையான சுதந்தரம் அடைந்தவர்களாவோம். பல்வேறு வகுப்பினரிடையே ஒற்றுமை நிலவச் செய்தல், சமூக முன்னேற்றம், கல்வி பரப்புதல், சக்திக்கும், திறமைக்கும் ஏற்றவாறு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளல் ஆகிய இவைகளை ஒவ்வொரு பெண்மணியும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தேசத்தின் நிர்மாண காரியங்களில் பெண்கள் ஈடுபடுவதற்கு முன்னுல், முதலில் தங்களை இறுகப் பிணித்திருக்கும் சமூகத் தளைகளிலிருந்து விடுபட வேண்டும். தேச விடுதலைக்காக பெண்கள் அதி தீவிரமாகப் போராடினார்கள். சுதந்தர இந்தியாவில் சமூக முன்னேற்றத்துக்காகப் பெண்கள் இன்னும் தீவிரமாக உழைக்க முன் வர வேண்டும்.

அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த விடுதலைப் போராட்டத்தில் பெண்களுக்குப் பெருமையான ஸ்தானம் வழங்கியவர் மகாத்மா காந்தியடிகள்தான்.

பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் இந்திய மசோதா நிறைவேறி விட்டதனுல் மட்டும் நமக்குப் பூரண சுதந்தரம் வந்ததாக ஆகிவிடாது. நம் லட்சியத்தில் இது ஒரு சிறு அம்சந்தான். நாம் கனவு கண்டபடியோ அல்லது விரும்பிய வகையிலோ சுதந்தரம் கிடைக்கவில்லை. தேசப் பிரிவினை கோடிக்கணக்கானவர் மனதைப் புண்படுத்திவிட்டது என்றுலும் தைரியம், தியாகம், உறுதி, தியாக உணர்ச்சி மூலம் மீண்டும் இந்தியாவின் ஐக்கியத்தை நிலை நாட்டி விடலாம.

உலகத்தின் கவனம் பூராவும் இன்று இந்தியாமீதுதான் நிலைத்திருக்கிறது. ஆகவே பிரிவினையைக் கண்டு நாம் மனமுறிவோ, அதைரியமோ அடையக்கூடாது. ஆனுல் திரும்பவும் இழந்த ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக நம் பலத்தை நாம் வளர்க்க வேண்டும்.

✲

குற்றத்தில் பங்காளி

கோர்ட்டிலே ஒரு 'கொலைக் கேஸ்' விசாரணை நடந்துகொண்டிருந்தது. குற்றவாளியை நீதிபதி கடைசி முறையாக 'நீ ஆரம்பத்திலிருந்து உன்னுடைய குற்றத்தில் பங்கு உள்ளவன் ஒருவன் உண்டு என்று திரும்பத் திரும்பக் கூறுகிருய். ஆனுல் அவன் யார்? எங்கேயிருக்கிருன்? என்றெல்லாம் ஏன் கூருமல் மறைக்கிருய்? என்று கேட்டார்.

'நீதிபதியவர்களே, அவன் யார்? எங்கு உள்ளவன் என்று கூறுவதால் எனக்கு ஒரு லாபமும் இல்லை. கோர்ட்டாருக்கும் பயனில்லை' என்று ஏக்கத்துடன் பதில் அளித்தான்.

'நீ சொல்வது தவறு. உன்னுடன் குற்றம் செய்தவனைத் தண்டிப்போம். உனக்கும் தண்டனை மாறும். அவனைப் பற்றிய உண்மையைச் சொல். உடனே அவன் கைது செய்யப்பட்டு தண்டனைபெறுவான்,'

'ஒருகாலு மில்லை. நான் கடவுளை நம்பித்தான் இந்தக் குற்றத்தைச் செய்தேன். ஆகவே என் குற்றத்தில் பங்கெடுத்துக் கொண்டவர் அவர்தான். உங்களால் அந்தக் கடவுளைக் கண்டுபிடித்துத் தண்டனை கொடுக்க முடியுமா? என்று கேட்டதும் நீதிபதி திகைத்து விட்டார்.

கறிவேப்பிலை

'டாக்டர்'

நம்மவரிடையே சாதாரணமாக வழங்கும் ஒரு பழமொழி உண்டு. பருப் பில்லாமல் கல்யாணம் உண்டா? என்று. இதே மாதிரி கறிவேப்பிலை இல்லாமல் சமையல் உண்டா? என்று புது மொழி உண்டாக்கிக் கொள்ளலாம். ஏன் என்றால் கறிவேப்பிலை சமையல் பதார்த்தங்களில் மிகவும் முக்கியமானதொரு அங்கமாக இருக்கிற தல்லவா?

நம் நாட்டிலே தயாரிக்கப்படும் வித விதமான உணவு பதார்த்தங்கள் ருசிக்குப் பேர் போனவை. ருசியான பதார்த்தங்களைத் தயாரிப்பதற்காகப் பல் வேறு உபகரணங்களை நம்மவர் நாடுகிறார்கள். இப்படிப்பட்ட உபகரணங்களில், முக்கியமாகக் கறிவேப்பிலை அதற்கென்று தனியாகவுள்ள மணமும், ருசியும் கூடி சமையலுக்கு அவசியமான தாகி விட்டது.

இந்த நாட்டிலே ஏராளமாய்ப் பயிராகும் பெருஞ் செடிகளினத்தைச் சேர்ந்த கறிவேப்பிலை, காடுகளிலும், மலைகளிலும், வீட்டுத் தோட்டங்களிலும் பயிராகும். நீர்மோர், ரசம், குழம்பு, முதலிய திரவப் பதார்த்தங்களில் இதைக் தாளிதமாக உபயோகிக்கலாம். கறிவேப்பிலைத் துவையல் சிறந்த ஊறுகாய்களையும் தோற்கடிக்கும்.

கறிவேப்பிலைச் செடியின் எல்லா உறுப்புகளும் அதாவது இலை, ஈர்க்கு, பட்டை, வேர் முதலிய யாவும் பயன் படக்கூடியது. கறிவேப்பிலைக் கஷாயம் பித்தத்தைக் கண்டிக்கும்.

இலையை நிழலில் உலர்த்தி, மிளகு, உப்பு, சீரகம், சுக்கு, முதலியவற்றைச் சேர்த்துப் பொடியாக்கிச் சோற்றுடன் கலந்து சாப்பிட்டால் மந்தம், மந்தபேதி, மலக்கட்டு, பிரமேகம் முதலியவை சாந்தமாகும்.

இலையுடன் சுட்டபுளி, வறுத்த உப்பு, வறுத்த மிளகாய் கூட்டித் துவையல் செய்து ஆகாரத்துடன் சாப்பிட்டால் அரோசகம் பித்த வாந்தி, பித்தக்ஷயம் அஜீரணம், வயிற்றுளைச்சல் இவைகள் குணமாகும். ஈர்க்கின் புறணியைத் தாய்ப் பால் விட்டு இடித்து ரஸம் பிழிந்து கிராம்பு, திப்பிலி சேர்த்து இரண்டு மூன்று தரம் குழந்தைகளுக்குப் புகட்ட வாந்தி நிற்கும். பசியை உண்டாக்கும்.

இலையை அரிசியுடன் சேர்த்து உரலில் இட்டுக் குத்தித் தேய்த்துப் புடைத்துவிட்டு, அத்துடன் ஒரு பழுத்து உலர்ந்த மிளகாயைக் கூட்டிக் கருக்கிச் சாந்து நிறம் வரும் பக்குவத்தில் வசம்புச் சாம்பல், சிறு நாகப்பூ, அதிவிடயம் இவைகளைச் சேர்த்து நீர்விட்டுச் சுண்டக் காய்ச்சிக் கொடுக்க அஜீரண பேதி முதலியன நீங்கும்.

இதன் ஈர்க்குடன் வேப்பீர்க்கு, நெல்லி ஈர்க்கு சேர்த்து இடித்து நீர்விட்டுக் காய்ச்சிக் கொடுக்க வாந்தி நிற்கும்.

மேற்படி இலையில் கொஞ்சமும் வயதுக்குத் தக்கபடி 1 முதல் 3 மிளகையும் சேர்த்து நெய்யில் வறுத்து, வெந் நீர் விட்டு அரைத்துக் கரைத்துப் பாலர்களுக்கு நீராட்டிய பின் குடிப்பிக்க மந்தம் முதலியன நீங்கிப் பசியை உண்டு பண்ணும்.

✲

ஆணும் பெண்ணும்-வித்தியாசமென்ன?

●

எஸ். வி.

இருபாலரிடையே, தோன்றும் வித்தியாசங்கள் அவர்களது அங்க அமைப்பி லிருந்து மாத்திரமன்று. பெண்கள் கர்ப்பாசயம், குழந்தைகள் வளர்ப்பு சாதனங்களான ஸ்தனங்கள் போன்ற உருப்புகளைப் பெற்றிருப்பதனு லன்று. அவர்களது வளர்ப்பு கல்வி முறை முதலியவற்ருலு மன்று. மனித சமூகத்தில் அவர்களது ஸ்தானத்தினுலு மன்று.குழலற்ற சதைக் கோளங்களில் ஏற்படும் இரசாயன சத்துகள் காரணமாக அவர்களுடைய சரீரத்திலுள்ள ஒவ்வொரு ஜீவாணுவிலும், சதையிலு முள்ள வேற்றுமை தான் காரணம். இந்த உண்மையை யறியாதவர்கள் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமாக ஒரே கல்வித்திட்டத்தை வகுத்திருக்கிருர்கள், அவர்களுக்கு ஒரே விதமான பொறுப்பிலும் சக்தியிலும் இருக்கவேண்டு மென வாதாடுகிருர்கள்.உண்மையில் பெண் ஆணிலிருந்து மிக மிக வேற்றுமையான பிரகிருதி. பெண்களின் உருப்புகளையும் நரம்புகளையும் சம்பந்தப்பட்ட வரையில் மேற்கூறிய உண்மைகள் நூற்றுக்கு நூறு பொருந்தும். எப்படி ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களை நிலை பெயரவைக்க நம்மால் இயலாதோ அவ்வாறேதான் சரீர தத்துவத்தை சம்பந்தப் பட்ட இயற்கை விதிகளும் நம்மால் அசைக்க முடியாதவை. அவற்றை மனித இச்சைக்கு உகந்தவைகளாக மாற்றி யமைத்துக் கொள்ள முடியாது. பெண்கள் தமது ஸ்வபாவங்களைத் தமது இயற்கைத் தத்துவத்திற் குகந்தவாறு பண்பு படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர ஆண்களைப் போல ஆவதற்கு முயற்சித்து அல்லல்படக் கூடாது.

கர்ப்பத்தினுல் பெண்களின் சரீர மனோ தத்துவங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. பெண் ஜந்துக்கள் தமது பூர்ண சரீர மனோ வளர்ச்சியை இரண்டொரு பிரசவங்களுக்குப் பிறகு தான் அடைகின்றனர். குழந்தைகளில்லாத பெண்கள் வெகுசீக்கிரத்தில் பொறுமையை இழந்து விடுகிருர்கள். கர்ப்பத்தி லிருக்கும் சிசு, அவள் கணவனுடைய சரீரத்தி லிருந்து உற்பத்தியானதாகையால் பெண்ணின் பிரகிருதியில் பெரிய மாறுதல்களை உண்டாக்குகிறது. பிள்ளைப் பேறு பெண்மையின் வளர்ச்சிக்கு எவ்வளவு இன்றிமையாதது என்பது போதுமான அளவுக்கு உடல் தத்துவ ஆசிரியர்காளால் அறிந்து கொள்ளப்படவில்லை.பெண்ணின் பூர்ண வளர்ச்சிக்கு இல்லற வாழ்க்கை மிக மிக முக்கியம், ஆகையால் பெண்களை பிள்ளைப் பேறடையும் எண்ணத்தி லிருந்து மாற்றுவது அசம்பாவிதம். அதனுல் பெருத்த தீங்குதான் நேரும். இளம் பெண்களுக்கு இளம் பிள்ளைகளைப் போன்ற சரீர, மூளைப் பயிற்சி யளிக்கப் படக் கூடாது. பெண்களுடையவும் ஆண்களுடையவும் புத்தியில் அவர்கள் ஜன்மேந்திரியங்களை ஆட்டு விக்கும் ஜீவ கோளங்களின் இரசாயன சத்துக்களால் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்றவாறு அவர்களின் கல்வி முறைகளை அமைக்க வேண்டும்.

ஆகாரம்

செல்லம்

எங்கள் கொல்லையில் இரண்டு பப்பாளிமரங்களிருக்கின்றன. ஒவ்வொரு கணுவுக்கும் ஒரு காயாகக் காய்த்துச் செழித்திருக்கிறது. பழுத்துக் கீழேவிழுந்ததும் வேலைக்காரி கொண்டு போய் விடுவாள். என் தகப்பனார் கொல்லைப் பக்கம் போனபோது கண்டால் கொண்டுவந்து தோல் சீவி நறுக்கி விநியோகிப்பது வழக்கம். நான் பழத்தைத் தின்றதே கிடையாது. அதை வாய்ப் பக்கம் கொண்டுபோகும் போதே ஒரு அருவருப்பான வாசனை.

கிராமத்தில் நடக்கும் கல்யாணத்திற்குப்போவதற்காக டில்லியி லிருந்து ஒரு பட்டாளம் குழந்தை குட்டிகளுடன் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டது. கொல்லையில் பப்பாளிக் காயைத் தவிர்த்து வேறொன்றுமே யில்லை. மத்தியானம் பனிரண்டு மணி. என் தகப்பனார் சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்துக்கொள்ளும் நேரம், மார்க்கெட்டுக்குப் போகச் சொல்வது நியாயமில்லை. என் தம்பியை விட்டுக் கொல்லையி லிருந்து நான்கு முற்றின பப்பாளிக் காய்களை அறுத்து வரச் சொன்னேன். பப்பாளிக் காயைத் தோல் சீவி பொடியாக அரிந்து கடுகு மிளகாய் தாளித்து நறுக்கிய பப்பாளித் துண்டுகளை உப்புப் போட்டு வழங்கினேன். சாப்பிட்டவர்கள் 'இது என்ன கரி' என்று வியந்து விட்டார்கள். கொல்லையில் என் தகப்பனார் இன்னும் பத்து நாத்துகளை நட்டு வைத்திருக்கிறார். பப்பாளிக் காயினால் நான் தினம் ஒருவிதம் செய்கிறேன். குறிப்பு: பப்பாளிப் பழத்தில்தான் ஒரு மாதிரி வாசனை வருகிறது. காயில் அதைக் காணமுடியாது.

பப்பாளி பாக்

பப்பாளிக்காய் 1. சர்க்கரை 10 பலம். சாரைப் பருப்பு, பாதம் பருப்பு, பிஸ்தா, முந்திரி முதலியன ஒவ்வொரு பலம். நெய் 2½ பலம். ஏலப்பொடி, குங்குமப் பூ கொஞ்சம். செய்யும் முறை: கொப்பரைத் துருவியில் பப்பாளிக்காயை தோல் சீவித் துருவி வைத்துக் கொள்ளவும். கொதிக்கும் ஜலத்தில் போட்டு ஒரு கொதியல் வந்ததும் இறக்கி வடிகட்டவும். சர்க்கரையைக் கம்பிபாகு செய்து பப்பாளித் துண்டுகளை நன்றாகப் பலங் கொண்டவரைக்கும் பிழிந்து பாகுடன் சேர்த்துக் கிளறவும். இறுகி வரும்போது நெய்விட்டுக் கிளரவும். சுருண்டு வரும்போது ஏலப்பொடி குங்குமப் பூ கலக்கவும். நெய் தடவிய தட்டின்மேல் மைசூர்பாகு கொட்டுவதுபோல் கொட்டி பாதம், பிஸ்தா, முந்திரி, சாரைப் பருப்பு முதலியவைகளை

பொடிப் பொடியாகச் சீவி, 'பாக்' மேல் தூவவும். சர்க்கரையும் தூவலாம். கொஞ்சம் ஆறினதும் பில்லைகள் போடவும், ரொம்ப நாட்களுக்குக் கெடாமலிருக்கும். வாசனை பிடித்தவர்கள், வானிலா, பாதம், ரோஸ் முதலிய எஸென்ஸுகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

பப்பாளி வற்றல்

பப்பாளிக் காயைக் கொத்தவரங்காய் நீளத்திற்கு மெல்லியதாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். ஒரு பெரிய பாத்திரத்தில் காய்த் துண்டுகள் வேக வேண்டிய அளவு ஜலம் வைத்து நன்ருகக் கொதி வந்ததும் உப்பு மஞ்சள்பொடி போட்டு நறுக்கி வைத்திருக்கும் துண்டுகளையும் போட்டு ஒரு கொதி வந்ததும் இறக்கி மூடி வைக்கவும். பத்து நிமிஷத்திற்கெல்லாம் வடிக்கட்டி உலர்த்திவிடவும். இரண்டு காய்ச்சலில் வற்றலாகக் காய்ந்துவிடும். வருஷாந்திர சாமானுக செய்து வைத்துக் கொண்டால் தேவையானபோது எண்ணெயில் பொரிக்கலாம்.

குறிப்பு: உப்புப் போடும் போது காரம் வேண்டுவோர் கொஞ்சம் பச்சை மிளகாய்ப் பொடியைச் சேர்க்கலாம்.

பப்பாளிச் சட்னி

வேண்டுவன: மிளகாய் வற்றல் 10, பெருங்காயம், உளுத்தம் பருப்பு, தேவையைப்போல் பப்பாளிக்காய் 1.

செய்யும் முறை: பப்பாளிக் காயைப் பொடியாக நறுக்கி வேக வைக்கவும். கொஞ்சம் ஆறினதும் நன்ருகப் பிழிந்து வைத்துக் கொள்ளவும். மிளகாய் வற்றல் பெருங்காயம், உளுத்தம் பருப்பு, முதலியவைகளை வறுத்து உப்பு, புளி, வேகவைத்த பப்பாளித் துண்டுகளையும் சேர்த்து கல்லுரலில் சட்னியாக அரைக்கவும்.

பிழிந்த ஜலத்தை ரஸத்தில் விட்டால் ரஸம் மணமாக இருக்கும்.

சாம்பார், பொரித்தக் குழம்பு, கூட்டு, கறி, மோர்க்குழம்பு என பல வகைகளில் பப்பாளியை உபயோகிக்கலாம்.

தனி நபரின் நோயைப் போன்றதுதான் ஒரு நாட்டின் அடிமை நோயும் நோயைத் தீர்க்கக் கடுமையான சிகிச்சையை மேற்கொள்ளுவதைப் போலவேதான் நாட்டின் அடிமை நோயைத் தீர்க்க கடுமையான போராட்ட முறைகள் அவசியமாகிறது.

அழகு

●

நாகலக்ஷ்மி

அன்றைக்குக் குன்னத்தூர் பெரியபண்ணையார் வீட்டிலே விருந்து. பண்ணையாரின் பேரக் குழந்தைக்கு அன்றைத் தினம் ஆண்டு நிறைவு. அதற்கு அத்தையும் கூடப் புறப்பட்டு விட்டாள். அவள் ஒரு கர்நாடக மனுஷி. ஆகவே அவளை அழைத்துக் கொண்டு நாகரிக மங்கையர் கூடியிருக்கும் இடத்துக்குப் போவதற்கு எனக்கு வெட்கம். முதலில் அவளை என் அத்தை என்று உறவு கூறிக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக, அவள் சந்தர்ப்பம் தெரியாமல் ஏதாவது பட்டவர்த்தனமாகச் சொல்லிவிடுவாள் என்ற பயம். அன்றைக்கும் இப்படித்தான் நடந்து விட்டது.

இவ்வளவு வைபவத்துக்கும் பிரதானமாய் இருந்த பண்ணையார் மாட்டுப் பெண் அன்றைத் தினம் தன்னை ரொம்ப அழகாக நவீன நாகரிக முறையில் அலங்கரித்துக் கொண்டிருந்தாள். அதை அவள் செய்து முடித்துக் கொள்வதற்கே குறைந்தது இரண்டு மணி நேரமாவது கழிந்திருக்கும்.

"இதென்னடி இவளைப் பார்த்தா சின்னக்குட்டி மாதிரி இருக்கு!" என்று என் அத்தை மிகுந்த வியப்புடன் கூறினாள். பேசாமல் வாயை மூடிக் கொண்டு இருக்குமாறு நான் அவளை எவ்வளவோ கேட்டுக் கொண்டேன். ஆயினும் அவள் சும்மா இருக்கவில்லை.

உண்மையிலே அன்றைக்குப் பிரபாவதி பதினைந்து வயசுச் சிறுமியாகவே தோற்றம் அளித்தாள். அவள் வயசிலே பத்து வருஷத்தைக் குறைத்துக் காண்பித்தது அவள் செய்து கொண்டிருந்த செயற்கை அழகு.

கண்ணைக் கொட்டாமலும் திறந்த வாயை மூடாமலும் பிரபாவதியையே பார்த்து நின்றாள் என் அத்தை. "இதென்னடி கோலம்?" என்ற வார்த்தைகள் அவளையும் அறியாமல் அத்தையின் வாயிலிருந்து கிளம்பி விட்டன. "என்னடாப்பான்னு பார்த்தேன். எல்லாம் தூரத்துப் பச்சைதான். கிட்ட வந்து பார்த்தா சாயம் வெளுத்துப் போயிடும்" என்றாள் வெறுப்புத் தோன்றும் குரலில்.

எனக்குத் தலை கிறக்கமாகி விட்டது, அத்தையை எதற்காக அழைத்துக் கொண்டு வந்தோம் என்று. ஆயினும், பிரபாவதி அலங்காரமும் அப்படித்தான் இருந்தது.

அவள் முகத்துக்குப் பவுடர் பூசி உதட்டுக்கு ரத்தம் போல 'லிப் ஸ்டிக்' தீட்டியிருந்தாள். கண்ணுக்கு மையிட்டுக் கொள்ளவில்லை. ஆனால் மையினால் புருவத்தை நன்றாக வளைத்து மெல்லியதாகவும் தீர்க்கமாகவும் எழுதியிருந்தாள். கை கால் நகங்களில் கோவைப்பழம் போன்ற நகப்பூச்சுப் பூசி, கூடவே காலில் பாதத்தைச் சுற்றிக் குங்குமச் சிவப்பில் வேறு பட்டையாகப் பூசியிருந்தாள். இந்த அலங்காரங்களை நெருங்கிப் பார்த்த போது அவள் ஏதோ நாடகத்துக்கு வேஷம் போட்டுக் கொண்டது போலவே தோன்றியது.

"பிரபா, நான் சொல்றேன்னு கோவிச்சுக்காதே. இந்த அலங்கார மெல்லாம் நன்றாயில்லை. கண் நிறைய மையையிட்டு வாய் நிறை வெத்திலை போட்டுக் கை

கால்களில் பட்டாட்டமாப் பட்டு மருதாணி இட்டுண்டா எவ்வளவு நன்னு இருக்கும். சுகத்துக்கும் சுகம், அழகுக்கும் அழகு. அதை விட்டுவிட்டு ஏன் இப்படிக் காசைக் கரியாக்கி உடம்பையும் கெடுத்துக்கறே?" என்று கேட்டாள் அத்தை பிரபாவதி ஒன்றும் பேசவில்லை. அவளுக்கு முகம் சுண்டிப்போய் விட்டது. எனக்கும் எரிச்சலாக வந்தது.

"விஷயம் தெரியாதே இப்படிப் பேசாதே, அத்தே. காலத்துக்குத் தக்கபடி இருக்கணும்." என்று ஏதோ ஒரு விதமாக அத்தையின் வாயை அடக்கி, பிரபாவதியைப் சாந்தப் படுத்த முயன்றேன்.

ஆனால் அதற்கு எனக்கு ஏற்ற சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இதற்குள்ளாக, "அத்தையை ஏன் சும்மா வாயடிக்கிறே?" என்று கேட்டுக் கொண்டே ஜானகி அவ்விடம் வந்து விட்டாள்.

ஜானகி பண்ணையாரின் மகள். அவள் நன்ருகப் படித்தவள் தான் எனினும், நாகரிகப் போக்கையே அறியாதவள். அவள் பக்கத்துக் கிராமத்திலே வாழ்க்கைப்பட்டு, மாமியார் வீட்டோடு தங்கி விட்டாள். அவள் புருஷன் வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல், தன் பண்ணை நிலத்தைக் கவனித்துக் கொண்டு பயிர்த் தொழிலில் இறங்கி விட்டான்.

ஜானகி வந்தது என் அத்தைக்குப் பக்க பலமாக அமைந்தது. "நான் சொல்றது உனக்கு இதமாத் தோணுது; குத்தமாகத் தான் தோணும். இதோ இயற்கையாக இருக்கும் ஜானகியையும் பார். உனக்கே தெரியும்" என்ருள் அத்தை.

ஜானகி தன் மதனியைப் போல் எந்த விதமான செயற்கையலங்காரமும் செய்து கொள்ளவில்லை. அது தேவையும் இல்லை. அவள் நல்ல அழகு. மஞ்சளை நன்ருக அரைத்துப் பூசிக் குளித்திருந்தாள். அது அவள் மேனிக்குத் தனியாக ஒரு பளபளப்பையும் சோபையையும் கொடுத்திருந்தது. எந்த விதமான பவுடர் பூச்சும் அவளுக்கு வேண்டியதில்லை. நாட்டுப்புறத்து வாழ்க்கையால் நல்ல புஷ்டி வாய்ந்திருந்த அவள் கன்னங்கள் இயற்கையாகவே சிவந்திருந்தன.

நல்ல ரத்தம் கொண்ட அவள் உதடு தானுகவே சிவந்திருந்தது. கூட வெற்றிலைக் காவியும் ஏறியிருந்தது. அவளுக்கு 'லிப்ஸ்டிக்' எதற்காக? ஆண்டு நிறைவுக் கல்யாணத்தை உத்தேசித்து அவள் தன் கை கால்களுக்கு மருதாணி வேறு பூசிக்கொண்டிருந்தாள். அது அவளுக்கு ரொம்ப அழகாக இருந்தது.

செயற்கை யலங்காரம் தூரத்திலிருந்து பார்ப்பதற்கும், போட்டோ படம் பிடிப்பதற்குமே ஏற்றது. பக்கத்தில் வந்துவிட்டால், பார்ப்பதற்குப் பரம விகாரமாக இருக்கும்.

"நல்ல பொண்ணுகளடி அம்மா!" என்று அத்தை அலுத்துக்கொண்டாள்.

இனிமேல் அவ்விடம் இருக்கக் கூடாது என்று அத்தையை அழைத்துக்கொண்டு வீடு திரும்பிவிட்டேன். வழி நெடுக அவள் வாய்சும்மா இருக்கவில்லை. நவீன ஆடை யலங்காரத்தைப் பற்றி அவள் ஏதேதோ கூறிக் கொண்டே வந்தாள். அவற்றை மற்ருெரு முறை கூறுகிறேன்.

மாமியார்களிலே எத்தனையோ ரகம். நாட்டுப் பெண்களிலும் இப்படித்தான்! ஆனால் சொப்பனத்திலே 'ரேடியோ' மாதிரி பேசிக் கொண்டே யிருக்கும்......

மாமியார்

●

டி. எஸ். ரங்கதேவி

இந்த மாமியார்களைப் போன்ற அல்ப சந்தோஷிகளை நான் பார்த்ததேயில்லை. ஒரு நாளைக்குப் புடவையைத் தோய்த்துப் போட்டுவிட்டால், பத்து நாட்களுக்கு நமது தாதியைப்போல் சேவை செய்வார்கள்!

கொட்டுகிற மழையிலும் விடியற்காலை ஐந்து மணிக்கே எழுந்திருந்து காப்பிப் போட்டு, எனக்கும் வெந்நீர் போட்டு வைத்த பிறகுதான் சமையல் உள்ளே சாமான்களைச் சப்தப்பட வைப்பார். வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து ஓடிப்போய் பல் தேய்த்து காப்பிக் குடித்துவிட்டு ஒய்யாரமாக என் கணவனுக்கு 'பெட் காபி' (படுக்கையிலேயே குடிக்கும் காபி) எடுத்துக் கொண்டு போவேன். குழந்தைகளை எழுப்பி, குளிப்பாட்டி, உடுப்பு அணிய வைப்பதற்குள் சாப்பாடு தயாராகிக் குழந்தைகளுக்கு 'டிபனும்' கட்டிவைத்து விடுவார்.

இரண்டணாவை எடுத்துக் கொண்டு ஓடுவார். கையில் ஒரு சிறிய பாத்திரமும் இருக்கும். என்னவோ வென்று காத்திருந்து பார்த்தால் பக்கத்து ரூமில் குடியிருக்கும் பெண்ணுக்குப் பால் வாங்கிக்கொண்டு வந்திருப்பார். பரோபகாரச் சிந்தை ரொம்ப உண்டு. ஆனால்— அவரால் முடியாத போது ஏதாகிலும் வாங்கி வரச் சொல்லிப் பாருங்கள். ரேடியோதான்! மின்சார சக்தி வேண்டாம். ஆகாசக் கம்பிகள் வேண்டாம். அதற்கெனப் பிரத்தியேகமான இடமும், பெட்டியும் வேண்டாம். விசையை அழுத்தினால் ஓய்ந்து விடுகிறதே அதைப்போல இல்லை. பேச ஆரம்பித்தால் பேசிக் கொண்டே இருக்கும். நாமும் கொஞ்சம் ஏதாகிலும் சொன்னமோ அவ்வளவுதான். அனர்த்தம். இரவில் சொப்பனத்தில் கூடப் பிதற்றுவார்.

"உன்னைப் பிள்ளையாய் பெற்றெடுத்துச் சீராட்டி வளர்த்து உனக்குக் கல்யாணமும் செய்து வைத்தேனே? இந்த மாதிரி பேச்சுக் கேட்கத்தாண்டா? அரிசி இல்லை. பருப்பு இல்லை. ஈர விறகு என்று ஒரு விஷயத்தை உன் பெண்டாட்டியிடம் காட்டியிருப்பேனடா? எள்ளு என்பதற்குள் எண்ணெயாய் நின்றதற்கு பலனைப் பார்த்தாயாடா? பிறந்த அகத்தி லிருந்து இவள் அக்கா வந்து விட்டாளாம். அதற்காக என்னை இந்தக் காய்கிற வெய்யிலிலே போய் அரிசியும் உடைத்துக் கொண்டு, வரும் வழியிலே பாலும் வாங்கிண்டு வாங்கோ என்று அதிகாரம் செய்தாளடா? நான் என்ன அடுக்குள்ளுப் பூச்சியா? நான் என் பெரிய பிள்ளை வீட்டுக்கோ அல்லது என் தம்பி வீட்டுக்கோ போனேன்னா ராஜாத்தியாய் வைத்துக் கொள்வார்களே. எனக்குப் போக இடமில்லையென்று இவள் என்னை இப்படி நடத்தினாள்," இத்தியாதி சமாசாரங்கள்தான். கொஞ்சம் நல்ல சமய மறிந்து நடந்து கொள்வோமேயானால் பிரிட்டிஷார் ராஜ்யம் ஜயித்தாப்போலேதான். இல்லாவிட்டால் ஹீரோஷிமா பட்ட பாடுதான் குடும்பமும்!

'மதியூகி'ப் பத்திரிகை ஆசிரியர் நல்ல வேளை பார்த்து 'வாசகர்களுக்கு யோசனைகள்' பகுதி ஆரம்பித் திருந்தாரானல் இப்பேர்ப்பட்ட மனக் குழப்பமூட்டும் ஒரு கடிதத்தை எதிர் பார்க்க முடியுமாவென்று வேருெரு 'மங்கை' கேட்கிருள்...........

யோசனை சொல்வீர்களா?

●

[ஒரு மங்கை]

'மதியூகி'ப் பத்திராசிரியரின் மேஜை மேல் ஒரு பெரிய கடிதக் குவியல் இருந்தது. அவற்றில் எல்லாவற்றிற்கும் மேலாக இருந்த கடிதத்தை எடுத்துப் படித்ததும், அவரது அகன்ற நெற்றியில் பல சுருக்கங்கள் ஏற்பட்டன. அதை மீண்டும் ஒரு முறை படித்ததும், சுருக்கங்கள் ஆழமாய்ப் பதிந்தன. மற்றக் கடிதங்களைப் படிக்காமல் அதையே உற்றுப் பார்த்துக் கொண்டு தீர்க்கமான ஆலோசனையில் அமர்ந் திருந்தார். மிகுந்த புத்தி நுட்பமும், உலக வியவகாரங்களில் நீண்ட அநுபவமும் உள்ள 'மதியூகி' ஆசிரியரைத் திகைக்கவைத்த கடிதத்தின் நகல் பின்வருமாறு:—

ஐயா!

நடுக்கடலில் திசை தப்பி அலையும் மாலுமிக்குக் கலங்கரை விளக்குப் போல, குழப்பத்தில் மிதந்து கிடந்த என் மனதுக்குத் தங்கள் பத்திரிகையின் "வாசகர்களுக்கு யோசனைகள்" என்ற பகுதி தோன்றிற்று. எனது சங்கடமான நிலைமையை விளக்கித் தங்களுக்கு எழுதி இருக்கிறேன். நெருக்கடி முற்றி விடுவதற்கு முன் தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

முந்தாநாள் இரவு 9½ மணிக்கு என கதவு பலமாகத் தட்டப்பட்டது. இந்த நிசியில் என்னை அவசரமாகப் பார்க்க வந்தவர் யார் என்று அறிய, படித்துக் கொண்டிருந்த 'தீபாவளி மலரை'க் கீழே வைத்துவிட்டு கதவைத் திறந்தேன். இருட்டடிக்கப் பட்டிருந்த மங்கிய வெளிச்சத்தில் காக்கி உடையணிந்திருந்த ஒரு உருவத்தைக் கண்டு இரண்டடி பின் நடந்தேன். 'விரு விரு'வென்று உள் நுழைந்த ஆசாமியை வெளிச்சத்தில் பார்த்ததும், என் ஆச்சரியத்தை என்னவென்று சொல்லுவேன்! முதலில் ஏதாவது பேய்தான் வந்து நடமாடுகிறதோ என்று கூடப் பயந்தேன்.

மாதவராவ் என்னுடன் காலேஜில் படித்துக்கொண்டிருந்த நண்பன். அவன் கலியாணம் செய்துகொண்ட முறையே அலாதி. காலேஜில் படித்துக் கொண்டிருந்த போது யாராவது 'காதல்' என்ற பேச்சை எடுத்தவுடன் சண்டைக்கு வந்து விடுவான். "காதலாவது கத்தரிக்காயாவது, எல்லாம் கவிகளுடைய மனதில் உற்பத்தியாகி, அவர்களுடைய காவியங்களில் மடிந்துவிடும் கற்பனைகள். நிஜ உலகில் காதல் என்ருல் பெண்களின் பகட்டு என்றுதான் அர்த்தம். காதல் ஆத்மாக்களைப் பிணைக்கின்றது என்று வர்ணிக்கிருர்களே; ஆத்மாக்களுக்கு அழகிய கண்கள் உண்டா? செவ்விய

இதழ்கள் உண்டா? பின் ஏன் அழகிய கண்களையும், செவ்விய இதழ்களையும் கண்டு காமுறு கிருர்கள்? எல்லாம் பகட்டு, வெளிவேஷம்; வாலறுந்த நரியைப் போல மேனி யழகைக் கண்டு மயங்கிப் பெண்களின் மாயவலையில் அகப்பட்டுக் கொண்டவர்கள் மற்றவர்களையும் தங்களுடன் சேர்த்துக் கொள்வதற்காகத் தங்களையும் அறியாமல் செய்யும் சூழ்ச்சிகள் தான் 'காதல்' என்பது. வெறும் காம இச்சைக்கு இவ்வளவு முதன்மை கொடுப்பது பிரிட்டிஷார்கள் இந்தியாவின் சுதந்திரத்திற்கு வகுப்புப் பேதம் கூடாதென்று சொல்வது போலத் தான்—''

என்று அரசியல், பூதபௌதிக சாஸ்திரங்கள் முதலியவைகளையும் சேர்த்துக் குழப்பி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து விடுவான்.

இத்தகைய ஒருவன் சுகுணாவைக் கண்ட ஒரு வாரத்திற்குள் காதல் முற்றிக் கலியாணம் செய்து கொண்டானென்ருல் அது ஒரு அலாதிச் சம்பவமல்லவா?

அவர்களுடைய மண வாழ்க்கையைக் குறை கூற முடியாது. நானும் அடிக்கடிப் போயிருக்கிறேன். ஒரு கூட்டில் வாழும் இரு புருக்களைப் போல மெத்தைமேல் ஒரு சிறிய இடத்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டு சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். மாதவராவ் ரயில்வேயில் அறுபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் இருந்தான். நல்ல தேகக் கட்டு உள்ளவன். காலேஜ் 'யூனிவர்ஸிடி'யில் நல்ல பெயரெடுத்தவன். யுத்தம் மூண்டதும், அவன் யுத்தத்தில் சேர விரும்பியது ஒருவருக்கும் புதிதாய்த் தோன்றவில்லை. பாவம்! சுகுணாதான் கண்ணும் கண்ணீருமாக இருந்தாள். உயிருக்கு ஆபத்தில்லாத இடமென்றும், சாவு என்பது நமது சங்கற்பத்தில் இல்லை. என்றும் விதியிருந்தால் எங்கிருந்தபோதிலும் தப்ப முடியாதென்றும், பரீக்ஷித்து ராஜன் எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தும் விதியை மீற முடியவில்லையென்றும், பலவாறு வேதாந்தம் பேசி அவளைச் சமாதானப் படுத்தினேம். இப்படியெல்லாம் நேருமென்று யார் கண்டார்கள்?

ஜூன் மாதத்திலோ, ஜூலை மாதத்திலோ எனக்குச் சரியாகக் கவனம் இல்லை. சுகுணாவுக்கு ஒரு தந்தி வந்தது. அதில் அவள் கணவன் இறந்து போய்விட்டதாகக் கண்டிருந்தது. அவள் துயரத்தை வர்ணிக்க, ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷன், என் சினிமா டைரக்டர்களால் கூட—முடியாது என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்! எப்படியோ இரண்டு மாதங்கள் சென்றன.

நாகபூஷணம் எப்படிச் சுகுணாவைச் சந்தித்தான்! என்றைக்கு அவர்கள் காதல் வார்த்தைகள் பேசினர்கள்? என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒரு நாள் பத்திரிகையில் ஜமீந்தார் நாகபூஷணத்திற்கும், சுகுணாவுக்கும் பல நண்பர்கள் கலியாணம் முன்னிலையில் நடந்ததென்றும், வரிசைகள் வழங்கிய நண்பர்களுக்குப்பிரத்தியேகமாக இந்தக் காகிதப் பஞ்ச காலத்தில் எழுதுவதற்கு முடியாததற்கு வருந்துவதாகவும், பத்திரிகை வாயிலாகத் தங்கள் வந்தனங்களைப் பெற்றுக் கொள்ளும் படிக்கும் ஒரு

விளம்பரம், புகைப்பட சகிதம் வெளியாயிருக்கிறது.

இதில் விபரீதம் ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை.

இத்தனை நாள் கழித்து இதோ என் அறையில் என் நண்பன் துடித்துக்கொண்டு இருக்கிறான. கூண்டில் அடைப்பட்ட வேங்கை போல முன்னும் பின்னும் ஓய்ச்சலின்றி அலைகிறான். அவனுக்கு நான் என்ன ஆறுதல் சொல்லக் கூடும்?

ஒரு கணம் தன் (மனைவியாக இருந்தவளை) மனைவியைக் கொலை செய்யாமல் விடுவதில்லை என்று உறுமுகிறான். மறு நிமிஷம், "வஞ்சகன் நாக பூஷணம், பசப்பு வார்த்தைகளால் சுகுணாவின் மனதைக் கலைத்திருக்கிறான். அவனைச் சுட்டுத் தள்ளி விடுகிறேன்." என்று கதவைத் திறந்து கொண்டு ஓடுகிறான். இதோ இப்பொழுது என் கண் முன்னிலையிலேயே தற்கொலை செய்துகொள்ளத் துப்பாக்கியால் தன் மூளைக்குக் குறி பார்க்கிறான்.

எனக்கொன்றும் தோன்றவில்லை. மதியூகியாகிய தாங்கள் எனக்கு ஏதாவது யோசனை சொல்வீர்களா?

தங்கள் பதிலைச் சீக்கிரத்தில் எதிர்பார்க்கும்

மு. ரா.

இந்தக் கடிதத்தைப் பலமுறை படித்த பிறகும் மதியூகி ஆசிரியர் ஏற்கனவே உள்ள மனக் குழப்பத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டார் என்று நிச்சயமாய்க் கூறமுடியாது!

✲

அந்த ரகம்!

சாதாரணமான ஒரு காரியத்தை வெகு சுலபமாகச் செய்து விட்டாலுங்கூட தான் ஏதோ பெரிய காரியத்தை மிகச் சிரமப்பட்டுச் செய்துவிட்டதாகவே சிலர் எண்ணுகின்றனர். தவிரவும் தங்கள் காரிய சாதனையைப் பிறர் போற்றிப் பேசவேண்டுமென்றும் அவர்கள் எதிர் பார்க்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பிரமாதமான காரிய மெதையும் நினைக்கவும் சக்தியற்றவர்கள். அரைகுறை அரசியல் வாதிகளும், பிறர் உழைப்பால் சுகம் பெறுபவர்களும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களாவர்!

சுயமரியாதை

வேலன் ஒரு ரிக்ஷாக்காரன்.

நான் ரிக்ஷாவில் ஏறுதவள்.

ஒருநாள் வேலனுக்குக் கூலி கிடைக்கவில்லை. அன்று அவன் குடும்பம் பட்டினி கிடக்க நேரும்.

வேலன் பரிதாபமான பார்வையோடு என்னைக் கண்டதும் தன் ரிக்ஷா மெத்தையை நிமிர்த்தித் தட்டினான்.

"ஏறுங்கோ அம்மா" என்றான்.

"நான் ரிக்ஷாவில் ஏறுவதில்லையப்பா" என்றேன்.

"இன்னிக்குக் கூலியே கிடைக்கலையம்மா" என்றான்.

"இந்தா இந்த ரெண்டணாவை எடுத்துக்கோ" என்று நீட்டினேன்.

"அம்மா, நான் பிச்சை எடுக்கிறதில்லை" என்று சொல்லிக் கொண்டு ரிக்ஷா மெத்தையைக் கவிழ்த்துப் போட்டுவிட்டு வேறு யாராவது வருவார்களா என்று பார்க்க மறுபுறம் திரும்பிக் கொண்டான்.

மனிதப் பிறவிகளிலே சில விசித்திர முண்டு. விஸ்வம் அதில் ஒரு ரகம்.

செல்லக் 'குழந்தை'

●

பாப்பா

"விசுவம்! நீ ஏனப்பா 'பம்ப' டிக்கிறே?...... ஏ பாஞ்சாலி! கொழந்தை 'பம்ப'டிக்கிறன் நீ என்னடி பார்த்துண்டு நிக்கறே! துடைப்பத்தைப் போட்டுட்டுப் 'பம்ப'டிடி."

காவேரிப் பாட்டி தன் பிள்ளையின் கை தேய்ந்துவிடப் போகிறதே என்று, வேலைக்காரியைக் கடிந்துகொள்ளுகிற காட்சி இது. பாஞ்சாலிக்கு இரண்டு குறையப் பத்து வயதாகிறது. 'குழந்தை' விஸ்வத்துக்கு (முப்பத்தி) நாலு நிரம்பி, ஐந்தாம் வயது நடக்கிறது! இவன் வேலை செய்ய, அவள் சும்மா நிற்க, பாட்டி எப்படிச் சகிப்பாள்? அவள் கண்ணை உறுத்தாதா?

"ஏனம்மா! நான்தான் தண்ணீர் நிரப்பிக்கொண்டு குளிக்கிறேனே? காலையிலெழுந்து 'பம்பை முன்னும் பின்னும் அசைப்பதால், உடம்புக்குப் பலம் வரும், அம்மா!" என்றான் விசுவம். உடல் பயிற்சியின் அவசியத்தைக் குறித்து, அரை மணி நேரம் அவன் பிரசங்கம் செய்யலாம். ஆனால் காவேரிப் பாட்டிக்குத் தன் செல்லக் குழந்தை ஒரு துரும்பை யெடுத்து அப்பால் போடுவதுகூடச் சகிக்காது. தள்ளாத வயதில் (65-க்கு மேலாகிறது) தானே தான் கடைக்குப் போய் வருவாள். "ஏன் பாட்டி! உங்கள் பிள்ளை கடைக்குப் போய் வரக்கூடாதா?" என்று யாராவது கேட்டுவிட்டால் போதும். "உங்களுக்கென்ன பேசுவதற்கு? பகலெல்லாம் வெள்ளைக்காரனிடம் கைகட்டிச் சேவகம் செய்துவிட்டு அலுத்து அசந்து வீட்டுக்கு வந்ததும் வராததுமாய், 'உப்பில்லை' 'புளியில்லை' என்று வறுத்துக்கொட்ட வேணுமா! என்னமோ பாவம்! உழைத்துக் கொண்டு வந்து கொட்டுகிறனே! அது போதாதா? எனக்கென்ன கேடு! கழுதையைப் போலப் போய்ப் போய் வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று சரமாரியாகப் பொழிய ஆரம்பித்து விடுவாள். இது வீட்டிலே.

விசுவத்திற்கு, ஆபீசில் தினசரி நான்கு மணிக்கு மேல் வேலை கிடையாது. ஆனால், காலை ஆறு மணி முதல் இரவு பதினொரு மணி வரையில் அவனுக்கு ஓய்ச்சல் ஒழிவு கிடையாது. உட்காரக் கூட நேரமிராது. அவ்வளவு வேலை! அடுத்த தெரு யக்ஞேசுவர அய்யரின் பிள்ளையைக் காலேஜில் சேர்க்க வேண்டுமா? உடனே விசுவம் கிளம்பிவிடுவான். பட்டணத்தில் இருக்கும் அத்தனை கல்லூரிகளுக்கும் ஒவ்வொன்றாய் அலைந்து இடம் சம்பாதிக்க முயல்வதிலே தினசரி ஆறு மணி விகிதம் ஒரு வாரத்தைக் கழிப்பான். டாக்டர் சியாமளாவின் தங்கை ஹைதராபாத்திலிருந்து உடம்பு அசௌக்கியமாய் வந்திருப்பதால், அவளைத் தகுந்த ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காகப் பல டாக்டர் நண்

பர்களிடம் சிபார்சு தேடி அலைவதில், தினசரி மூன்று மணி விகிதம், நான்கு நாள் திரும். நாராயணசாமி ஐயங்காரின் பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் சல்லிசாக வாங்கிக் கொடுப்பதற்காகப் புத்தகக் கடைகளுக்கு அலைவதில் தினசரி ஒரு மணி விகிதம் ஐந்து நாட்கள் கழியும். இதெல்லாம் அவன் தாயாருக்குத் தெரியாது. தெரிந்தால்,வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்று அவனுக்குக் கண்டிப்பான உத்தரவு போட்டுவிடுவாள்.

விசுவத்திற்கு, பிச்சைக்காரனென்றால் பிடிக்காது. "நான் மாத்திரம் ஹிட்லரா யிருந்தால், இந்தப் பிச்சைக்காரர்களை யெல்லாம் முதலில் சுட்டுத் தள்ளிவிடுவேன்," என்று சௌரியம் பேசுவான். "இவர்களுக்கு உயிர் வாழ என்ன உரிமை இருக்கிறது? நல்ல திடகாத்திரர்களான உழைப்பாளிகளின் ஊதியத்தை, தர்மத்தின் பெயரால் இவர்கள் உறிஞ்சிவிட்டு, அவர்களை அரைப் பட்டினி யாக்குகிறார்கள். இவர்களால் மனித சமூகத்துக்கு என்ன உபயோகம்? இந்த வாழ்வுக்குப் பிறகு சொர்க்கம் என்று ஒன்றிருந்தால், அப்பொழுது இந்தப் புண்ணியம் அங்கே வந்து தலை காக்குமாம்! இந்த 'இழவு' வேதாந்தத்தால்தான், நம் நாடு இத்தகைய சீர்கேடானநிலைமையிலிருக்கிறது. பிச்சைக்காரர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சோம்பேறிகள். இவர்களைச் சவுக்கடி கொடுத்து, வேலை செய்ய வைக்கவேண்டும். கையாலாகாத இதர முடங்களோ, இருந்தும் பயனில்லை. தாங்கள் நோய்வாய்ப்பட்டோ, அங்கவீனர்களாகவோ கஷ்டப்படுவது போதாமல், காண்போர் மனதை வருத்தும் கோலத்துடன் எங்கே பார்த்தாலும் இவர்கள் காட்சியளிக்கிறார்கள். நாகரீகம் என்பதை என்னவென்று உணர்ந்த எந்தத் துரைத்தனமும் இந்தக் கண்ணராவிக்கு இடம் கொடாது"—இப்படி அரை மணி நேரம் 'பிலு பிலு'வென்று பொரிந்துவிடுவான்.

ஆனால், இந்தப் பிரசங்கத்தை ஒருவாறு நிறுத்திவிட்டோ, முடித்துவிட்டோ அவன் வெளியே போகும்போது, அவனுக்குப் பின்னே சென்றுபாருங்கள். வழியிலே ஏதாவது ஒரு பிச்சைக்காரனைக் கண்டவுடனே, போலீஸ் சேவகனைக் கண்ட கள்ளனைப்போல விசுவம் 'திரு திரு' என்று விழித்துக் கொண்டு, சுற்று முற்றும் நோக்குவான். தான் உங்களைக் காணவிட்டால், உடனே அவனது கை சட்டைப் பைக்குள் மறையும். மறு கணம் காலணவோ, அரை ரூபாயோ எந்த நாணயம அவன் கையில் சிக்கிற்றோ, அது பிச்சைக்காரன் வசம் போய்ச் சேரும். அதன் பிறகு, தேள் கொட்டிய திருடனைப்போல் அந்த இடத்திலிருந்து அவசர அவசரமாக விசுவம் ஓடிவிடுவான். அவன் இந்த 'அக்கிர'மத்தைச் செய்யும் போது ஒரு சமயம் நீங்கள் அவனைப் பிடித்து விட்டீர்களானல், 'ஆடு திருடிய குறவனைப் போல விழிப்பான்.

பிறகு ஒரு அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "இந்தப் பிச்சைக்காரனெல்லாம் அயோக்கியன்கள். வேணுமென்றே போகிற வழியில் பணத்தை இறைத்து வைப்பான்கள். நாம் ஏதோ 'பாவம்' என்று பணத்தை எடுத்து

அவன்களிடம் கொடுத்தால், நம்முடைய ஔதாரியத்தைப் பார்த்து, பின்னால் வருகிறவர்கள் தங்களைப் பிசினாறிகள் என்று பிச்சைக்காரன்கள் எண்ணிவிடப் போகிறார்களே என்று பயந்து ஏதாவது காலணாப் போடுவார்கள். ஆனால் இந்தப் 'பாச்சா' என்னிடம் பலிக்குமா? நான் அவனுடைய பணத்தையே எடுத்து அவனுக்குத் தானம் பண்ணிவிட்டேன்'' என்று இம்மாதிரி ஏதாவது உளறல் 'சமாதானம்' சொல்லுவான். சாதாரணமாக, அவனது குணம் எல்லோருக்கும் தெரியுமாகையால், யாரும் இந்தச் சமாதானத்தை ஊன்றிப் பார்த்து, இதன் குற்றங் குறைகளை ஆராய்ந்ததில்லை. காலணாக் கொடுத்துவிட்டு, கோடி கொடுத்ததுபோல் பாசாங்கு செய்வோர் நிறைந்த இந்நாளில், விசுவம் ஒரு அதிசயப் பிரகிருதிதானே?

பாவம்! அவன் மனதை அநேகர் அறியவில்லை. ஒவ்வொரு சமயத்தில் அசம்பாவிதமாக அகப்பட்டுக்கொண்டு விழிப்பான். வீட்டில் குடித்தனக்கார அம்மாமியின் நாட்டுப் பெண் கர்ப்பிணி. கதை கேட்பதற்காக, விசுவத்தின் தாயாரும், அம்மாமியும் கோவிலுக்குப் போயிருந்தார்கள். அகஸ்மாத்தாக வீட்டுக்கு வந்த விசுவம், எட்டு மாத நிறை கர்ப்பிணி, மிளகாய் இடிப்பதைக் கண்டு சகிக்காமல், அந்தப் பெண்ணிடமிருந்துப் பலவந்தமாக மிளகாயை வாங்கிக் கொண்டுபோய், மில்லில் அரைத்துக்கொண்டு வந்தான். இதற்குள் கதையிலிருந்து திரும்பி வந்த மாமியார் அளந்த வசைச் சொல்லுக்கு அளவே யில்லை. சாயங்காலம் தன் பிள்ளை வந்ததும், நேர்ந்த சம்பவத்தைப்பற்றி எங்கெங்கே கூட்ட வேண்டுமோ அங்கங்கே கூட்டியும், எங்கெங்கே குறைக்க வேண்டுமோ அங்கங்கே மழுப்பியும், சவிஸ்தாரமாகச் சொல்லி, தூபமும் போட்டுவிட்டாள். இதைக் கேட்ட அந்த முரடனுக்குப் பிரமாத ஆவேசம வந்துவிட்டது. விசுவத்தின் சரீரத்திலிருக்கும் எலும்புகளையெல்லாம் ஆராய்ந்து எண்ணிப் பார்க்கப் போவதாக, அவன் வேறே பெரிய கூச்சலிட்டான். மறுநாள் அந்தக் குடித்தனம் காலியாயிற்று.

வீட்டில் விரலசைக்காத பிள்ளை ஊருக்கெல்லாம் உழைப்பது ஒரு விந்தையல்லவா?

✲

ஜாக்கிரதை

1. சதா காலமும் ஏதாவது பேசிக்கொண்டிருக்கும் வாயாடி.

2. கபடமுள்ள மனிதன்.

3. துளஸிதளத்தைக் காதிலே சொருகிக்கொண்டு தன் பக்தியை விளம்பரப்படுத்தும் மனிதன்.

4. நீளமாய் முக்காடு போட்டு மூகத்தை மூடிக் கொண்டிருக்கும் ஸ்திரீ.

5. புல் பூண்டுகள் வளர்ந்து கவிந்திருக்கும் தேக்கமான குட்டையில் உள்ள தேகாரோக்கியத்துக்கு முற்றிலும் கேடான குளிர்ந்த ஜலம்.

—ஸ்ரீ. ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

ஔவைப் பாட்டி ஒரு பாட்டுப் பாடியிருக்கிறாளாம். 'இல்லான் இல்லாளிடம்' மன்றாடியதைப்பற்றி. ஆனால், 'ரேஷன்' சமாசாரத்துக்கும் அந்தப் பாடலுக்கும் சம்பந்தமேற்படுத்துவது நூதனமாயில்லையா!

இல்லாள்

●

ஸ்ரீமதி. ராதா சகி

இல் என்றால் வீடு. அந்த வீட்டிலிருக்கும் ஆள் எனப்பொருள்பட இல்+ஆள்=இல்லாள் என்று வந்திருக்கலாமோ என்னவோ, பண்டிதர்களைக் கேட்க வேண்டும். ஆனால் எனக்கு இல்லாள் என்னும் பதம் இவ்வாறு ஏற்பட்டிருக்கும்என்று தோன்றவில்லை. சுமார் இருபதாண்டுகளுக்குப் பிறகு நமது சந்ததிகளுடைய அகராதிகளில் இல்லாள் என்னும் பதத்தை இல்(லை) + ஆள்=இல்லாள் என்று சந்தி பிரித்து இல்லை யென்று சொல்லும் ஆள் என்று அர்த்தம் போட்டிருந்தால் அது பிழையாகாது என்று சொல்லத்தான் இந்தக் கட்டுரை வரைகிறேன்.

அடுத்தாத்துச் சுப்பிப் பாட்டி பலகாரத்துக்காக ஆழாக்கு உளுத்தம் பருப்பு வேண்டுமென்று இரவல் கேட்க வருகிறாள். என் தாயாராகிய இல்லாள் பாட்டியிடம் உளுத்தம் பருப்பு என்ற பதம்கூட வீட்டிலில்லை என்கிறாள். சினிமாவுக்குப் போக மெத்தையிலிருந்து மீனாட்சி ஒன்பதணா கடன் கேட்கிறாள். அதற்கும் அம்மா சொல்வது "இல்லை" தான். ஊரிலிருந்து மன்னி வந்திருக்கிறவள் "உங்கள் பிள்ளைக்கு வெல்லக் காப்பி பிடிக்கவில்லையம்மா, இரண்டு வீசை சர்க்கரை கொடுங்கள்" என்று கெஞ்சுகிறாள். அவளுக்கும் அம்மாவின் பதில் இல்லைதான். நான் பள்ளிக்கூடத்தில் வாத்தியாரம்மாளுக்குக் கொடுப்பதற்காக மாமரத்திலிருந்து ஒரு மாம் ப்ழம் கேட்கிறேன். "நன்னா இருக்குடீ. மாமரத்திலே மாங்காயே இல்லையே, பழத்துக் கெங்கேடி போறது?" என்கிறாள் அம்மா.

எங்கள் ஆங்கிலப் பாடப் புத்தகம் ஒன்றில் "இல்லை" என்று சொல்லத் தெரியாத மனிதனுக்கு இந்த உலகில் இடமில்லை என்றிருந்தது. ஆனால் அந்த மனிதர்கள் ஏன் என் தாயாரிடம் வந்துப் பிரத்தியேகமாக பிரைவேட் ட்யூஷன் பாடம் படித்துக்கொள்ளக் கூடாது என்று எனக்குத் தெரியவில்லை.

அம்புஜம்மாள் வீட்டிற்குப் போயிருந்த பொழுது இல்லாள் என்னும் பதத்திற்கு இன்னொரு புது வியாக்கியானம் கூட என் மூளையில் உதித்தது. அம்புஜத்தின் கணவன் அவள் எழுந்திரு என்றால் எழுந்திருப்பார். உட்கார் என்றால் உட்காருவார். அவள் வீட்டில் அவள் இட்டதுதான் சட்டம். அவள்தான் வீட்டு எஜமானி. வீட்டை ஆள்பவள். இல்லாள். அதாவது இல்லை ஆள்பவள்.

ஆனால் இல்லானுக்கு வாழ்க்கைப்பட்ட இல்லாள், இல்லை ஆள்பவளாக இருக்க முடியாது. இல்லை என்னும் பதத்தைத்தான் ஆள்பவளாக (கையாள்பவளாக) இருக்க வேண்டும். இந்த இல்லாளைக் கண்டால் அந்த ஔவைக் கிழவிக்குப் பிடிக்கவில்லை. இதிலிருந்து ஒருவேளை ஔவை காலத்தில் கூட ரேஷன் அமுலிலிருந்திருக்கக் கூடும் என்றும்

இல்லாள் என்பவள் அடிக்கடி 'இல்லை இல்லை' என்று சொல்லிக் கொண்டே இருந்திருப்பாள் என்றும் அது காரணமாக ஔவைக்கும் கோபம் வந்து இல்லாளைப் பழித்துக் கவிதை புனைந்தார் என்றும் ஊகிக்கலாம். மனித ஊகத்திற்குத்தான் எல்லையே யில்லையே!

வீட்டிற்கு விருந்து வந்ததாம். அதை இல்லாளிடம் சொல்லவே கணவன் பயப்படுகிறானாம். வீட்டில் போதுமான அளவு அரிசி, பருப்பு முதலியவைகளை அவன் சேகரித்து வைத்திருந்தால் அவன் ஏன் பயப்படவேண்டும். "ஏய், என் நண்பர் வந்திருக்கிறார். அவருக்கு விருந்து போட வேண்டும்," என்று அதிகாரம் செய்யலாமல்லவா? அதற்குப் பதிலாக அவளுக்கு ஈரெடுத்துப் பேன் பார்ப்பானேன்? அவள் தலையில் ஈரும் பேனும் இல்லாவிட்டால் அவன் அந்த உத்தமமான கைங்கர்யத்தைச் செய்து தன் மனைவியின் மனதை வசீகரிக்க முயன்றிருக்க வேண்டாம். அதாவது அந்தக் காலத்தில், ஔவையின் காலத்தில் நல்லெண்ணெய்க்குக் கூட ரேஷன் (பங்கீடு) இருந்திருக்க வேண்டும். மேலும் சீப்புகளும் கிடைக்காமலிருந்திருக்க வேண்டும். ஒரு மகா யுத்தம் காரணமாக சீப்புகள் இறக்குமதி யாகாமலிருந்திருக்கலாம். ஏன், அணுக்குண்டு கூட அந்த காலத்திலிருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் யுத்தம் எப்படி முடிந்து அவனால் ஈரெடுத்துப் பேன் பார்க்க சீப்பு வாங்க முடிந்திருக்கும். என்று கேட்கலாம்!

இந்த மனக் குதிரையின் வேகத்திற் கிணையே இல்லை. ஆனால் அதன் 'கதி' ஆசிரியரின் பேனா முனையில் அல்லவா அடங்கி விடுகிறது!

✱

கல்யாணியைப் போலுண்டா?

வந்த விருந்தாளியை "அப்பாடா அத்திப் பூத்தாப்பலே இப்போதான் வரத்தோணித்தாக்கம்." என்று உபசரிப்பது!

எழுந்திருந்து போகும்போது "என்ன அதற்குள்ளேயா. இரண்டு நாள் இருந்துவிட்டுப் போகக்கூடாதா?" என்று சொல்லி வழி அனுப்பினால் அந்தப் பெண் கல்யாணியைப் போலென்ன பெண்கள் பிறக்க வேண்டும் என்று மெச்சிக்கொள்வார்கள். நல்ல பெயர் வாங்குவதற்கு இதுவும் ஒரு வழி.

உலக விடுதலை

உலகை யுத்தப் பிசாசினிடமிருந்து மீட்க ஒரு வழியை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார் பிரசங்கியார்.

"எனக்கு மட்டும் சர்வாதிகாரம் கிடைத்தால் பேசத் தெரிந்த ஒவ்வொரு பிராணியையும் நூறு தடவை 'கடவுளின் சிருஷ்டியிலுள்ள அனைவரையும் என் சகோதரரைப் போல் நேசிப்பேன்' அப்படித் தவறுகிறவனை பன்றி யிரைச்சியை வாட்டுவது போல நெருப்பில் பொசுக்குவேன்" என்று கர்ஜித்தார்.

கூட்டத்திலிருந்த ஒருவர் "யுத்தப் பிசாசே தேவலையே" என்று சொல்லிப் பெரு மூச்சு விட்டார்.

"உங்களிலே யாராவது ஒருவர் மாத்திரம் தீண்டாதவராக இருந்தால் 'நண்டு' வெளியே வரவே வராது." என்றுன் அந்தப் பூசாரி. ஆனல் அங்கே சென்றவர்களில் தீண்டாதார் இருவர்!.........

சிட்டி வேலி நண்டு

●

காசிவாசி

நான் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த பொழுது நேர்ந்த சம்பவம். நூற்றுக்கு நூறு உண்மை. நம்பினல் நம்புங்கள். நம்பாவிட்டால் போங்கள்.

கிருஸ்துமஸ் விடுமுறைக்கு நாங்கள் ஒரு கோஷ்டியாக ஸ்தல யாத்திரை செய்யக் கிளம்பினேம். மேரி ராணி கலாசாலை மாணவிகள் விடுதியிலிருந்து நாங்கள் கண்டதெல்லாம் கடல்தான். சாயங் காலங்களில் நவீன உடை தரித்த யுவர்களும் கலாசாலையின் முன் பலமுறை உலாவுவார்கள். மோட்டார் கார்கள் 'விர், விர்' என்று பறக்கும். ஆனல் தினசரி அதே காட்சிகளைக் கண்டுகண்டு மனம் அலுத்துவிட்டது. எங்கேயாவது சுயேச்சையாகத் திரிந்து வரவேண்டுமென்று கூண்டுக் கிளியான உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது. அதிலும் நாங்கள் ஐந்து பேர் கோஷாப் பெண்களைபபோல அடைபட்டுக் கிடந்தவர்கள். என் தகப்பனர் ஆப்பிரிக்காவில் ரயில்வே உத்தியோகஸ்தர். அவருக்கும் மற்ற உறவினர்களுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. காரணம் என் தாய். கமலாவின் பூர்வோத்தரம் எனக்குத் தெரியாது. அவள் இலங்கையிலிருந்து வந்தவள். அவளுக்கும் சென்னையில் ஒருவரையும் தெரியாது. பார்வதியின் கணவன் சீமைக்குப் போயிருக்கிறுன் பாரிஸ்டர் படிப்புக்காக. அவள் பெற்றேர்கள் குழந்தைப் பருவத்திலேயே பரகதியடைந்துவிட்டனர். அவள் கணவன் தன் பந்துக்களை யெல்லாம் அலட்சியம் செய்துவிட்டு அக்கரைச் சீமையைப் பார்க்கப் போய்விட்டவன். அதனல் அவளுக்கும் போவதற்கு இடம் கிடையாது. மீனுவும், புவனுவும் யார் என்று எவருக்கும் தெரியாது. சென்ற ஆண்டு பூராவும் அவர்களைப் பார்க்க ஒருவரும் வந்ததில்லை. அவர்கள் சகோதரிகள். அவர்களைக் குறித்துத் தெரிந்துகொள்வதற்கு எங்களில் சிலர் முயற்சித்தோம். ஆனல் அவர்களிடமிருந்து மௌனம் தான் கிடைத்தது.

'இஷ்டப்படிப் பிரயாணம் செய்' டிக்கட்டுகள் ஆறு வாங்கினேம். முதல் முதலாக ஹம்பிக்குப் போனேம். அங்குள்ள பெரிய சிலா விக்கிரகங்களைப் பார்த்துப் பிரமித்துப்போனேம். அங்கிருந்து பல்லாரி வந்தோம். அங்கு எங்களுக்கு உதவியாக வந்திருந்த ஆசிரியையின் உறவினர் ஒருவருடைய விருந்தினராக இருந்தோம். திப்பு சுல்தான் கட்டிய கோட்டைக்குப் போனேம். அங்கிருந்த இரும்புக் கதவைத் திறக்க எங்கள் அறுவராலும் முடியாமல் போயிற்று.

கடப்பை ஜில்லாவில் சிட்டி வேலி என்றெரு தாலூகா இருக்கிறது. அங்கு எங்கள் ஆசிரியையின் சகோதரர் டிப்டி தாசில்தாராக இருந்தார். திரும்பி வரும் வழியிலிருந்ததால் எங்களுக்கு அசௌகரியமாக இல்லாவிட்டால் நாங்களெல்லோரும் அவர் சகோதரராது விருந்தினராகச் சில நாட்கள் இருக்கலாம் என்று

அவர் சொன்னார். எங்களுக்கு எல்லாம் புதிதாக இருந்ததால் உடனே ஒப்புக்கொண்டோம். டிப்டி தாசில்தாரும் அவர் மனைவி மீனாட்சியும் அன்பு அவதாரமாக இருந்தார்கள். அந்தச் சின்னக் கிராமத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் எங்களுக்குக் காட்டிவிட்டாள். அந்த ஊரிலுள்ள எல்லோருக்கும் நாங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட 'கங்காரு'களாகத் தோற்றமளித்திருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். அவர்கள் அப்படி எங்களைப் பார்த்தார்கள் கண்களை இமைக்காமல்!

சிட்டி வேலி ஒரு தினத்திலேயே அலுத்துவிட்டது. ஊருக்குக் கிளம்புவதைக் குறித்துப் பிரஸ்தாபித்தோம். "வண்டிக்குச் சொல்லியிருக்கிறேன். நாம் போய் தங்க நண்டைப் பார்த்துவிட்டு வரலாம்" என்றார் தாசில்தார் மனைவி. [அவர் சொன்ன ஊரின் பெயர் மறந்துபோய் விட்டது]

ஏழு மணிக்கு ஒரு பெரிய இரட்டைமாட்டு வண்டி வந்தது. எருதுகள் கம்பீரமாக இருந்தன. ஆனால் வண்டிக்குக் கூடு இல்லை. ஒரு ஜமுக்காளத்தை, ஆறு கொம்புகளை எதிரெதிராகக் கட்டி அதன் மேல் பரத்தியிருந்தார்கள். எங்களுக்கு எல்லாம் வெகு 'குஷி' யாக இருந்தது. மேலும் முதல் தரமான காபி உள்ளே சென்றிருந்தது. கேட்கவேண்டுமா உற்சாகத்துக்கு?

பொன் நண்டு கோவிலுக்குப் போகும் வழி காட்டுப் பாதை. பாதி தூரம் போவதற்குள் உற்சாகம் குறைந்துவிட்டது. அந்த மாமி இல்லாவிட்டால் வண்டியைத் திருப்பியிருப்போம். எங்கள் உடம்பிலிருந்த பூட்டுகளெல்லாம் கழன்று போய் விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

சுமார் 10 மணிக்குக் கோயிலை அடைந்தோம். அங்கிருந்த ஒரு அற்புதமான குளத்தில் குளித்துவிட்டு வந்தோம். குளத்து நீர் தேவலோகத்திலிருந்து வருவதாகப் பூசாரி தெலுங்கில் சொன்னார். நாங்கள் "இருக்கும் இருக்கும்" என்று தலையை ஆட்டினோம். அவ்வளவு தூரம் காட்டுப் பாதையில் கடப்பை ஜில்லா வெயிலில் போனால் கூவம் கூட யமுனையாகி விடாதா?

'சுவாமிக்குத் தேங்காயுடைத்து நைவேத்தியம் செய்துவிட்டுப் பூசாரி எங்களை மனதில் ஏதாவது நினைத்துக் கொண்டு ஒரு தாழ மடலை நண்டு வளையருகில் வைக்கச் சொன்னார். நாங்கள் நினைத்தது ஜயமாகுமானால் பொன் நண்டு தாழ மடலை எடுத்துக் கொண்டுபோய் ஜலத்தை நிரப்பிக் கொண்டு வைக்குமாம்.

எங்கள் ஆசிரியை உணர்ச்சி வேகம் ததும்பத் தாழமடலை நண்டு வளையருகில் வைத்தார். நாங்கள் செப்பிடுவித்தைக்காரன் மாங்காய் வரவழைக்கும் போது எப்படி கண்ணிமைக்காமல் பார்க்கிறோமோ அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தோம். சில விநாடிகள் சென்றதும் ஒரு பொன் நண்டு—ஆமாம், சந்தேகமே இல்லை. அதன் கால்கள் எவ்வளவு பிரகாசமாக மின்னின. பாதி வெளியில் வந்து மடலை எடுத்துக்கொண்டு மறைந்தது. இரண்டு விநாடிகளில் மடல் நிறைய ஜலத்தோடு வெளியே வந்தது.

அம்மாடி எத்தனை பெரிய நண்டு தெரியுமோ? அதன் கால்கள் சுமார் ஒரு முழம் இருக்கும்.

நண்டு மறைந்து சில வினாடிகளாயிற்று. எங்களுக்குச் சுய நினைவு வந்ததும எல்லாம் கனவு போலிருந்தது. "ஏனம்மா சுசீலா, நீ என்ன நினைத்துக் கொண்டாய்" என்று மாமி ஆசிரியையைக் கேட்டாள். "அண்ணாவுக்கு என்ன குழந்தை பிறக்கும் என்று நினைத்துக் கொண்டேன்" என்றாள் சுசீலா.

பிறகு நாங்கள் ஒவ்வொருவராக மடல்களை வைத்தோம். எல்லோருக்கும் நண்டு ஜயம் சொல்லி ஜலத்தை நிரப்பி வைத்தது. ஒவ்வொருவரையும் அவர்கள் கேள்விகளைச் சொல்லச் சொல்லி வயிறு வெடிக்கச் சிரித்தோம். பிறகு பூசாரிக்கு வெள்ளி ரூபாயாக ஆறு ரூபாய் கொடுத்தோம். அவன் ஆயுசில் அவர் அவ்வளவு பணத்தைக் கண்டதில்லை. அவர் எங்களை எங்களுக்குத் தெரியாத பல மந்திரங்களைச் சொல்லி ஆசீர்வாதம் செய்தார். நாங்கள் வண்டியில் ஏறப் போகும்போது தான் நான் எழுத ஆரம்பித்த சம்பவம் நேர்ந்தது.

பூசாரி சொல்வதை மாமி எங்களுக்குத் தமிழ்ப் படுத்திச் சொன்னாள்.

"நீங்கள் எல்லோரும் பிராமணர்களாக வந்தது நல்லதாய்ப் போயிற்று. உங்களிலே யாராவது ஒருவர் மாத்திரம் தீண்டாதவராக இருந்தால் நண்டு வெளியே வரவே வராது. யாராவது பூப்பி லிருக்கும் மங்கையர் வந்தாலும் அப்படியே தான்—."

ஏன், மீனுவுக்கு என்ன வந்துவிட்டது. ஏனிப்படிச்சிரிக்கிறாள்?

"குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" என்பார்களே அப்படி நான் மீனுவை எரித்துவிடுவது போலப் பார்த்தேன். என் ரகசியம் அவளுக்கு எப்படித் தெரிந்தது?

மாமி, மீனுவைச் சிரிப்பதன் காரணத்தைச் சொல்லச் சொன்னாள். நாங்களும் உங்களுடன் சேர்ந்து கொள்ளலாமே" என்றாள். மீனுவுக்குப் பதிலாகப் புவனா சொன்னாள்.

"அம்மா, நீங்கள் எங்களைப் பெரிய மனது செய்து மன்னிக்க வேண்டும். நாங்கள் இருவரும் தீண்டாத ஜாதிப் பெண்கள். அதனால்தான் எங்கள் உறவினர் ஒருவரும் எங்களைப் பார்க்க ஹாஸ்டலுக்கு வந்ததேயில்லை. எங்களுடைய உண்மையான ஜாதி ஒருவருக்கும் தெரியாமலிருந்தது. தெரிந்தால் அவமானமாக இருக்குமென்று மறைத்து வந்தோம். ஆனால் இப்பொழுது இந்தத் தெய்வத் தன்மை பொருந்திய நண்டு எங்கள் மடல்களில் தேவலோகத்து ஜலத்தை நிரப்பிக் கொடுத்து எங்களுக்குப் புனிதமான பிறப்பைக் கொடுத்துவிட்டது" என்று உணர்ச்சி ததும்பப் பேசினாள்.

ஒரு கணம் மாமியின் முகம் கருத்தது. உடனே அவர் பலபலவென்று சிரித்துக்கொண்டே, "அம்மா, கடவுள் சிருஷ்டியில் எல்லோரும் ஒரே குலம்தான். நான் கூட வேற்றுமையாகத் தான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் இன்று என் அகக் கண் திறந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே மீனுவை அணைத்து முத்தமிட்டாள். என் ரகசியம் மீனுவுக்கு மட்டும் அல்ல, அந்த நண்டுக்கும் கூட தெரிந்திருக்கலாம்!

சரித்திரப் பிரசித்தி பெற்ற உடல் பருமனுள்ள ஆசாமிகள் பலர் உண்டு. அவர்களிலே ஒருவர் கனம் 739 ராத்தல். அதாவது கால் டன்னுக்கும் அதிகம். சுற்றளவு 9 அடி 4 அங்குலம்; என்ன படிப்பதற்கே திகைப்பாயிருக்கிறதா? மீதியையும் படித்துப் பாருங்கள்.........

பருமன்

●

டாக்டர் நாமகிரி

ஆறு வருடங்களாக வராத என் மன்னி நேற்றுத்தான் டில்லியி லிருந்து வந்தாள். நான் அவளை ஆறு வருடங்களுக்கு முன் பார்க்கும்போது ஒல்லியான சரீரம் படைத்திருந்தவள், ஒரு மகா பர்வதத்தைப் போல் வந்து நின்ருள். அவளுக்குக் கல்யாணமான புதிதில் அவளை நாங்கள் 'நெருப்புக் குச்சி' என்று கூப்பிடுவது வழக்கம். இப்பொழுது என்னவென்று அழைப்பது என்று நானும் என் தாயாரும் திகைத்தோம்,என் அம்மாள் ரொம்பக் குறும்புக்காரி அவளைப் 'பர்வதம்' என்று புனைபெயர் வைத்துக் கூப்பிட ஆரம்பித்து விட்டாள் 'அம்மா மன்னி எங்கே? என்று கேட்டால் 'பர்வதத்தைத் தானே கேட்கிறே. ஷாப்பிங் போயிருக்கிருள். சட்டையெல்லாம் இறுகலாய்ப்போயிடுத்தாம். புதுசாக 'ரெடி மேடா'ய் வாங்கிவருவதற்காகப் போயிருக்கிருள். எந்தக் கடையில் இவளுக்காகத் தைத்து வைத்திருக்கிருளோ'' என்று என் தாயார் ஆமைக் கண்ணீர் உதிர்த்தாள். இந்த விஷயத்தை யொட்டி 'மங்கை'க்கு ஒரு கட்டுரை எழுதலாமென நினைத்து எழுத ஆரம்பித்தேன். பருமனு யிருப்பவர்களை ஏளனம் செய்வதாக நினைக்க வேண்டாம். நானும் அப்படித்தானிருந்தேன்.

நமது வாழ்க்கை, நாகரீகம் நிரம்பியதாக ஆனதற்கு முதற் பலன் நாம் நமது அவயவங்களைப் போதிய அளவுக்கு உபயோகிக்காது ஊளைச்சதை அதிகமானது தான் என்ருல் மிகைப்படக் கூறுவதாகாது என எண்ணலாம். தொன்றுதொட்டே வேண்டாத கொழுப்பைச் சுமந்து மாம்சபர்வதமாகத் தோற்றமளிப்பவர்கள் நகைப்புக் கிடமாகி வந்திருக்கின்றனர். சில சினிமா ஹாஸ்ய நடிகர்ளுடைய நடிப்பெல்லாம் அவர்கள் தங்களுடைய பெருத்த சரீரத்தைத் தூக்கிக்கொண்டு நடப்பதேயாயிருக்கிறது. நமது மூதாதையர் வீடுவாசல்களை அமைக்கும் போது அவர்கள் பூதாகாரமுள்ள சரீரமுள்ளவர்கள் சாதாரண மனித வாழ்க்கையில் ஏற்பட்டு விடக்கூடும் என்று எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. சதா ஆகாரத்திற்காகவும் இயற்கையாக ஏற்பட்டுள்ள அபாயமான துஷ்ட மிருகங்களிடமிருந்து தப்புவதற்காகவும் மனிதன் ஓடியாடித் திரிந்து கொண்டிருந்த பொழுது தேவைக்கு அதிகமாக அவன் உடம்பில் சதை ஏறப் பிரமேயமே ஏற்படாதிருந்தது. ஆனல் தன் மூளையை உபயோகித்துத் தன் வேலைகளைச் செய்வதற்கு இதர மிருகங்களையும் இயந்திர சாதனங்களையும் ஏற்படுத்திக் கொண்டபிறகு அவன் சரீரத்தில் தேவைக்கு அதிகமான கொழுப்பு சேர்ந்து பெருக்க ஆரம்பித்தது. இம்மாதிரியான மாறுதல் மனித சரீரத்தில் ஏற்

படப் பல நூற்றாண்டுகள் சென்றன.

சரித்திர வாயிலாக உலகத்தில் பல பருத்த மனிதர்கள் இருந்ததாக அறிகிறோம். ஒருவர் தூங்கிவிடும்போது தனது ஊளைச்சதையால் மூச்சடைத்துப் போகாதிருப்பதற்காக உட்காரும் நாற்காலியில் முதுகுப் புறம் கூரிய ஆணிகள் தைத்திருந்தார்களாம். அவரை ஏன் படுத்துக் கொள்ள விட்டிருக்கக் கூடாதென்று சரித்திராசிரியர் எழுதவில்லை!

இங்கிலாந்து தேசத்தில் டானியேல் லாப்ஸர்ட் என்றொரு இராட்சத மனிதன் 1770-ம் ஆண்டில் பிறந்தார். அவருக்குச் சுமார் இருபது வயதாகும் வரையில் எல்லோரையும்போலச் சாதாரணமாகத்தான் இருந்தாராம். ஆனால் நல்ல பலசாலி. சுமார் கால் டன் பளுவை அனாயாசமாய்த் தூக்குவாராம். பிறகு உடம்பு பருக்க ஆரம்பித்ததாம் உடல் பெருக்காதிருக்க சரீரப் பயிற்சி செய்ய ஆரம்பித்தாராம். ஆனால் அதனால் ஒரு பயனும் ஏற்படவில்லை.

அப்படி அவர் பகாசூரன் போல் சாப்பிடக் கூட மாட்டாராம். சாராயம் சாப்பிட்டதேயில்லை 1806-ம் ஆண்டில் அவர் பிரத்தியேகமாய் தயார் செய்யப்பட்ட ஒரு வண்டியில் லண்டன் நகரம் வந்து சேர்ந்தாராம். அவரை ஒரு அற்புதப் பிறவியாக எண்ணிப் பார்க்க வருகிறவர்களிடம் தலா ஒரு ஷில்லிங் வசூலித்து வந்தாராம். அவர் உயரம் 6-அடி 11அங்குலம். எடை 739-ராத்தல். அதாவது கால் டன்னுக்கு அதிகம். சுற்றளவு 9 அடி 4 அங்குலம். அவருடைய கால் மாத்திரம் 3 அடி 1 அங்குலம் சுற்றளவுள்ளதாயிருந்தது. அவரால் சாப்பிடுவது தூங்குவது போன்ற அலுவல்களைத் தவிர்த்து வேலை அலுவல்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை என்பது அதிசயமன்று. அவருடைய 39-ம் ஆண்டில் திடீரென்று மரணமடைந்தார். பூதேவி அந்த மாம்ச பர்வதத்தைச் சுமந்து அதி சீக்கிரத்தில் அலுத்துவிட்டாள். அவரை அடக்கம் செய்வதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளைக் குறித்து பத்திரிகைகளில் பத்தி பத்தியாய் வெளியாயிற்று. சவப் பெட்டிக்காக அவர் அறையின் ஜன்னலும் சுவரும் இடிக்கப்பட்டன. "112 சதுர அடி மரம் சவப் பெட்டிக்காக உபயோகிக்கப்பட்டது. பெட்டி 6 அடி 4 அங்குல நீளமும், 4 அடி 4 அங்குல அகலமும் 2 அடி 4 அங்குல கனமும் இருந்தது. பெட்டிக்கு அடியில் சக்கரங்களும் உருளைகளும் அமைத்திருந்த படியால் அப்படியே கல்லறைக்கு தள்ளிக் கொண்டுபோவது சுலபமாயிருந்தது. அவர் ஆயுட் காலம் முழுவதையும் சந்தோஷமாகக் கழித்ததாக அவர் கல்லறையின் மீது பொறிக்கப்பட்டிருக்கிறது. இளம் பெண்களைக் கண்டால் அவருக்கு குஷி பிறந்து விடுமாம். ஆனால் அவர் கல்யாணமே செய்து கொள்ளவில்லை.

எட்வர்ட் பிரைட் என்ற மற்றொருவர் 616 இராத்தல் கனமும் ஐந்தரை அடி சுற்றளவும் ஐந்தே முக்கால் அடி உயரமும் இருந்தார். அவர் வம்சாவளியிலேயே சற்றுப் பருமனுள்ளவர்கள் தான் அதிகமாம். இவர் பலசரக்கு மளிகை வைத்திருந்தார்; இவருக்கு ஐந்து குழந்தைகள் இருந்தன. அவருடைய முப்பதாவது வயதில் இருந்த

பொழுது அவருடைய மனைவி ஆருவது குழந்தையைப் பிரசவமா யிருந்தாள். அவர் இறந்த பிறகு பந்தயத்திற்காக அவருடைய சட்டைக்குள் தையல் பிரியாமல் ஏழு பேரை அணைக்க முடிந்தது.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் வைத்தியர்கள் பருமனுக வுள்ளவர்கள் நல்ல சுகத்தி லிருப்பதாகக் கருதி வந்தமையால் ஊளைச் சதையை ஒழிப்பதில் ஜனங்களுக்கு அதிக ஊக்கம் இருக்கவில்லை. மேலும் அப்பொழுது உடல் பருப்பதற்கும் அதிக அவகாசம் இருக்கவில்லை. ஓரளவு சரீரப் பயிற்சி எல்லோருக்கும் அவசிய மாயிருந்தது.

உணவுப் பொருள்கள் எப்படி வேண்டாக்கொழுப்பாக மாறி சரீரத்தின் பல பாகங்களில் சேர்ந்து ஊளைச்சதையாக மாறுகின்றன என்பது தெரிந்தால் அதைத் தடுக்க முயற்சிக்கலாம். மனிதனுடைய தினசரி அலுவல்களுக்கும் வளர்ச்சிக்கும்தேய்ந்து போன ஜீவாணுக்களை புதுப்பிப்பதற்கும் கார்ப்பனேஜ்ஜனிதங்கள் முதலிய உணவுப் பொருள் எவ்வளவு வேண்டுமென்று அறிந்தால் அதற்குத் தகுந்தாற் போல ஆகாரப்பட்டியலை அமைக்கலாம். இது எல்லோருக்கும் பொதுவாக இல்லை. வயது, அலுவல், உயரம் முதலிய வித்தியாசங்களுக்குத் தகுந்தாற்போல வித்தியாசப்படும். ஆனல் பொதுப்படையாக சில திட்டங்களை வகுத்து அதிக பக்ஷம் எவ்வளவு ஆகாரம் தேவை என்பதை நிச்சயிக்கலாம். இந்த திட்டப்படி நம்முடைய தினசரி ஆகாரத்தைப் பரிசீலித்துப் பார்த்தால் நமக்கே உலகில் இன்னும் சில பிரகிருதிகள் எலும்பும் தோலுமாக இருக்கின்ருர்களே என்று பிரமிப்பேற்படும். இதற்கு காரணம் மனிதனுடைய இயற்கை யமைப்பிலிருக்கிறது இயற்கையன்னை உடல் பருப்பதைத் தடுக்க சில குழலற்ற சதைக் கோளங்களை ஏற்படுத்தியிருக்கிருள். இவை ஓயச்சலின்றி சரிவர உழைத்து வருவர்களுக்கு உடல் பருப்பதைத்தடுக்க உதவுகின்றன. இயற்கையாக ஏற்பட்டுள்ள இந்த சதைக் கோளங்கள் சரிவர வேலை செய்யாததால் தான் ஊளைச் சதை பெருக்கிறது. ஆகையால் ஆகாரக் கட்டுப்பாட்டுடன் சில உசிதமான யோக ஆசனங்களைத் தகுந்த ஆசானிடம் பயின்று வந்தால் ஊளைச் சதை உடனே ஓடிவிடும். ஆகாரக்கட்டுப்பாடுஎன்றவுடன் என் பருத்த சிநேகிதர்களுக்குக் கோபம் வருகிறது. "ஐயோ பசி காதை அடைக்காதா' என்று அலறுகிருர்கள். "வேலை செய்ய முடியாமல் போகாதா?" என்கிருர்கள். கொஞ்சம் நிதானமாக யோசித்தால் உடனே அவர்களுக்கு இது எவ்வளவு சுலபம் என்பது தெளிவாகும். உயிரைக்காக்க வல்லது உணவு. அப்படி யிருக்கும் போதுயாராவது பட்டினிகிடந்து சாகச் சொல்வார்களா? ஆகாரங்களின் இயல்பையறிந்து அவற்றைத் தேவைக்குத் தகுந்தாற் போல சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் இயற்கை முறை. சில ஆகாரங்கள் திருப்தியளிக்கின்றன. சில ஆகாரங்கள் சீக்கிரத்தில் வயிற்றை நிரப்பிவிடுகின்றன. பசியுணர்ச்சிஏற்படுவது இரத்தத்தில் சர்க்கரை குறைவதால் மாத்திர மன்று. வயிற்றில் இன்னும் பழக்கத்திற்கு அதிகமான இடம்இருப்பதுகூட த்தான். அரிசிச் சாதம், கீரை தினுசுகள், கோதுமைசப்பாத்திபோன்றவை

வயிற்றை நிரப்பி நிதானமாக ஜீரணமாகும் ஆகாரங்கள். இவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய அளவு ஆகாரச்சத்தை உட்கொண்டால் வயிறு நிறையாது. பசி மறையாது. மனிதப் பிறவி அதிசீக்கிரத்தில் பழக்கங்களுக்கு அடிமையாகும் பிரகிருதி. ஆகையால் முதலில் சிறிது சிரமமாயிருந்தாலும் சீக்கிரத்தில் சரிப்பட்டுப் போய்விடும்.

ரசம், குழம்பு, துவையல், ஊறுகாய் முதலியவை ஆகாரங்களன்று. இவற்றில் பழக்கமான ஒருவருக்கு இவை யின்றி நிறைந்த திருப்தி ஏற்படாது. பழக்கம்தான் காரணம். புளியாலும், மிளகாயாலும் வயிற்றின் நரம்பு மூளைகளைத் தூண்டித் தூண்டிப் பழக்கி யிருப்பவர்களுக்கு உண்டி 'காரசாரமாக' இல்லாவிட்டால் வயிறு நிரம்பின உணர்ச்சி ஏற்படுமா? பொடி போட்டுப்பழகியநாசிக்கு இனிய ஜாதிப் புஷ்பங்களின் வாசனை திருப்தி யளிக்குமா? பழக்கம் மாறினால் திருப்தி தானாகவே உண்டாகும். முதலில் சிறிதுசிரமமாக இருக்கும். நாளடைவில் சரியாகிவிடும்.

மதுவைக் குறித்து ஒரு வார்த்தை சொல்லாம லிருக்க முடியுமா? மதுவை ஆகார வகைகளுடன் சேர்க்க முடியாது. ஆனால் எரியும் பதார்த்தமாகையால் அதுவும் சக்தி யளிக்கக் கூடியதுதான். அந்தச் சக்தியும் உடனுக்குடனே கிடைக்கக் கூடியது. ஆகையால் உபயோகிக்கப்பட வேண்டிய ஆகாரம் சேமித்து வைக்கப்பட ஏதுவாகிறது. சீமைச் சரக்குகளுக்கு 'தொந்தி' யைப் பருக்க வைக்கும் சக்தி அதிகம்.

சாதாரணமாகத் தித்திப்புப் பட்சணங்கள், பப்பர் மின்டுகள் இவை ஆகாரங்களாக மதிக்கப் படுவதில்லை. ஆனால் இவைகளும் கார்ப்பனோஜ்ஜனிதங்களாகையால், வேண்டாத ஊளைச் சதை உற்பத்தியில் தாராளமாகப் பங்கெடுத்துக் கொள்ளக்கூடியவை.

குழந்தை சாதாரணமாகப் பதினொன்காம் மாதத்தில் நடக்க ஆரம்பிக்கும். நல்ல திடசாலிகளான குழந்தைகள் 'எட்டாம் மாதத்தில் எட்டடி' வைக்கும். ஒரு வயதாகியும் நமது குழந்தை நடக்கவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். குழந்தை மெலிந்த உடலாய் இருந்தால் சீக்கிரம் நடக்கும். பருமனாயிருந்தால் ஒரு வயதிற்கு மேலாகும். சாதாரணமாகக் குழந்தை ஒரு வயதிற்குப் பிறகுதான் நடக்க ஆரம்பிக்கும்.

**பெண்களே பொருமைப் படத்தக்கப்
போழகி அவள் என்ருல் போதாதா?
சுந்தர வதனமும் மனிதப்பிறவிதானே?**

அழகு

"கல்பனு"

அன்னபூர்ணு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் மானேஜர் ஸ்ரீ சாரநாத் வீட்டில் அன்று ஏகப்பட்ட அமர்க்களம். அப்படித் தடபுடலாக அமர்க்களப்படுவதற்கு ஏதோ பெரிய கல்யாணமோ அல்லது அதிசயமானதொரு சம்பவமோ காரணமென்று யாரும் நினைத்துவிட வேண்டாம். அவருடைய ஒரே தங்கை சுகுமாரிக்கு அன்று பிறந்த தினக் கொண்டாட்டம்! அதாவது அவளுக்கு அன்று இருபத்திநாலாவது வயதுமுடிந்து இருபத்தைந்து பிறக்கிறது. அவ்வளவுதான்!

மற்ற நாட்களில் காலை எட்டு மணி அடித்த பிறகுதான் சுகுமாரி படுக்கையை விட்டெழுவாள். ஆனல் அன்று ஐந்து மணிக்கே எழுந்துவிட்டாள். அவள் சீக்கிரம் எழுந்துவிட்டதனலோ என்னவோ வேலைக்காரர்கள் பாடு திண்டாட்டமாகிவிட்டது. வீடு பூராவும் சுத்தம் செய்யப்பட்டது. 'பர்னிச்சர்கள்' இடம் மாறி நகர்ந்தன. சமீபத்தில் எங்கேயிருந்தோ சாரநாத்துக்கு வெகுமதியாக வந்த பாரசீக ஜமுக்காளங்கள் நடு ஹாலிலே விரிக்கப்பட்டு புஷ்பக் கொத்துடன் கூடிய 'வேஸ்'களால் அலங்கரிக்கப்பட்டது.

சாரநாத் இங்கிலாந்தில் இருந்த போது பிடிக்கப்பட்ட போட்டோக்களை அவளே வரிசைப் படுத்தி மாட்டினள். அவள் கையாலேயே சித்திரிக்கப்பட்ட மேஜை விரிப்புகள், மேஜைகளை மூடிக்கொண்டன! ஆகக் கூடி மணி பத்து அடிப்பதற்குள் வீட்டை அசல் நாகரீக மோஸ்தரில் மாற்றிவிட்டாள். சாரநாத்துக்கே பிரமிப்பு ஏற்படும்படியாக இருந்தது அந்த அலங்கரிப்பு வேலைகள்!

"ஏது, வரும் விருந்தினர்கள் திருஷ்டிபோட்டுவிடப் போகிருர்கள்! உன்னையும், வீட்டையும் பார்த்து! என்று குறும்பாகச் சொன்னதற்கு அவளிட மிருந்து அநாயாசமாக பதில் வந்தது.

"ஆமாம், அண்ணு. அப்புறம் உன்னுடைய நண்பர்கள் பரிகாசம் செய்தால் என்ன செய்வது? என்ன சாரநாத், நீ லண்டன் போய் வந்தவன். உன் சிஸ்டரோ ஹானர்ஸ்! ஆனல் நீங்கள் இப்படிக் கர்நாடகமாக யிருக்கிறீர்களே!" என்று சொன்னல் நமக்கு எப்படி யிருக்கும்?

"ஓஹோ ஹோ! பேஷ் சுகுமாரி, அப்படியானல் நாம் இத்தனை நாளும் அநாகரீகமாகவா யிருந்தோம்?" என்று சொல்லிவிட்டு இரைந்து சிரித்தான். 'போ அண்ணு!' உனக்கு எப்போதும் என்னைக் கிண்டல் செய்வதுதான் வேலை! என்று பொய்க் கோபம் கோபித்துக்

கொண்டு அவள் மாடிக்குப் போனாள்.

அவள் மாடிப் படியில் வேகமாகத் துள்ளித் துள்ளி ஓடுவதைப் பார்த்தபடியே அசையாது நின்றான் சாரநாத். அதுவரை புன் சிரிப்புத் தவழ்ந்த அவன் முகம் சட்டென்று மேகம் பரவிய வானம்போல் கவலை படர்ந்து கருத்தது. உம்! என்று ஒரு பெருமூச்சுவிட்டு தன் கவலையை மறைத்துக் கொள்ள முயன்றான். ஆனால் பிறந்தது முதற்கொண்டு துணையாக இருந்த கவலை இலகுவில் நீங்கிவிடுமா?

சாரநாத்துக்கு அப்போது பன்னிரண்டு வயது. சுகுமாரி பிறந்த மறு மாதமே அவன் தாய் இறந்துவிட்டாள். தந்தை இந்தக் குழந்தைகளை எவ்வளவோ கண்ணுங் கருத்துமாய் வளர்த்தார். ஆயினும் சுகுமாரியின் பனிரெண்டாவது வயதிலே தந்தையும் இறந்துவிட்டார். தன் மகனுக்குள்ள திரண்ட சொத்தும் படிப்பும் வீணாகப் போகக்கூடாதென்றோ என்னவோ அவன் தந்தை அவனுக்கென்று ஒரு பெண்ணை நிச்சயித்திருந்தார். அவர் இறந்ததும் அந்தப் பெண்ணையே மணந்துகொண்டான்.

மாமனர் உயர்ந்த உத்தியோகஸ்தர். மறுமகனை லண்டனுக்கு அனுப்பினர். ஆனல் இங்கும் ஒரு பெரிய நஷ்டம். அவன் மனைவி லண்டனி லிருந்து பெரிய பட்டங்களுடன் திரும்பும் தன் கணவனைப் பார்க்கும் பாக்கியமு மின்றி விஷ ஜுரத்துக் கிரையாகிவிட்டாள். இவ்வளவு போதாதா ஒருவர் வாழ்க்கையில் வெறுப்புக்கொள்ள? ஆனல் சாரநாத் தன் 'தங்கைக்காக' வாழ்ந்தான். அவள் பெரியவளாகி 'குடியும் குடித்தனமும் உள்ளவளாகும்வரை அவளுக்கு அவன் எதையும் செய்வதென்று தீர்மானித்துவிட்டான். செல்வத்திலேயே பிறந்து செல்வமாக வளர்ந்த சுகுமாரிக்கு 'கவலை' என்ருல் என்ன என்பதையே தெரிந்துகொள்ளாதபடி அவ்வளவு கருத்தாக வளர்த்தான் அவன்.

வருஷா வருஷம் வரும் அவளுடைய பிறந்த நாள் கொண்டாட்டம் மிகப் பிரமாதமாக நடக்கும். பணச் செலவு ஒரு கல்யாணத்துக் கீடானதாக இருக்கும்.

இந்த வருஷத்துக்குள்ளேயே இவளுக்குக் கல்யாணத்தைச் செய்துவிட வேண்டுமென்று அவன் ஒவ்வொரு வருஷமும் நினைப்பான். ஆனல் அவளுக்கோ 'கல்யாணம்' என்ற விஷயமே வேப்பங்காயா யிருந்தது. அவளுக்குப் பிடித்தமான ஒரு 'ஆசாமி'யைப் பிடிக்க சாரநாத்தால் முடியவில்லை.

பிரமாத அழகி சுகுமாரி. கவிகள் வர்ணிக்கும் அற்புத அழகி என்று சொல்லலாம். நாகரீகளினி என்று அவள் தோழிகள் எல்லாம் புகழ்வார்கள். அதிகம் எதற்கு? பெண்களே பொருமைப் படத்தக்க பேரழகி சுகுமாரி என்ருல் போதாதா? அவளை மணம் செய்துகொள்ளப் போட்டிபோட்ட வாலிபர்களின் விலாசங் கொடுப்பதா யிருந்தால் ஒரு பெரிய ஜாப்தாவாகிவிடும். அவர்களுடைய படிப்பையும், அதனல் கிடைத்த பட்டங்களையும் எழுதுவதானல் ஒரு டிக்ஷனரியே தயார் செய்துவிடலாம். அவர்கள் அழகு, அலங்காரம், டிரஸ், பேச்சு முதலியவற்றை எழுதி பிரபல நாவலாசிரியனுல்கூட முடியுமா என்பது சந்தேகமே!

ஆனல் சுகுமாரி 'த்சு என்ன அவலக்ஷணங்களின் படை



யெடுப்பு பலமா யிருக்கிறதே!' என்று இகழ்வாகக் கூறும் போது, யார் கிமிர்ந்து பேச முடியும்? "என்ன இருந்தாலும் உனக்குள்ள அழகைப்பற்றி நீ இவ்வளவு கர்வப்படக்கூடாது!' என்று சாரநாத் கூட ஜாடை மாடையாகச் சொல்லுவான். ஆனல் அழகைப்போல கர்வப்படுவதும் தனக்கே உள்ள உரிமை என்று கினைத்தாள்.

மாடியிலேயிருந்து கீழே இறங்கிவந்த அவளை பார்த்து சுகுமாரி, 'இன்றைக்கு சுந்தரம் கூட பம்பாயி லிருந்து விமானம் மூலம் வருவான் என்று கினைக்கிறேன்' என்று சாரநாத் சொல்லிவிட்டு அவள் முகத்தை உன்னிப்பாகப் பார்த்தான். ஆனல் அவள் பதில் எதுவுங் கூறவில்லை. சாரநாத் உற்சாக மிழிந்து புறப்பட்டான்.

'அண்ணு, மூன்று மணிக்கெல்லாம் வந்துவிடு. என் தோழிகள் எல்லாம் இன்னும் ஒரு மணி நேரத்துக்கெல்லாம் வந்துவிடுவார்கள் என்று கூறிவிட்டு மீண்டும் அலங்கார வேலைகளில் ஈடுபட்டாள்.

சாரநாத் சென்ற பிறகு அவள் மட்டும் தனியாகக் கொஞ்ச நேரம் இருந்தபோதுதான் அவளுக்குச் சுந்தரவதனம் தன்னுடைய பிறந்த நாட் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள அவசரம் அவசரமாக வருகிருன் என்பதைப்பற்றி யோசிக்க முடிந்தது. தனக்காகத்தானே இவ்வளவு ஆர்வத்துடன் வருகிருன்?

அடிக்கடி சுந்தரவதனத்தை அண்ணன் எதற்காகத் தங்கள் வீட்டுக்கு அழைத்து வருகிருன் என்பது அவளுக்குத் தெரியாத விஷயமில்லை. அவனுடைய அந்தஸ்து, சம்பாத்தியம், அழகு, அறிவு, திறமை பற்றி யெல்லாம் சாரநாத் அடிக்கடி தூக்கி வைத்துப் பேசுவதெல்லாம் எதற்கென்று அந்தஎம். எஸ்ஸி படித்த வனிதைக்குத் தெரியாம லிருக்குமா? உண்மையிலேயே சுந்தரவதனம் எவ்வளவோ மேம்பட்டவன்தான். சாரநாத் புகழ்ச்சிக்குத் தகுதியான பாத்திரம் தான்.

பம்பாய் 'பாங்க்' ஒன்றின் மானேஜராக இருந்த சுந்தரவதனம் உண்மையிலேயே அவள் மீது அளவுகடந்த காதல் கொண்டிருந்தான் என்பதைச் சாரநாத் வெகு நாளைக்கு முன்னரே தெரிந்துகொண் டிருந்தான் என்றுலும் சுகுமாரியின் நோக்கப் படிதானே நடக்கவேண்டும்!

'என்னை ஏன் அண்ணு தொந்தரவு செய்கிருய்? நான் யாரையும் கல்யாணம் செய்து கொள்ளப்போவதில்லை,' என்று அவள் கூறும்போது 'எனக்குத் தகுந்தவர் யாரும் இல்லை!' என்று கர்வமாகச் சொல்வது போலிருக்கும். அவனும் மேலும் அவளை நச்சரிக்காம லிருந்துவிடுவான்.

'சுந்தரவதனம்கூட இன்று வருகிருராக்கும், உம்!' என்று மெதுவாகச் சொல்லிச் சிரித்துக் கொண்டே வாசலைப் பார்த்தாள்.

'இன்னும் சற்று நேரத்தில் லில்லி, ரோஸ், ஜனதா, நளினி எல்லாரும் வந்துவிடுவார்கள். பிரபு, ராகவன், டாக்டர் ரஞ்சன், மோகன் எல்லாம் வரக் கொஞ்ச நேரமானுலும் ஆகும். அவர்கள் வந்தால் 'என்னை, என் அழகையும், அலங்காரத்தையும் புகழ்வார்கள். ஆயினும் அவர்கள் அத்தனை பேரும் இன்னும் அதிக

மாகவே இன்று புகழும்படி அலங்கரித்துக் கொள்ள வேண்டும் நான். ஏன்? பொருமைப் படும்படி என்று நினைத்தாலும் சரி!' என்று தீர்மானித்தவளாய் ஆடை அணிகள் உள்ள பீரோவண்டை சென்ருள். நேரமோடியதுகூடத் தெரியவில்லை அவளுக்கு. அலங்கரித்துக் கொள்வதில் அவ்வளவு கவனம்.

'பும்! பூம்' என்று சத்தமிட்டுக் கொண்டு ஒன்றன் பின் ஒன்ருக நாலு கார்கள் வந்து அந்தப் பங்களா வாசலில் வரிசையாக நின்றன. ஜஸ்டிஸ் தானியலின் மகள் லில்லி, அவள் தங்கை ரோஸ், அஸெம்பிளித் தலைவர் ராஜய்யா புதல்வி ஜனதா, டாக்டர் ரஞ்சன் மனைவி நளினி, சப் கலெக்டர் தங்கை சரோஜினி... அவள் எதிரபார்த்த நபர்கள் யாவரும் வந்து விட்டனர். அது காறும் அமைதியாயிருந்த அந்தப் பங்களா சில நிமிஷங்களுக்கெல்லாம் ஒரே சிரிப்பும், பேச்சுமாய் அமர்க்களப்பட்டது. சாரநாத்தும் சற்று நேரத்தில் தன் நண்பர்களுடன் வந்துவிட்டான். சுகுமாரி எதிர்பார்த்தபடி அவளுடைய அலங்கார அழகு அத்தனை பேரையும் பிரமிக்கச் செய்தது. தோழிகளுக்குப் பொருமை கூட உண்டாயிருக்கும்! பரஸ்பர அறிமுகம், சம்பாஷணை எல்லாம் கொஞ்ச நேரம் நடந்தன. நொடிக் கொருதரம் வாசற் பக்கம் சாரநாத்தின் பார்வை திரும்பியபோது அவள் பார்வையும் அத்திக்கில் செல்லாமலில்லை. ஆயினும் அதிலே ஒரு அலட்சிய பாவனை!

ரோல்ஸ் ராய்ஸ் கார் ஒன்று வந்ததும் அதிலிருந் திறங்கியவன் சுந்தரவதனம்தான் என்று, தெரிந்துகொள்ள எத்தனை நேரமாகும்? நண்பனை வரவேற்க சாரநாத் எழுந்தோடினுன். அதற்குள் அவனே வந்துவிட்டான். தடபுடலாக ஆடையணியில்லாமல்சாதாரணமான தொரு சில்க் ஜிப்பாவுடன்தான் வந்தான் அவன். 'வாருங்கள் சுந்தரம்,' என்று அவள் வரவேற்றபோது குரல் நடுங்கியது. பிறகு விருந்து நடக்கத் தவக்கமேன்?

விருந்து முடிந்ததும் அவரவர்கள் வந்தன மறிவித்துவிட்டுப் புறப்பட்டு விட்டனர். சுந்தரம் மட்டும் தங்கினுன். ஆனல் 'எனக்கு அரை மணி நேரமாகத் தலைவலியாயிருக்கிறது!' என்று சொல்லிவிட்டு மாடிக்குப்போய் படுத்துவிட்டாள்.

சாரநாத் அன்று மத்தியானம் வரை ஒரே ஆனந்த ஸ்வரூபிணியாய் இருந்த சுகுமாரியின் தற்போதைய மாறுதலுக்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று யோசித்தபடியே சுந்தரவதனத்துடன் ஏதோ சம்பாஷித்துக் கொண்டிருந்தான். இடையே சுந்தரவதனம் நிதானமாக 'சாரநாத் நம் இருவர் இஷ்டப்படி நடக்கும் என்று நான் நம்பவில்லை. என் காதல் நிறைவேற இடமில்லை. ஏன் என்ருல் அவள் இஷ்டம் நம்முடைய நோக்கத்துக்கு எதிராயிருக்கிறது' என்று சொல்லிவிட்டான். 'இவளுக்காகத்தானே நான்கூட இரண்டாங் கல்யாணம் செய்துகொள்ளாம லிருக்கிறேன்? இவள் நன்மைக்காக, குடும்பத்தில் அமைதியும், இன்பமும் நிலவுவதற்காகத்தானே நான்...

'அவளுக்கு இதெல்லாம் ஏன் தெரியவில்லை?...

நண்பர்கள் இருவரும் சற்று நேரம் ஏதோ பேசிக்கொண்

டிருந்தார்கள். சுந்தரவதனம் தன் தங்கையிடம் எவ்வளவு அன்பும் மதிப்பும் கொண்டிருக்கிறுன் என்பதை இன்று அவன் வாயாலேயே கேட்டுத் தெரிந்து கொண்டான்.

'இப்படிப்பட்ட மனிதனை அவள் கணவனுகப் பெறுவதே ஒரு பெரும் பாக்கியம் அல்லவா?'

இரவின் இருள் வலை எங்கும் வீசப்பட்டது. அந்தச் சிறு பங்களா பூராவும் எலக்டிரிக் லைட் வெளிச்சம் பாவி, வெளியே பரவி யிருந்த இருளை அறியாத படி செய்து விட்டது.

இன்னும் அவள் மேலே யிருந்து இறங்கவில்லை. சாரநாத் அதற்கு மேலும் பொறுக்க முடியாமல் மாடிக்குச் சென்றுன். அவள் வாடிய பூங் கொடிபோல் கட்டில் மீது சுருண்டு கிடந்தாள். அருகில் நெருங்கி எழுப்பினுன். பதில் இல்லை. தட்டி யெழுப்பக் கையை மேலே வைத்தபோது தீப்போற் காய்ந்தது உடல்.

'ஐயோ! இவளுக் கென்ன சுரமா? இல்லாவிட்டால் இப்படிக் காய்வானேன்?' டாக்டருக்கு உடனே 'போன்' செய்துவிட்டு நண்பனிடம் வந்தான். சுந்தரவதனம் இந்த எதிர்பாராத செய்தி கேட்டுப் பதறினுன். டாக்டரும் வந்தார். சுகுமாரியைப் பரிசோதனை செய்தார்.

'நல்ல ஜுரம். மிக்சர் தருகிறேன். காலையில் பார்க்கலாம். ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்,' என்று கூறிவிட்டுப் போனுர். நண்பர்கள் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு பேசவியலாது தவித்தார்கள். பொழுது விடிந்ததும் சாரநாத் ஆதுரத்துடன் தங்கையண்டை ஓடினுன். அவள் முகம் பூராவும் சிவந்த புள்ளிகள் காணப்பட்டன! உடல், கை காலில் கூடத்தான்!

டாக்டர் வந்ததும் 'சரி மிஸ்டர் சாரநாத் 'ஸ்மால் பாக்ஸ்'ன்னு அப்பவே நினைத்தேன்!' என்று தன் தீர்க்கதரிசனத்தை அறிவித்துவிட்டுப் போய்ச் சேர்ந்தார்.

'கவலைப்படாதே சாரநாத் எல்லாம் சரியாகிவிடும்,' என்று தைரியமூட்டிவிட்டுச் சுந்தரவதனமும் தன் வேலையைக் கவனிக்கப் புறப்பட்டுச் சென்றுன். நாட்கள் பதினைந்தும் ஓடினபிறகுதான் சுகுமாரிக்குப் பேச முடிந்தது. அம்மை முத்து முத்துக்களாகத் தன் மீது ஆக்கிரமித்திருப்பதை அப்புறம்தான் தெரிந்து கொண்டாள். சாரநாத்துக்கு உள்ளூர உண்டான சங்கடத்துக்கு அளவே யில்லை.

'எப்படி யிருந்தவள், எப்படி மாறிவிட்டாள். நாளைக்குத் தன் மாறுதலை அவள் அறியும் போது ஏற்கனவே யிருந்த கர்வம், இறுமாப்பெல்லாம் எப்படி...இனி யார் இவளை மணந்து கொள்ள முன்வருவார்கள்? இதுமாதிரி பல பிரச்னைகள் அவன் சங்கடத்தைப் பெருக்கியது.

ஒரு மாதமாயிற்று அவள் எழுந்து உட்கார! கண்ணுடி அவளைப் பரிகசித்தது. பார்க்க வந்த தோழிகள், ஐயோ பாவம்!' என்று சோகத்துடன் துக்கம் விசாரித்தார்கள்!

'அப்பவே நடந்திருக்க வேண்டியது. சுந்தரவதனம் கூடத் தவியாய்த் தவித்தார். ஆனுல் அதிர்ஷ்டம் வேறே மாதிரியாய் இருந்ததனுல்...இனி யார் வரிப்பார்கள்?

நிலைக்கண்ணாடியிலே அவள் முகம் கோரமாகக் காட்சியளித்தது. நீண்டு வளர்ந்த கருங் கூந்தல் இப்போது எங்கே? அகன்ற சந்திர பிம்பம் போன்ற வதனம் இப்போது எண்ணிக்கையற்ற அம்மைத் தழும்புகள் நிறைந்து அசங்கியமான முகமாக மாறிவிட்டதைக் கண்டு அவள் தவிப்பு வளர்ந்தது. அவள் கண்கள் கலங்கிக் கண்ணீர் சொரிந்ததைப்போல இதயமும் குமுறியது.

அண்ணனுடன் முகங் கொடுத்துப் பேசக்கூட அவளுக்குத் தைரியமில்லை. அவனே செயலற்றப் பொம்மையாக இருந்தான்.

சுந்தரவதனம் ஒரு தினம் எதிர்பாராதபடி அங்கு வந்து சேர்ந்தான். சுகுமாரியின் 'மாறுதல்' அவனுக்கு வியப்பையும் துக்கத்தையும் உண்டுபண்ணினாலும் உள்ளூர அவன் மனதிலே உவகையும் ஏற்பட்டதென்றே சொல்ல வேண்டும்! இல்லாவிட்டால் அவன் அப்படிச் சொல்லியிருப்பானா?

"நிச்சயமாகவே கேட்கிறாயா அல்லது கேலி செய்கிறாயா?" என்று சாரநாத் கேட்டான். அவளோ தன் முட்டாள்தனத்துக்கும், கர்வத்துக்கும் அவன் பழிவாங்கத்தான் இப்படிக்கேட்கிறான் என்று மனமொடிந்து விட்டாள். ஆனால் அவன் திரும்பவும் அழுத்தமாகத்தான் சொன்னான்.

"நான் காதலித்த சுகுமாரியை ஏற்கனவே எப்படி என் இதயக் கோயிலில் வைத்துப் பூசித்தேனோ அப்படியேதான் இன்னும் இருக்கிறாள்; என்றும் இருப்பாள். இனி யாவது மனம் மாறி என் நீண்ட கால அபிலாஷையைப் பூர்த்தி செய்ய முன் வருகிறாயா சுகுமாரி"......

பதில் எப்படியிருந்திருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? மறுபடியும், சில தினங்களில் அதே வீட்டில் அவள் பிறந்த நாட் கொண்டாட்டத்துக்கு வந்திருந்த கூட்டம் இருமடங்காகப் பெருகி வந்திருக்கத்தான் வேண்டும்!

✲

காதல்

உலகத்தில் காதலைப்பற்றி மனிதன் எழுதியிருக்கும் மிக அற்புதமான கதையையோ கவியையோ நான் பார்க்க நேர்ந்தால், அதை எழுதி வைத்துக் கொள்வதற்காகப் பேனாவையும் கடுதாசியையும் தேடுவேனென்று நான் கருதவில்லை. அவ்வாறு நான் தேட நேர்ந்தால் அதற்குப் பின்பு நான் மிகவும் வருந்துவேன். இதரருக்குக் காம வெறியூட்டும் முறையில் காதலைப்பற்றிப் பேசவோ, எழுதவோ கூடாது. உலகத்தில் காதல் அவசியம் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அந்தக் காதல் விஷயம் ஏற்கனவே மலிந்து கிடக்கிறது. எனவே நாம் அதை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. உலகத்துக்குத் தேவையான வேறு பலவகை உணர்ச்சிகளும், 'பாவ'ங்களும் இல்லையா? அத்தகைய உணர்ச்சிகளைப்பற்றி எழுதலாமே! இரக்கம், அன்பு, சுயநலத் தியாகம் முதலிய லட்சியங்களைக் கையாளலாமே. மனித சமூகத்துக்கு இது மகத்தான பயனளிக்குமே?

—'மான்வனி
(இத்தாலியக் கவிஞர்)'

மனோரதம்

ய. ல. நா.

'முருவாயி! முருவாயி!

இந்தா, எ குட்டி! முருவாயி... திரும்பத் திரும்பப் பலமுறை அவன் அழைத்தும் பயனில்லை. அவள் அங்கே இருந்தால் அல்லவா, கூப்பிட்டவுடன் ஏன் என்று கேட்க!

'எங்கதான் பூட்டான்னு தெரியல்லியே' என்று புலம்பிய வண்ணம் மெதுவாகப் படுக்கையை விட்டு எழுந்திருக்க முயன்றான். அவன் எழுந்திருப்பதற்குள்ளாக 'இருமல்' படையெடுத்து விட்டது. லொக்லொக்கென்று இருமிக் கொண்டே திரும்பவும் படுத்து விட்டான். சுமார் பத்து நிமிஷங்கள் வரை இருமல் அவன் மீது கொடுமையாக ஆக்கிரமித்துவிட்டு அகன்ற போது அவன் மிதியுண்ட புழுப் போல் துடித்துத் திணறினான். மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கி, அவனுடைய வரண்ட முகத்திலே வியர்வை யரும்பியது. குழி விழுந்த கண்களிலே இரண்டொரு துளி நீர் தெரித்துப் பார்வையை மறைத்தது.

மீண்டும் இருமல் வராதிருக்கவோ, என்னவோ சுருட்டி மடக்கிக் கொண்டு குப்புறப் படுத்துவிட்டான்.

இருமல் கொடுமை மெதுவாகக் குறைந்து அந்த இடத்திலே அலாதியான அமைதியை ஏற்படுத்தியது.

மீண்டும் அவன் 'முருவாயி' 'முருவாயி' என்று அழைக்க ஆரம்பித்து விட்டான். 'அட எங்கே பூட்டா இவ?' என்று முணு முணுத்த வண்ணம் வாசற் கதவுப் பக்கம் பார்வையைச் செலுத்தினான்.

ஐயோ! மானம் குமுறிக்கிட்டு இருக்குது. அட! புல்லும் வாணும் ஒண்ணும் வாணான்னுப் பன்னிப் பன்னிச் சொன்னேன். இந்தக் குட்டிக் கேக்காம...எ! முருவாயி!

* * •

ஆனால் அவனுடைய தீனக் குரல் அந்த வீட்டிலிருந்து சுமார் ஒரு மைலுக்கப்பால் புல் அறுத்துக்கொண் டிருந்த முருகாயியின் காதில் எப்படி விழும்? வானம் இருந்தாற்போ லிருந்து கலக்க மடைந்துவிட்டது. கரு மேகக் கூட்டம் எங்கிருந்தோ குபுகுபு வென்றோடி வந்து வான வீதியை மறைத்துக் கொண்டது. முருகாயி வானத்தை அண்ணாந்து பார்த்து விட்டு, சிதறிக்கிடந்த புற்களை ஒன்று கூட்டிக் கட்டலானாள்.

ஆனால் மழை அவளுக்காகக் காத்துக்கொண் டிருக்கவில்லை. தொலை தூரத்திலே மின்னல்

வெட்டும், இடி முழக்கமும் கூடி மழை வேகத்தை முடுக்கி விட்டது.

முருகாயி புல் கட்டைத் தலையில் எடுத்து வைத்த அதே சமயம் மழையும் பெய்ய ஆரம்பித்தது. முருகாயி வேகமாகத்தான் நடந்தாள். ஆனாலும் வயல் வரப்பு பூராவும் மழைத் தண்ணீரால் நனைக்கப்பட்டு வழுக்கியது. ஆகவே சோனாமாரியாகப் பொழியும்மழை வழுக்கல் பாதையும் அவளுடைய நடை வேகத்தைத் தடைப் படுத்தினாலும், அவள் மனம் வீட்டிலே காசநோயால் பீடிக்கப்பட்ட தாத்தா வண்டை அதிவேகமாக ஓடியது. 'அவருக்குத் தாத்துக்குத்தண்ணி கொடுக்கக்கூட பக்கத்துலே யாருமில்லையே', என்று அவள் மனதிலே எண்ணம் ஏற்பட்டவுடன் கால்கள் வேகமாகத்தான் நடை போட்டன. 'சின்னப்பய மாட்டைக் கொணர்ந்து கட்டினானோ, இல்லே சும்மா கொல்லைலே உட்டுட்டுப் பூட்டானோ என்னவோ? எங்கயாவது தாத்தா மாட்டைக்

கட்டறேன்னு போயி உளுந்து கெடக்கப் போருரே?

இந்த நினைவு உண்டாகியதும் அவள் உடலும், உள்ளமும் என்னமோ சங்கடப்பட்டது. அழுகைகூட வந்து விட்டது. ஆனாலும் மழையும், வழுக்குத் தரையும் அவள் தாத்தாவுக்காக இரக்கப்பட வேண்டிய அவசியம் என்ன?

* * *

அவள் வீட்டுக்குள்ளே நுழையும் சமயமும், அந்த மழையின் நிறுத்த சமயமும் ஒன்ருயிருந்தது தான் ஆச்சரியம்! 'பாழும் மழை' என்று சபித்துக் கொண்டே அவள் புல்கட்டைத் திண்ணை மீது போட்டபோது உள்ளே யாரோ பேசிக்கொண் டிருப்பது கேட்டுத் திகைப்படைந்து நின்ருள்.

'நான்' அப்பவே சொன்னேண்டா வேணுன்னு, இந்தப் பாழும் மழைலே போயி இந்தக் குட்டி லோலாயப் பட்டுக்கிட்டு ......அடக் கடவுளே, அது பொறந்த நாள்லேருந்து இப்படித் தாண்டா கஷ்டப்படுறது. அது தலைலே......'படுத்துக்குங்க, அது வந்திடும்...'

'இல்லேடா' இல்லே! நீ வாணுப்பாரு ஒரு பெரிய சுமைப் புல்லைத் தூக்கிக்கிட்டுத்தான் வருவாடா ரங்கா!

'ரங்கா...அத்தான் ரங்கனு வந்திருக்கான்?' முருகாயி கதவிடுக்கால் எட்டிப் பார்த்தாள். 'மிலிட்டேரி ஆசாமி' ரங்கன் தாத்தாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் அவளுக்கு வெட்கத்தால் கருத்த முகம் சிவந்தது! 'இந்த மாதிரி நெனைஞ்ச சேலையுடன் அவன் எதிரில் எப்படிப் போறது? நாளைக் காலைல்லே வராருன்னுல்லே அத்தை சொல்லிச்சு!, இப்ப என்னன்னு திடுதிப்புன்னு வந்து குந்திக்கிட் டிருக்காரே...

'ஏலே, ரெங்கா அவ இன்னும் வரலியேடா...அடக் கடவுளே, இப்புடி நனைஞ்சா உடம்பு என்னத்துக்காகும்? நாளைக்கு நீயும் சரி, உங்கம்மாளும் சரி'

'தாத்தா நீ அலட்டாமே படுத்துக்கோ நான் பாக்கறேன் வாராளான்னு! என்று அவன் சட்டென்று எழுந்து கதவைத் திறந்த போது வெடவெடவென்று குளிரால் நடுங்கிக் கொண்டே நின்ற முருகாயி என்ன செய்வதென்று தெரியாமல் கொல்லைப் புறமாக விழுந்தடித்துக் கொண்டு ஓடினுள்.

'தாத்தா, முருவாயி வந்திடிச்சு! என்று கூறிக்கொண்டே கதவைச் சாத்தினுன்.

'ஏ, குட்டி! மழைலே நனைஞ்சுக்கிட்டுத்தானே வந்தே? உம், உன் அதிர்ஷ்டம் இப்படியிருந்தா......ஏன்! உன் அதிர்ஷ்டம் இனிமே நல்லாத்தான் இருக்கும். சண்டைக்குப் போனவன் சுகமாத் திரும்பிட்டத்திலேருந்தே.........அது சரி தம்பி, உன் ஆயி என்ன சொன்னு? இன்னும் பத்துநாள் தானே இருக்கு தை முடிய? என்று அவசர அவசரமாகக் கேட்டுவிட்டு அவன் முகத்தை ஆவலுடன் பார்த்தார். வேறு புடவை மாற்றிக்கொண்டு, கையில் குடத்துடன் தண்ணீர் கொண்டு வரப் புறப்பட்ட முருவாயி சட்டென்று நிமிர்ந்து அத்தானை ஒருமுறை விழுங்கி விடுபவனைப் போல் பார்த்து விட்டுக் குனிந்தபடி நடந்தாள்.

திடீரென்று கிழவன் மீது இருமலுக்கு மீண்டும் ஆசை உண்டாகிவிட்டது. டக்கென்று

கீழே குடத்தை வைத்துவிட்டு முருகாயி ஓடிவந்து அவன் தலையைப் பிடித்துக்கொண்டாள். ரங்கன் பயத்துடன் கிழவனையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தான்.

'ரங்கா, இனிமே தாங்காது. ஒரு நாளைப்பாத்து அவ கையைப் பிடிச்சுக்கோ. அப்புறம்தான் நிம்மதியா, நான் சாகமுடியும்!' என்று சொல்லிவிட்டுப் படுத்துக்கொண்டான்.

* * *

ராணுவத்திலே 'நாயக்' பதவி வரை ஊர்ந்து சென்று தற்போது உயிருடன், அழகான உடையுடன் திரும்பி வந்திருக்கும் ரங்கனின் தாய் கிழவனை நாடி வந்தபோது கிழவனுக்கு இருமல் இல்லை. ரங்கனிடம் சொன்னதைத்தான் அவளிடமும் அவன் சொன்னான். அவளோ தயங்கித் தயங்கி, "அதுக்கென்ன பண்றது அய்யா, நான் அவளை மருமவளா வச்சுக்கக் கொடுத்துவக்கலே." என்று சொன்னதும் கிழவனும் சரி, முருவாயிம் சரி, திடுக்கிட்டு விழித்தனர்.

சின்னயி விவரமாகச் சொல்ல அதிக நேரமாகவில்லை. முருகாயி அந்த நிமிஷம் வரை கண்ட கனவுகள் எல்லாம் கருகிப் புகைந்து போயின. சின்னஞ்சிறு குழந்தைகளாயிருந்தது முதலே அவர்கள் இருவருக்கும் முடிபோட்டு விடுவதென்று பெரியவர்கள் நிச்சயித்திருந்தார்கள். தாயும், தந்தையுமில்லாத அவளைத் தன் மருமகளாக்கிக் கொள்ள சின்னயி நெடுநாளாகவே முயற்சித்தாள். ஆனால் யுத்தம் வந்ததும் அவன் ஓடிப் போய்விட்டான். யுத்தம் முடிந்ததும் நல்ல பிள்ளையாய் வீடு திரும்பி விட்டானனாலும் முருகாயியைக் கல்யாணம் செய்துகொள்ள முடியாதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டான்.

கடந்த ஐந்தாறு வருஷங்களில் அவன் எத்தனையோ தேசங்களுக்குப் போயிருக்கிறான். எவ்வளவோ பேர்களுடன் பழகியிருக்கிறான். நாகரீக உலகில் நடமாடும் நாகரீக வாலிபனாகிவிட்டான். முன்னைப்போல் எழுதப் படிக்கத் தெரியாத ரங்கசாமிப் படையாச்சியா இவன்? தடலடியாக இங்கிலீஷ் பேசும், சிகரெட் பிடிக்கும், வெள்ளைக்காரனைப் போல் ஹாட், சூட் அணியும் மிஸ்டர் ரங்கசாமி சர்வசாதாரணமான கிராமப் பெண்ணான முருகாயியை, மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கிழவனோ, அல்லது அவளோ எதிர்பார்த்தது விந்தையிலும் விந்தையில்லையா?

சின்னயி அதிகநேரம் அங்குத் தங்கியிருக்கக்கூட மனமில்லாதவளாய் தன் வீடு திரும்பி விட்டாள். கிழவன் தன்னுடைய நீண்டகால மனோரதம் ஒரு நொடியில் புகைந்து விட்டதைக் கண்டு பாதி உயிர் இழந்தவனாகச் சுருண்டு விழுந்து விட்டான்.

முருகாயி இவ்வளவு காலமாக எந்தக் கனவு கண்டுக்கொண்டு காலத்தைத் தள்ளினளோ அந்த கனவு—அவளுடைய நீண்டகால ஆசை ஒரு நொடியில் அவலமாகி விட்டது. என்றாலும் அத்தான் ரங்கன் தன்னை இப்படி மோசம் செய்துவிடுவான் என்பதை அவளால் நினைக்கவும் முடியவில்லை. தன்னை ரொம்ப நாகரீகமடைந்தவனாக எண்ணிக்கொள்ளும் அவன் பேதையான அவளை 'மோசம்' செய்வதை நாகரீகம் என்று எப்படிச் சொல்லுவது?

கிராமத்திலே உள்ள அத்தனை பேரும் சின்னஞ்சிறு வயதிலே யிருந்து 'அவர்களுக்கு முடி போட்டுத்தான் வைத்திருந்தார் கள். இப்போது ரங்கசாமி முன்னெல்லாம் மாடு மேய்த்த, கலப்பைப் பிடித்த ரங்கசாமியா என்ன? நாகரீக மனுஷனிடத்தில் சொன்னபடி நடக்கும் உயர்ந்த பழக்கம் இருக்குமா என்ன?

முன் ஒருநாள் நடந்த சம்பவம் அது. அப்போது ஊரிலே நாலு பேர் அவனைக் காலி, தறுதலே என்றெல்லாம் தூற்றுவார்கள். அவன் தாய் சின்னுயி இப்படியும் தனக்கு ஒரு மகன் பிறந்து தொலைக்கணுமா என்று நொந்து கொள்வாள். ஆனல் அந்த முரட்டு ரங்கன் கூட ஒரே ஒரு ஆசாமி இஷ்டப்படி நடக்கத் தவறவில்லை.

'என்ன அத்தான், நீ இப்படி நாலுபேரு தூத்தும்படியா இருக்கலாமா? ரெண்டு எழுத்தாவது கத்துக்கிட்டு கொஞ்சம் படிச்ச நாகரீக மனுஷனு இருக்கக்கூடாதா? என்று ஒரு நாள் தூண்டினபோதுதான் அவனுக்குத் தான் இனியும் கைநாட்டுப் பேர்வழியாக இருக்கக் கூடாது என்று தீர்மானிக்க முடிந்தது.

அதென்ன அதிசயமோ, ஆறே மாசத்தில் ரங்கசாமி 'படிப்பாளியாய்' விட்டான். இங்கிலீஷிலே கையெழுத்துப் போட மட்டும் அல்ல. ஓரளவு எழுதவும் படிக்கவும் கூட கற்றுக்கொண்டு விட்டான் என்றால் அதிசயப் படக்கூடிய விஷயமில்லையா?

ராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் ஆசாமியின் பார்வை இவன் மீது திரும்பியது. தாயும் பாட்டனும் அலறினர்கள். முருகாயி 'உள்ளத்தை வச்சுக்கிட்டு ஊராளலாமே?' என்றாள்.

'இந்தாப்பாரு, முருகாயி இவன் சொன்னு சொன்னது தான். நாளைக்கு யுத்தம் முடிஞ்சு வந்ததும் உன்னைத்தான் கட்டிக் கப்போறேன். ஆயிமகமாயி பேரிலே சத்தியமாச் சொல்றேன் நிச்சியம் கலங்காம இரு கண்ணு' ......என்றெல்லாம் உறுதி கூறி விட்டுத்தான் புறப்பட்டான்.

'அதெல்லாம் இப்போது மறந்துபோன கதையாய் விட்டது. ஆயிமகமாயி பேரிலே சத்தியம் பண்ணிட்டாப்லே மகமாயியா வந்து தடுக்கப்போரு?' இப்படி யெல்லாம் யோசித்து யோசித்து அவள் மூளைகூட கலங்கிவிட்டது. அவள் பிரமை பிடித்தவள்போல் இருப்பதைப் பார்க்க கிழவன் இதயம் நொந்தது. நொந்த மனம் வியாதியை ஊக்கிவிட்டது. அந்த இரவு இருவருக்கும், அதாவது முருகாயிக்கும், கிழவனுக்கும் யமவாதனை தந்த இரவாக மாறி விட்டது.

எங்கேயாச்சும் ஆறு, கொளத்துலே உளுந்து செத்துடப் போருளே, என் முருவாயி! என்று முணுமுணுத்தான். குமுறிக் குமுறி புலம்பினன் தனக்குள்ளேயே! ஐயோ! தான் சாவுறபோது அவளுக்கு ஒரு வழிபண்ண முடியல்லியே தன்னுலே? என்று நினைத்த போது அழக்கூட அழுதான். இரவு பூராவும் அவன் கேவிக் கேவி அழுததை ஏக்கமே உருவெடுத்துத் துவண்டுகிடந்த முருகாயி அறிந்தாளோ இல்லையோ?

இங்கே இரவு பூராவும் இரு ஜீவன்களும் தவித்திருக்கும் போது அங்கே ரங்கசாமி தன் வாத்தியார் வீட்டிலே இரவைக் கழித்தான். அவரிடம் அவன் நன்றியை அறிவிக்காமலிருப்பது பாவமில்லையா என்று அவனுக்குத் தோன்றியிருக்கலாம். இடையிலே வாத்தியார் கேட்டார்: முருகாயிக்கும் உனக்கும் என்னிக்குக் கல்யாணம்?'

ரங்கன் இந்தக் கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. முகத்தைச் சுளித்துக்கொண்டு மவுனமாயிருந்தான். திரும்பவும் அவர் கேட்டபோது. 'இல்லீங்க, நான் அவளைக் கட்டிக்கப் போற தில்லேன்னுட்டேங்க. நம்ம நாகரீகத்துக்கும் இந்தப் பட்டிக் காட்டு......' வாத்தியார் சட்டென்று படுக்கையை விட்டு எழுந்ததைக் கண்டதும் ரங்கன் பேச்சை நிறுத்திவிட்டு எழுந்தான். அவர் முகம் கோபத்தால் கருத்ததைக் கண்டு அவனுக்குக் கொஞ்சம் பயம்கூட உண்டாயிற்று!

'அப்ப யாரைத்தான் கட்டிக்கப் போறே?'

'நான் வந்துங்க...மேலே பேச முடியவில்லை அவனுக்கு. உபாத்தியாயரிடம் உண்மை சொல்லத் தைரியமில்லை. 'தம்பி, இப்படித் தான் நம்ப காளப்பட்டிலே ஒரு பையன் துள்ளிஞன். அந்த ஊருப் பள்ளிக்கூடத்து வாத்தியாரிச்சி ஒருத்தி யிருக்காள்ல அவ என்னமோ கொஞ்சம் டீக்கா இருப்பா போலருக்கு? அவளைக் கட்டிக்கப்போறேன்னு தவிச்சான். அவன் மட்டும் இல்லே. அஞ்சாறு பேருங்க அவளைச் சுத்திக்கிட்டே யிருந்தானுக......என்ன தம்பி இப்படிப் பாக்கறே? அடேடே! என் உன் கண் கலங்குது? உனக்குத் தெரியுமா அவளை?

அவன் பதில் கூருமல் பிரமை பிடித்தவன் போல் வெறிக்கப் பார்த்தான்.

'நான் நாலஞ்சு நாளைக்கு முன்னே அங்கே போயிருந்த போது ஒருத்தன் எவனே மிலிட்டரிலேருந்து வந்தவன் அவளைச் சுத்திக் கிட்டுத் திரியரான்னு சொன்னுங்க, ஆனப் பாரு ஒரு அதிசயத்தை, அந்த வாத்தியாரிச்சி திடுதிப்புன்னு நேத்திக்கு என்ன செஞ்சா தெரியுமா? என்று கேட்டுவிட்டு அவனைக் கீழ்க் கண்களால் ஆராய்ந்தார். அவனே மூந்தா நாள் தானே அவளைச் சந்தித்து விட்டு வந்தோம். அவனிடம் தான் அவள் எவ்வளவு பிரியமாகப் பேசினுள்; இதற்குள்ளாக அவள்......

"எல்லாம் மட்டிப் பசங்க கண்ணுலேயும் மண்ணைத் தூவிப் புட்டு செல்லூரு டாக்டர் ஒருத்தரை மாதா கோயில்லே போயிக் கல்யாணம் பண்ணிக்கிட்டா," 'ஆ' என்று தன்னையும் அறியாமல் கத்திவிட்டான் ரங்கன். இந்த வாத்தியாரம்மாமீது கொண்ட மோகம் தானே முருவாயியை......

ரங்கன் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. இருளைக் கிழித்துக் கொண்டு விழுந்தடித்துக் கொண்டு ஓடினன். மாரியம்மன் கோயிலைத் தாண்டும்போது சரசரவென்று எதோ நகரும் சத்தம் கேட்டு அஞ்சி நின்றுவிட்டான். கோயில் வாசலிலே நின்ற உருவத்தைக் கண்டு அவனுக்கு உடல் வெட வெடத்தது. உள்ளங் குமுறியது. அவன் சிப்பாய் நெஞ்சம் பதறியது!

கிட்ட நெருங்கும்போது அவ்வுருவம் ஆடாது அசையாது நிற்பது கண்டு அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

'யார் அது?' என்று நடுங்கிய குரலில் அவன் கேட்டதும் அவ்வுருவம் திரும்பியது. வேறு யார்? முருகாயிதான்.

'நீயா முருகாயி, இந்தக் கும்மிருட்டில்! ஐயோ, பயமாயில்லையா?

'பயமா? எனக்கா? சத்தியத்தை மீறினவங்களுக்கு, தெய்வத்தை ஏமாத்தறவங்களுக்கெல்லாம் பயமாயில்லாத போது எனக்குமட்டும்...'

'மன்னிச்சுக்கோ முருகாயி!' என்று கூறினவன் மேலே பேச முடியாதுகோ வென்றுகுழந்தை போல அழுதான். பெண் உள்ளம் அவன் உள்ளத்தை அறிய அதிக நேரமாகவில்லை.

'ஆயிமகமாயி புண்ணியத்திலே நான் கொஞ்சம் புத்திதெரிஞ்சிக்கிட்டேன முருவாயி...வா. தாத்தா கால்லே போய் உளுந்து சாகப்போற அந்த மனுஷன் மனசுக்கும் சந்தோஷ மூட்டலாம்', என்று சொல்லிக் கொண்டே அவள் கையைப் பற்றிக்கொண்டு புறப்பட்டான். குபீரென்று அவள் முகத்திலே இன்ப ரேகை படர்ந்தது.

இருவரும் அப்பொழுதே, மகமாயி கோயிலிலிருந்தே தங்கள் வாழ்க்கைப் பிரயாணத்தைத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் வீட்டுக்குள்ளே நுழையும் சமயமும் 'முருவாயி' என்று கிழவன் தீனக் குரலில் அழைப்பதும் ஒன்ருயிருந்தன.

❋

செல்லப் பெயர்கள்

ஆயிரக் கணக்கில் செலவழித்து நாமகரணம் செய்கிருேம். கடவுள் பெயராக இருந்தால் நம்மை யறியாமல் நாம சங்கீர்த்தனம் செய்து அருள் பெறலாமே என்று. ஆனல் அப் பெயர்கள் எப்படி மாறிவிடுகின்றன.

வேணுகோபாலன்—வி. ஜி. பால்
அருணகிரிநாதன்—ஏ. ஜி. நாத்
சரஸ்வதி—சேரா
பவானி—நின்னி
கிரிதரதாஸ்—கிக்கிடு
நளினாட்சி—நளிச்சி
நாகலட்சுமி—நாய்ச்சி
கோதண்டபாணி—கொடாஞ்சி.

இதற்குக் காரணம் எல்லோருக்கும் தெரியும்!

ஸ்ரீதனம்

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் ஸ்ரீ ரஞ்சித் எஸ். பண்டிட்டை மணந்துகொண்டபோது விஜயலட்சுமிக்கு 101 ஜோடி புடவைகள், 101 ஜோடி ஜாக்கெட்டுகள், 101 ஜோடி செருப்புகள், 101 ஜோடி ரவிக்கைகள், 50 ஜோடி தாவணிகள் இன்னும் நிறைய நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், எல்லாம் கிடைத்தன என்று பிரபல அமெரிக்க நாவலாசிரியையான ஸ்ரீமதி பெர்ள்பக் கூறுகிருர்.

கற்பனைக் கட்டுரை இல்லை இது. சுய சரிதைதான் என்று கூறிக்கொள்ளும் போது நாம் நம்பத்தான் வேண்டும். இல்லாவிட்டால் இரண்டுகால் பிராணிகளான......

இந்தப் புருஷர்கள்

●

வேம்பு

“சென்ற மங்கையில் இதே தலைப்பில் ஒரு கட்டுரை வெளி வந்தது. அதில் இந்தப் பிராணிகளை வெகு எளிதில் திருப்தி செய்து நம்மிஷ்டப்படி ஆட்டி வைக்கலாம் என்று பொருள்பட எழுதியிருந்தது. இதோ என் உண்மையான ஜீவ சரிதையை எழுதுகிறேன். இந்த இரண்டு கால் ஆண் பிராணிகள் அவ்வளவு எளிதில் திருப்தியடைந்து விடுகின்றனவா என்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

நான் ஐந்து வயதுக் குழந்தையாக இருந்தபோது என் தாயார் என்னை விட்டுப் பிரிந்து விண்ணுலகம் சென்றாள். என் தகப்பனார் “என்னைப் பராமரிப்பதற்காக” மறுமணம் செய்துகொண்டார்.

ஆனால் அதிர்ஷ்டவசமாக என் மாற்றாந்தாய் என்னைக் கஷ்டப் படுத்தவில்லை. ஐயாயிரம் ரூபாய் வரதட்சணை கொடுத்து ஐயாயிரம் ரூபாய் சீர் செய்து ஒரு எம். ஏ. யைத் தேடி என்னைக் கல்யாணம் செய்து கொடுத்தார்கள். ஆனால் அந்தச் சர்வ கலாசாலை அதிகாரிகள் அவருக்களித்த பட்டத்தில் ஆங்கில நான்காம் எழுத்தையும் சேர்க்கத் தவறி விட்டார்கள். அவரைத் திருப்தி செய்யவும் வாழ்க்கையை இனிமையாகச் செய்து கொள்ளவும் நான் செய்த முயற்சிகளெல்லாம் விழலுக்கிறைத்த நீராயிற்று. காரணம் என்னவென்றால் அவருடைய பதினாறு ஆண்டுப் படிப்பில் அவர் ஒருசிறிய படிப்பினையைக்கற்றுக் கொள்ளவில்லை. தன்னைப் போல மற்றவர்களும் உணர்வுள்ள ஜீவன்கள் என்ற உயிர் நூல் முதல் சூத்திரத்தை அவர் படிக்கவேயில்லை.

கல்யாணத்திற்குப் பிறகு சாந்தி முகூர்த்தத்திற்காக என் தகப்பனாரிடம் இரண்டாயிரம் கறந்தார். ஏதோ பகவான் புண்ணியத்தில் யுத்தம் வந்து ஆடைகள் விலை அதிகரித்ததால் துணி வியாபாரியாகிய என் தகப்பனாருக்குப் பணம் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் இவ்வளவு பணம் செலவழித்தும் தன் அருமைப் பெண்ணின் சந்தோஷ வாழ்க்கையைக் கண்டு ஆனந்திக்க முடியவில்லையே என்று பொருமினார்.

என் கணவன் தன்னுடைய இஷ்ட மித்திர பந்து ஜனங்கள் எல்லோருக்கும் சகாய விலையிலோ, இலவசமாகவோ என் தந்தை ஆடைகளைக் கொடுக்கவில்லை என்று பொருமினார்.

மனித உணர்ச்சிகளை இயற்கையன்னை சட்டை செய்வதேயில்லை. எங்களுக்குள் எவ்வளவு அபிப்பிராய பேதங்களிருந்த போதிலும் இரண்டு குழந்தைகளும் மூன்று கர்ப்பச் சிதைவுகளும் ஏற்பட்டன.

மூன்றாவது கர்ப்பச் சிதைவுக்குப் பிறகு எனக்கு இரத்த சோகை ஏற்பட்டு அதற்காகச் சிகிச்சை பெறப் பிறந்தகம் வந்தேன். டாக்டர் எனக்கு ஊசியில் மருந்தேற்றி பிழைக்க வைத்தார். அவர் ஒரு வருஷத்திற்குள்

நான் மீண்டும் கர்ப்பம் தரித்தால் அதோடு என் ஆயுள் முடிந்து விடும் என்று என் தகப்பனரிடம் சொல்லி என்னை அவருடனேயே வைத்துக் கொள்ளும்படி சிபாரிசு செய்தார்.

உங்கள் பத்திரிகையில் சீக்கிரத்தில் திருப்தியடைந்து விடும் என்று விவரித்த புருஷப் பிராணி என்னைத் தன்னுடன் அனுப்ப இசையவில்லை என்று என் தகப்பனருடன் மல் யுத்தம் செய்ததோடன்றி என் வைத்தியரிடமும் போய் சண்டை பிடித்தது. என் இரண்டு வயதுக் குழந்தையை பலவந்தமாகத் தூக்கிக் கொண்டுபோய் அதற்குச் சாப்பாடு விடுதிகளில் கண்டதை யெல்லாம் வாங்கிக் கொடுத்து அந்தக் குழந்தைக்குச் சீதபேதியும் கடுமையான ஜுரமும் வந்திருக்கிறது.

இதையெல்லாம் ஏன் எழுதுகிறேன் என்றால் நீங்கள் எனக்கு ஏதாவது யோசனை கூறக்கூடும் என்றுதான்.

எல்லாப் பிரச்னைகளையும் போலவே உங்கள் பிரச்னைக்கும் இரண்டு வாதங்கள் இருக்கின்றன. உங்கள் வழக்கை எடுத்துச் சொல்லிவிட்டீர்கள். உங்கள் கணவன் வழக்கை கேட்கவில்லை. நான் கேட்கவும் வேண்டாம். உங்களுக்கு நான் யோசனை கூறுகிறேன். ஆனால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்பது ஐயம் தான்.

நீங்கள் உங்கள் கணவனுடன் அவரில்லத்தில் சென்று வசிப்பது தான் உசிதம். எந்தப் பெண்ணையும் அவள் விருப்பத்திற் கெதிராக அவள் கணவனல்கூட பலவந்தம் செய்ய முடியாது. புருஷர்களைத் திருப்தி செய்யப் பல வழிகள் உண்டு. அவர்களுடைய மனதை இன்புறச் செய்ய இறைவன் பெண்களுக் கெனவே பல கலைகளை அருளியுள்ளார். இங்கிதமான பேச்சினலும், மனதைக் கவரும் சங்கீதத்தினலும் உள்ளத்தை மயக்கும் எழிலினலும் (செயற்கையோ, இயற்கையோ) ஆடவருள்ளக் கிளர்ச்சியை அடக்க முடியாதவனைப் பெண்கள் தங்கள் இனத்தில் வைத்துக்கொள்ள மாட்டார்கள்.

என் யோசனையை மேற்கொண்டு பாருங்கள். வெற்றி உங்களது என்பதில் எனக்கு ஐயமில்லை.

✲

தன்னை மறந்து விடுதல்

டாக்டர் ராவ், பி. ஹெச்: டி. எஸ். ஸி., ஒரு பெரிய விஞ்ஞான ஆராய்ச்சியாளர். ஒலியின் தன்மையை ஆராய்ந்து பிரக்கியாதி பெற்றவர். தம் ஆராய்ச்சியைத் தொகுத்து ஒரு நூல் வரைந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் மனைவி குழந்தையைக் தூக்கிக்கொண்டு ஓடி வந்தாள். "ஐயையோ, ஓடுங்கோ டாக்டரிடம் குழந்தையுடன். அவள் பெரிய சதங்கையை விழுங்கிவிட்டாள்" என்று கூவினள்.

டாக்டர் ராவ் குழந்தையைத் தூக்கிக் கொண்டு டாக்டரிடம் ஓடினர். குழந்தை சதங்கையை விழுங்கி விட்டது என்பதை நிரூபிக்க தமது மனைவி தம்மிடம் செய்து காட்டியது போலவே டாக்டரெதிரில் குழந்தையைத் தூக்கி ஆட்டினர்!

பெண்களும் யோக ஆசனமும்

சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமி

யோக ஆசனங்கள் நூற்றுக் கணக்காய் இருக்கின்றன. எல்லாவற்றையும் செய்ய வேண்டுமானால் நேரமும் இருக்காது. அவசியமுமில்லை. சரீரத்தில் இருக்கும் எல்லா உறுப்புகளுக்கும் வேலை கொடுக்கும்படியான முக்கியமான சில ஆசனங்கள் செய்தால் போதுமானது.

சில ஆசனங்கள் இளம் வயதுள்ளவர்கள், சிறுவர்கள் மாத்திரம் செய்யக்கூடியதாய் இருக்கின்றன. சில பிரம்மசாரிகளே செய்யக்கூடியவை. சில யோகம் சித்திக்க துறவிகளால் செய்யக்கூடியவை. சில எல்லோராலும், எல்லா வயதினராலும் செய்யக் கூடியவை.

எந்த வயதில் ஆரம்பிக்கலாம்?

நாம் சொல்ல எடுத்துக் கொண்ட ஆசனங்கள், நம்மைப் போல குடும்பஸ்தர்களாய், பிள்ளைக் குட்டிகளைப் பெற்று, நோய் கொள்ளாமல் வாழ்வதற்கே ஆகும். இவைகளை 10 வயது முதற்கொண்டு, 60 வயது உள்ள சகோதரி, சகோதரர்கள் ஆரம்பித்துப் பழகலாம். இளம் வயதினர்களுக்கு வெகு சுலபமாய் வரும். வயதானவர்களுக்கு ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாய் இருக்கும். எதற்கும் ஆர்வத்துடன் பழகினால் கஷ்டம் தெரியாது.

நோயாளிகளும் செய்யலாம்

இந்த யோக ஆசனங்களிலுள்ள மகிமை என்னவென்றால், நோய் வராமல் தடுப்பது மாத்திரமல்ல, நோயாளிகளும் செய்தால் குணமடையலாம என்பதே. ஒவ்வொரு நோய்க்கும் சில குறிப்பிட்ட ஆசனங்கள் இருக்கின்றன. அவைகளை மாத்திரம், வேண்டிய நோயாளிகள் செய்வார்களேயானால் அபூர்வ குணமடைவார்கள்.

இவ்வாசனங்களைக் காலி வயிற்றுடன் செய்ய வேண்டும். இதற்குகந்த நேரம் காலையே. காலையில் செய்ய சௌகரியமில்லாதவர்கள் மாலையில் செய்யலாம். மாலையில் டிபன் சாப்பிட்டுவிட்டு செய்யக்கூடாது. மத்தியான ஆகாரத்திற்குப் பிறகு 6 மணி நேரத்திற்கு பிறகு செய்வது நல்லது. லேசான ஆகாரமாய் இருந்தால், அதாவது டிபன் எடுத்துக் கொண்டால் 4 மணி நேரம் கழித்துச் செய்யலாம்.

கீழே குறிப்பிட்ட வரிசைப்படி ஒன்றன்பின் ஒன்றாய்ப் பழக வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் செய்தல் கூடாது. சரீர அமைப்பு சாஸ்திரப்படி முதலிலிருந்து ஒவ்வொரு

அவயவத்திற்கும் உழைப்பு வரிசையாய்க் கொடுக்கப்பட்டிருப்பதால் எல்லா ஆசனங்களேயும் செய்பவர்கள், வரிசைக் கிரமமாய்ச் செய்தலே நல்லது.

1. பத்மாசனம்
2. புஜங்காசனம்
3. சலபாசனம்
4. தனுராசனம்
5. பஸ்சிமோத்தாசனம்
6. மயூர ஆசனம்
7. ஹலாசனம்
8. சர்வாங்காசனம்
9. மத்ஸ்யாசனம்
10. சிரசாசனம்
11. யோகமுத்ரா
12. அர்த்தமச்சேந்திராசனம்
13. பாதஹஸ்தாசனம்
14. திரிகோணசனம்
15. சவாசனம் அல்லது சாந்தி ஆசனம்

ஜாபிதா பெரிதாய், நீளமாய் இருக்கிறதே என்று பயப்பட வேண்டாம். அவரவர்களின் அவகாசத்தையும், அவசியத்தையும் பொறுத்து சில ஆசனங்கள் மட்டும் பொறுக்கி எடுத்துச் செய்யலாம். எல்லா வேலேகளுக்கும் வேலேயாட்கள் இருக்கும் சகோதரிகள், எல்லா ஆசனங்களேயும் செய்தால், டாக்டர் பில் ஏருது.

நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும், ஜகத்தில் யார்க்கும் அஞ்சாத நெஞ்சமும் ......என்று நமது பாரதியார் பாடிச் சென்ருர். பொய் நாகரீகத்தாலும், தேவையில்லாத புத்தகச்சுமைக் கல்வியாலும்எத்தனே பெண்மணிகள் தங்களுடைய அருமையான ஆரோக்கியத்தை இழந்து கூன் தள்ளிவிடுகிருர்கள். அவர்களேப் பார்த்து இதுதான் நாகரிகமாக்கும் என்று மற்றப் பெண்மணிகளும் அவர்களேப் பின்பற்றுவதை நான் பார்த்திருக்கிறேன்.

மற்ருெரு சகிக்க முடியாத வழக்கம் நம் சிறு சகோதரிகளிடையே இருந்து வருகிறது. மார்பு கச்சையை ஒவ்வொரு அங்குலமாக இறுக்கி அதன் குறிப்பே தெரியாதபடி செய்து விடுகிருர்கள். இவர்கள் எக் காலமும் சிறு பெண்களாய் இருக்கப் போவதில்லே. ஒரு காலத்தில் தாய்மார்களாய் ஆகப்போகிறவர்கள்தான். அச் சமயம் குழந்தைக்குப் பால் இல்லே என்று, ஏதாவது டப்பிப் பாலோ, கைப் பாலோ கொண்டு குழந்தைக்கு போட்டி, அக்குழந்தையைச் சித்ரவதை செய்ய நேரிடும். அம் மாதிரி நடப்பதும் கண்கூடாகப் பார்க்கிருேம். இது மாத்திரமல்ல, நன்ருய் இறுக்கிக் கட்டிவிடுவதால் தாராளமாகச் சுவாசிக்க முடிவதில்லே. ரத்தமும் நன்ருய் பரவுவதில்லே. அதனுல்தான் பின் காலத்தில் இவர்களுக்குப் பால் சரியாய் உண்டாவதில்லே.

குழந்தைக்குப் பால் கொடுத்தல் அநாகரிகம் என்று வாதிக்கும் சகோதரிகளேப் பற்றி நமக்கு அக்கரையில்லே. அவர்கள் இவ் விஷயத்தில் மாத்திரமல்ல. எல்லா விஷயங்களுக்குமே குதர்க்கம் செய்வார்கள். அவர்கள் வழியே நாம் பார்க்கவும் வேண்டாம் மிருகங்களுமல்லவா தன் குட்டிகளுக்குப் பால் உண்ணக் கொடுக்கிறது. ஆறறிவு படைத்த நாம் அதற்கு பின்னணியில் போவதா? ஐயோ! நாகரிகமே!

சிலர் நல்ல ரத்தமில்லாமல் வெளுத்தும், ஒட்டியும் போன நாடை, உதடுகளுக்குச் சாயம் பூசி மினுக்குகிருர்கள். நல்ல ரத்த ஓட்டமிருந்தால் உதடு தானே சிவக்கிறது. தாடை—

தானே சிவந்து மலர்கிறது. அழகு வேண்டுமானால் இயற்கை ஆரோக்கியமே அழகு. மற்றவை செயற்கை. நெடுநாள் நிற்கா. சாயம் கலைந்துவிட்டால், பார்க்கச் சகிக்காது. சில நாரீமணிகளின் கோப மொழி என் காதில் விழுகிறது. அம்மணி மேற்படி அபிப்பிராயம் நான் சொல்லுவதல்ல. சமீபத்தில் சென்னைக்கு வந்து சென்ற மகாத்மா காந்தி அவர்களே சொன்னது. ஹிந்தி பிரசார சபையில் நடந்த ஒரு கூட்டத்திற்கு சில மாணவிகள் வந்திருந்தார்கள். அவர்கள் முகப் பவுடர் அப்பிக்கொண்டும், உதடு சாயங்களை தீட்டிக்கொண்டும், கண்ணுக்கு மேக்அப்செய்து கொண்டும் அந்த தியாகிமுன் வீற்றிருந்தார்கள். அப்பொழுது மகாத்மா "சாயம், பவுடர் முதலியவைகளைக் கொண்டு உங்களை அழகு படுத்திக் கொள்ளாதீர்கள். அது போலி அழகு, இயற்கைக் குண அழகே அழகு. நீங்கள் கலாசாலையில் மாணவர்களுடன் படிப்பதால், ஆண்களை மயக்கக் கூடிய விதமாய் உங்களை அழகு படுத்திக் கொள்ளாதீர்கள்" என்று சொன்னார்.

சாதாரணமாக மூளை வேலை அதிகமுள்ளவர்கள் கொஞ்சம் ரத்தம் குறை உள்ளவர்களாய் இருப்பார்கள். முகம் வெளுத்து இருக்கும். இந்த ரத்தக் குறைவைப் போக்க என்னென்னமோ மேல் நாட்டு, உள் நாட்டு மருந்து வகைகள் அருந்துகிறார்கள். இதில் பணம் விரயமாவதுடன் பலன் கொஞ்சமே. இயற்கை முறையில் காரணம் அறிந்து பரிகாரம் தேடுவதே நல்லது.

மேஜை அருகில் நாள் முழுதும் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கு கூன் விழுந்து விடுகிறது. சிலருக்கு அப்படியே முதுகெலும்பு வளைந்து குடையைப் போல் ஆய்விடுகிறது. இப்பேர்ப்பட்டவர்களுக்கு நுரை ஈரல் சரியாய் வேலை செய்யுமென்று எதிர்ப்பார்ப்பதற்கில்லை.

நிமிர்ந்து உட்கார். நிமிர்ந்து நட என்று பள்ளிக்கூடங்களிலும் படித்திருக்கிறோம். அந்த க்ஷணத்தில் நிமிர்ந்தும் உட்கார்ந்திருக்கிறோம். ஆனால் அடுத்த படி நம்மை அறியாமலேயே முதுகு கூன் தள்ளி விடுகிறது. அப்படிக் கூன் தள்ளாமல் இருக்க வேண்டுமானால் பத்மாசனத்தில் உட்காரப் பழகிக் கொண்டால் கூன்தள்ளாது.

பத்மாசனத்திலேயே எப்பொழுதும் உட்கார்ந்து வேலை செய்ய முடியுமா? நாற்காலியில் உட்காரும்போது பத்மாசனம் போடமுடியுமா? எந்தக் கேள்விகள் எழும். இன்னும் சிலர் பெரியோர்கள் முன்னிலையில் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்திருந்தால் என்ன சொல்லுவார்கள் என்றும் கேட்பது சகஜம்.

பத்மாசனத்திலேயே எப்பொழுதும் அப்படியே உட்கார வேண்டுமென்பதில்லை. முடிந்த வரை உட்காரப் பழகுங்கள். கொஞ்சம் நோய் ஏற்பட்டால் கழட்டி கொஞ்சம் ஓய்வு கொடுத்து திரும்பப்போடுங்கள். நாற்காலியில் போடுவது சிரமம் தான். கூடுமானவரை பெரிய நாற்காலியாய் இருந்தால் போடலாம். அவசியமானால் தான் நாற்காலியில் உட்கார வேண்டும். மற்ற நேரங்களில் கீழே உட்காருவதே நல்லது. நமது தேகத்திற்கும் அதுவே ஏற்றது. எப்பொழுதும் பெரியோர்கள் நம் முன்னிலையில் இருந்தே இருக்கப்போவ

197642

தில்லை. அப்படியும் இருந்தால் தான் என்ன? முந்தாணியால் கால் தெரியாமல் மூடிவிட்டால் போகிறது.

பத்மாசனத்தில் உட்காரும் போது முதுகெலும்பு கூனுமல் நேராய் இருக்கிறது. மார்பில் இருக்கும் நுரை ஈரலும் சுருங்காமல், கஷ்டமில்லாமல் நன்முய் பிராணவாயுவை சுவாசிக்க முடிகிறது. நாம் எந்த வேலை செய்தாலும் அந்த இடத்திற்கு ரத்தம் வேண்டும். வெறுமனே இருக்கும்போது பாய்வதைவிட அதிகம் தேவை. அந்த இடத்திற்குப் போய் வரும்போது கெட்ட ரத்தமாய் மாறி வருகிறது. அது சுத்தமாக, பிராணவாயு வேண்டும். நுரை ஈரல் சுருங்காமல் ஒழுங்காய் வேலை செய்தால்தான் நிறையப் பிராணவாயு கிடைக்கும். ரத்தம் சுத்தி ஆகும். இல்லாவிட்டால் சரியாய் சுத்திகரிக்கப் படாத ரத்தமே இரத்தாசயம் திரும்பப் பம்படித்து அனுப்பும். அதனுல் நாளாவட்டத்தில் பல வியாதிகள் உண்டாக ஏதுவாகிறது. ரத்த சோகை மூளைக் கொதிப்பு, தலைவலி, கண்மங்கல், நரம்பு பலஹீனம், ஹிருதய பலஹீனம் முதலிய பல வியாதிகள் தோன்றுகின்றன. பிராணவாயுவை பூரணமாய் சுவாசிக்க பழகினுல்தான் விமோசனம் உண்டு. மற்றும் மருந்துக்குச் சில வழிப்பதெல்லாம் தற்கால சாந்தியே.

செய்யும் முறை: விரிப்பில் உட்காரவும். இரண்டு கால்களை நீட்டி, வலது காலை மடக்கி, கைகளால் தூக்கி இடது துடையில், வயிற்றையொட்டி அமர்த்தவும், பிறகு அவ்வாறே, இடது காலை மடக்கி கைகளின் உதவியால் வலது துடையில் வைக்கவும்.

சிலருக்கு வலதுகாலை தூக்கி இடது கால்மேல் போடவரும். இடது காலைத் தூக்கி வலதுகால் மேல் போட்டால் மடங்க மாட்டேன் என்றும். சிலர் இடது காலைத் தூக்கினதும் பந்துபோல் பின்பக்கம் உருண்டும் விடுவார்கள். இத்தனை நாள் நமது கால் என்று நினைத்துக் கொண்டிருந்தோமல்லவா? அது செல்ல முரட்டுப் பிள்ளையைப் போல் சத்தியாக்கிரகம் செய்யும். முறட்டு குழந்தையை திருத்துவதுபோல் பொறுமையாய் நாளாவட்டத்தில் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பழக வேண்டும். ஒரே நாளில் வந்துவிட வேண்டும் என்று பழகிவிட்டு ஆசனத்தின் மேல் வெறுப்போ, ஆசிரியர் மேல் கோபமோ கொள்ளக் கூடாது. முதல் நாள் முயற்சி செய்ய வேண்டும். பிறகு நொந்தால் விட்டு விட்டுப் போட வேண்டும். எல்லோருக்கும் அம்மாதிரி இருக்காது. சிலருக்குத்தான் கட்டை பாய்ந்துபோய் இருக்கும். ஆனுல் அவர்கள்தான் அவசியம் போடவேண்டியதும் கூட.

சரியாய்ப் போடவந்தபின் அப்படியே 1 நிமிஷம் 2 நிமிஷம் இருக்க பழகவேண்டும். பிறகு நெடு நேரம் இருக்கப் பழகலாம். எவ்வளவு பழகினுலும் ½ மணி நேரத்திற்குப் பிறகு கழட்டிக் கொஞ்சம் ஓய்வு கொடுத்து பிறகு போடலாம்.

தியானம், பிராணுயாமம், சந்தியா முதலியவை செய்யும் போது இந்த ஆசனத்தில் இருந்தால் பலன் அதிகம்.

பத்மாசனம் போட்டு தோழிகளுடன் பேசலாம், எழுதலாம், படிக்கலாம், தையல், பின்னல் வேலைகள் முதலியன செய்யலாம்.

அவள் உள்ளம் அவனுக்காகத் தவித்தது. இரக்கம் மிஞ்சி ஏக்கமாகிவிட்டது. ஆனால் அவள் அன்புக்கு உரியவனான அந்தப் பயல்.........

வேலன்

●

ஜயலக்ஷ்மீ R. ஸ்ரீனிவாசன்

மீனுவுக்கு அன்று ஒரு வேலையும் ஓடவில்லை. ஏதோ பித்துப் பிடித்தவள் போல் சுறுசுறுப்பே இல்லாமல் தோன்றினள். ஏதோ ஒரு ஏக்கத்தினல் சிந்தனையில் மூழ்கிக் கிடந்தது அவள் உள்ளம். மனதுக்குள் எதுவும் வேண்டி இருக்கவில்லை. அப்படியும் இப்படியுமாக ஒரு மாதிரி வீட்டு அலுவல்களை கவனிக்கலானள். குழந்தைகளின் சண்டைகளை விலக்கி, அவர்களுக்குக் குளிப்பாட்டி, சாப்பிடவைப்பதற்குள் போதும், போதும் என்ருகி விட்டது.

சரி; குழந்தைகளும் பள்ளிக்கூடம் போய்விட்டார்கள். கணவரும் ஆபீசுக்குக் கிளம்பியாகி விட்டது. அதோ! மோட்டார் கார் காம்பௌண்டை தாண்டியாகி விட்டது.

காலையிலிருந்து உள்ளுக்குள்ளேயே புகைந்துகொண்டிருந்த உள்ள உணர்ச்சியானது இப்பொழுது தனிமையில் குபுகுபு வென்று குமுறிக் கொண்டு மேலே எழும்பி வர ஆரம்பித்தது. அந்தக் குமுறலைத் தாங்காமல் மீனு வாசற் கதவை சாத்தித் தாழ்ப்பாள் இட்டு விட்டு கூடத்தில் இருந்த 'ஈசி சேரில்' அப்படியே துவண்டு சாய்ந்தாள்.

'சீ, சீ, என்ன காரியம் செய்து விட்டேன். சுத்த அநியாயம். இந்தச் சிறிய தவறுக்காக அவனை அனுப்பி விட்டேனே. ஐயோ—பகவானே—குழந்தையைச் சுகமாக வைத்துக் காப்பாற்றப்பா—நல்ல பையன் இந்த ஐந்தாறு வருஷங்களாக நமக்கு ஓடாக உழைத்தானே. தப்பு, தவறு சிறிதேனும் செய்யாமல் போனல் அவன்'தெய்வப் பிறவியல்லவோ' நம் குழந்தைகள் கிட்டு, கமலா, ராணி இவர்கள் எல்லாம் தவறே செய்வதில்லையா என்ன? அவர்களை மன்னித்து மறு நிமிஷமே கொஞ்சிக் குலாவும் இந்த இதயத்துக்கு அந்த நாதியற்ற ஏழை மேல் ஈவு, இரக்கம் பிறக்காமல் போய் விட்டதே...'' என்று ஏதோதோ சிந்தித்துப் பொருமினள் மீனு. அவ்வாறு சிந்தனையில் ஆழ்ந்தவளாய் வெகு நேரம் மெய்ம் மறந்து உட்கார்ந்திருந்தாள்.

சமையல்காரனும் எஜமானி அம்மாள் சாப்பிட வருவாள் என்று நெடு நேரம் வரை எதிர்பார்த்துப் பார்த்து கடைசியில் பசி தாங்காதவனய் மெதுவாக வந்து "அம்மா இலை போட்டிருக்கேன்'' என்ருன். அப்பொழுது தான் மீனு சுய உணர்வு பெற்றவள் போல் எழுந்தாள்.

* * *

இது ஐந்து வருஷத்துக்கு முன்னர் நடந்த சம்பவம். மீனுவின் கடைக்குட்டி ராணி அப்பொழுது ஒரு மாதக் குழந்தை. மூன்ருவது பிரசவம் ஆனதால் மீனு பிரசவத்துக்குப் பிறந்தகம் போகவில்லை. அவள் தாயாரே பிரசவ சமயத்துக்கு பெண் வீட்டுக்கு வந்து இரண்டொரு மாதம் இருந்துவிட்டு சென்ருள். கிட்டு மகா விஷமப் பயல்; கமலா மகா பிடிவாதக்காரி. இருவருக்கும்

வயது முறையே ஐந்தும், மூன்றும், மீனு அறை உள்ளில் இருந்த பத்துநாளும் சுகமாகவே கழிந்தது. "பூச்சி பாப்பா உள்ளே போனல் கடித்து விடும், உள்ளே போகப்படாது" என்று என்ன வெல்லாமோ சொல்லி உள்ளே போகா வண்ணம் குழந்தைகள் இருவரையும் பய முறுத்தி வைத்திருந்தாள் கௌரியம்மாள். ஆனல் மீனு ஸ்னனம் செய்து, குழந்தைக்குத் தொட்டில், புண்ணியாகவனம் முதலியன நடந்ததும் குழந்தைகளின் பயம் கியம் எல்லாம் மாயமாகி விட்டது. மீனு கொஞ்சம் அசந்து மறந்து இருந்தால் "பாப்பா! பெப்பரமிட் இந்தா" என்று கொட்டைப் பாக்கு அளவு பெப்பரமின்டை குழந்தையின் வாயில் திணித்து விடுவான் கிட்டு. இது போன்ற விஷமம் இன்னும் எத்தனையோ நடக்கும். கலாவோ, எப்பொழுதும் குழந்தையுடன் போட்டிதான். 'தூ, இந்த ஆயி பாப்பா வேணும் அம்மா, மாமி வீட்டுக்குக் கொடுத்துடு நான் தான் உன் மடியில் தாச்சுப்பேன்" என்று குழந்தையை அடித்தே விடுவாள். குழந்தை வீறிட்டுக் கத்தும். குழந்தையைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டி இருந்தது. ஆதலால் கௌரியம்மாள்" அடி மீனு! இந்தப் பொல்லாத குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்கு ஒரு சின்னக்குட்டியை (பெண்) யாவது அல்லது ஒரு பையனையாவது போடுடீ, கருப்பனுக்கோ வீட்டு வேலையே சரியாக இருக்கு." என்று பெண்ணை நச்சரித்தாள். கருப்பனிடமும், வேலைக்காரி வள்ளியிடமும், பால்காரி பவளாயி இடமும் ஒரு ஆளைத் தேடிப் பிடித்து வரும்படி கட்டளை இட்டாள். மீனு ஒரு நாள் காலை வள்ளி ஒரு பையனை அவன் ஆத்தாவுடன் கூட அழைத்து கொண்டு வந்தே விட்டாள். பையனின் தாயார் "அம்மா! அப்பாரு இல்லாத கொளந்தைங்க, இனி நீங்க தான் அப்பாரு, ஆத்தா எல்லாம் என் கொளந்தைக்கு. உங்க கையில் ஒப்பிச்சுட்டேனுங்க, மாசம் மூணு ரூவா கொடுத்து, சோறு துணி கொடுத்து காப்பாத்துங்கோ தாயே! நானும் அனதை. வர ஞாயிறன்னிக்கு அண்ணன் கிட்டே கிராமத்துக்கு போரேனுங்க. நான் வந்தப்போ சம்பளம் தந்தா போதுங்க,' என்று கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டு, மீனட்சியிடம் தன் பையனை ஒப்படைத்து விட்டாள். பையனின் குருகுருப்பான கண்களும், களை சொட்டும் முகமும், வீட்டில் அனைவரையும் வசீகரித்தது. நல்ல சுட்டி; துருதுருவென்று, கன்னமும் கதுப்புமாகக் காட்சி அளித்தான் வேலன். உடலுக்குக் கொஞ்சம் போஷணை அளித்தால் வெகு ஜோரான ஆளாக மாறி விடுவான். கந்தல் துணியும் அதுவுமாக ஒரே சிக்கு நாற்றத்துடன் வந்து சேர்ந்தான் பையன். மீனு அவனுக்கு இரண்டு 'காக்கி நிக்கரும்', இரண்டு 'ஷர்ட்டும்' தைத்து கொடுத்தாள். கிழிசல் வேஷ்டியொன்றை இரண்டாகக் கிழித்து 'டவலா'க உபயோகித்துக் கொள்ளக் கொடுத்து, அவனுக்குப் பரிசுத்தமாக இருப்பதற்கும் கற்று கொடுத்தாள். தலை சீவிக் கொள்ள ஒரு ஒடிசல் சீப்பென்ன, எண்ணை சீசா என்ன, சோப்புக்கட்டி என்ன! ஜோராகக் கிராப்பு வெட்டி கொண்டு தினந்தோறும் சோப்பு தேய்த்து

குளித்து விட்டுக் கொஞ்ச நாளுக்குள்ளாகவே நல்ல பட்டிணத்து நாகரீக பையனாக மாறிவிட்டான் வேலன். புத்தியும் வெகு சூக்ஷ்மம், சொடிப் பொழுதில் சொன்ன வேலையைக் கற்றுகொண்டு விடுவான். குழந்தைகள் 'வேலா, வேலா' என்று அவனிடம் ஒட்டி கொண்டுவிட்டன. அவர்களுக்கு விளையாட்டு காட்டிப் பார்த்துக் கொள்வதற்கென்று வந்த வேலன் நாளடைவில் அவர்களுக்குக் குளிப்பாட்டுவது, சாப்பிட வைப்பது, கதை சொல்லித் தூங்க வைப்பது நடு நடுவில் சின்னக் குழந்தையைக் கவனித்துக் கொள்வது, கடை கண்ணிக்குப் போய் வருவது துணி தோய்ப்பது, வீடு கூட்டுவது போன்ற சகலமான வேலைகளையும் செய்யக் கற்று கொண்டு விட்டான். ஐயர் வீட்டுச் சாப்பாட்டில் உடம்பும் பிடித்து பருத்து விட்டான். கருப்பனே முழுச் சோம்பேறி, எதற்காவது கூப்பிட்டால் அவன் எழுந்து வரவே ஒரு மணி பொழுது பிடிக்கும். வீட்டில் எல்லோருக்கும் வேலனின் வேலைதான் பிடிக்கும் மீனுவுக்கும் அரை நாழிகை வேலன் வீட்டில் இல்லா விட்டால் சரிபடாது. நாளாக நாளாகக் குழந்தைகளும் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்து விடவே, சகலமான வேலைகளின் பொறுப்பும் வேலனையே சேர்ந்து விட்டது. கருப்பன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான்.

மீனு, வேலனை உண்மையாகவே ஒரு சேவகனென்ற ஹோதாவில் நடத்தவில்லை. தன்னை அண்டி வந்த அனாதைக் குழந்தை என்று பாவித்தவளாய்த் தன் குழந்தைகளுக்கு பக்ஷணம் பங்கிடும் பொழுது அவனை அழைத்துக் கொடுப்பது தன் குழந்தைகளுக்குப் புதிசு தைத்து கொடுக்கிறச்சே அவனுக்கும் ஏதாவது தைத்து,... இவ்வாறு வெகு பரிவுடன் பார்த்துக் கொள்வாள். காலையில் பழையது போட்டு, கூட ஒரு டம்ளர் சுடச் சுட காப்பியும் கொடுத்திருபாள். ஆனாலும் கூட நடராஜன் தன் காலைப்பொழுதைய இன்ஸ்பெக்ஷனை முடித்துக் கொண்டு சில நாள் சாப்பாட்டுக்கு வீடு திரும்ப நேரம் ஆகிவிட்டால் 'வாடா, அப்பா வேலா, நீ சாப்பிட்டுவிடு தேவலை. உனக்கென்ன குழந்தை தானே, வயிறு குழையும் பாவம்' என்று தானே அவனுக்கு வயிறு புடைக்கப் பரிமாறுவாள். அவனுக்குக் கொஞ்சம் சளி பிடித்த மாதிரி இருந்தால் கூட அவனைத் துணி தோய்ப்பதற்கு விடமாட்டாள். வேளா வேளை மறவாமல் மருந்து கொட்டிக் கொடுப்பாள்.

"என், மீனு! கொஞ்சம் நெற்றியைத் தொட்டு பாரேன். பத்தரைச்சுப்போட்டு கட்டிலில் படுக்கை விரித்துக்கொடு, பாவம்! அவன் உன் மூத்த குழந்தையோன்னோ!......" என்று நடராஜன் மீனுவைச் சில சமயம் பரிகாசம்கூடச் செய்வார்.

இத்தனை சர்டிபிகேட்டுகளைப் பார்த்தபிறகு வேலன் நல்ல பையன், நம்பிக்கையான ஆள், புத்திசாலி என்றெல்லாம் வர்ணிப்பது அனவசியம்தானே? ஆனால் அவனிடமும் ஒரு துர்க்குணம் உண்டு. அவனும் மனிதப்பிறவிதானே, தெய்வப் பிறவி அல்லவே. புத்திசாலிகள் எப்பொழுதும் கொஞ்சம் அதிகப்பிரசங்கிகளாகத்தான் இருப்பது வழக்கம். அவ்வப் பொழுது ஐயாவிடம் எதிர்த்துப் பேசிவிடுவான், மீனு செல்லம்

கொடுத்து பையனைக் கெடுத்து விட்டாள் என்று அவள் மீதும் கோப மூளும் நடராஜனுக்கு. திடீரென்று வேலன் இரண்டொரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் எங்கேயோ தலை மறைந்து விடுவான். மூன்றாம் நாள் தலையைச் சொறிந்து கொண்டு புழக்கடைக் கத வண்டை வந்து நிற்பான், சூரியனை கண்ட தாமரைபோல் குழந்தைகள் "அம்மா, வேலன் வந்துவிட்டான்!" என்று கூவிக் கொண்டு குதூகலத்துடன் குதித்துக்கொண்டு ஓடும் அவனிடம், மற்ற சமயங்களில் சுவாதீனத்துடன் பேசி, பரிவுகாட்டும் மீனு, தற்சமயம் அவனைச் சுவாதீனமாக திட்டுவதற்கு மாத்திரம் முந்திக்கொள்ள மாட்டாள்.

"வேலன் வந்து புழக்கடையில் நிற்கிறான்..." என்று கணவனிடம் போய் முணு முணுப்பாள்.

"ஆமாம், திட்டுவதற்கும், மிரட்டுவதற்கும் நான் தான் பிணை. நல்ல பெயர் எடுக்க நீ!... ஆபீஸ் வேலை ஏகமாகக் கிடக்கு, நீயே போய் முட்டிக்கொள். செல்லம் கொடுத்துக் கெடுத்துக் குட்டிசுவராக்கி விட்டாய்" என்று எரிந்து விழுவான் நடராஜன்.

"இல்லை. இனிமேல் நான் அவனுக்குப் பரிந்துகொள்வதில்லை. கொஞ்சம் வந்து நீங்கள் மிரட்டினால்தான் அவனுக்குச் சொரணை வரும். ரொம்ப துளிர்த்துபோய் விட்டான். பாருங்கள்! சொல்லிக்கொண்டு போகப்படாதோ, தடிப்பயல்" என்று தணிந்த குரலில் கெஞ்சுவாள் மீனு.

"அவனைத் தொலைத்து விடு என்றால் நீ கேட்பது கிடையாது. இவன் இல்லாவிட்டால் இன்னொருத்தன் வருகிறான்....இல்லை, நீதான் மிரட்டேன்! அதான் உன்னிடம் கண்டிப்பு என்பதே கிடையாது. என்னிடம் வாயாடத்தான் தெரியும் உனக்கு..."

"இல்லை, என்ன சொல்வது என்றே புரியவில்லை எனக்கு: அவன் மாமன் இரண்டு நாள் ஊருக்கு வந்துபோ என்று வந்து அழைத்தானாம். என்னை வந்து லீவு கேட்டால் கோபித்துக் கொள்வேனே என்று சொல்லாமலே போய்விட்டானாம், இனிமேல் அப்படிச் செய்வதில்லை என்று கும்பிடு போடுகிறான்......

"சரி, என்னை என்ன பண்ணித் தொலைக்க சொல்லுகிறே.இந்த மாத முழு சம்பளத்தையும் கொடுத்து துரத்திவிடு."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன விழுப்புறம்! இவ்வளவு பெரிய பட்டணத்தில் வேறொரு ஆள் கிடைக்காமலா போகிறான்?"

"அது சரி, இவனைப்போன்ற நம்பிக்கையான ஆள் கிடைப்பது சிரமம். மேலும் நல்ல புத்திசாலி நம் ஸ்ரீதரன் (மீனுவின் தம்பி) லீவில் வந்திருந்த பொழுது அவனை நச்சரித்து எழுதப்படிக்கக் கூட கற்றுக்கொண்டு விட்டிருக்கிறான் மக்குப்பயல்! பால் கணக்கு, வண்ணான் கணக்கு இதெல்லாம்கூட இப்போ அவன் தான் எழுதுகிறானே! அவன் இல்லாவிட்டால் ரொம்பக் கஷ்டம். அப்புறம் உங்கள் துணி மணிகளை தினம் இஸ்திரி பண்ணி மடித்து வைப்பானா இன்னொருத்தன்? டிரைவர் வராதுபோனால் அவன் தானே துடைக்க

வேண்டி இருக்கு. மேலும் அவன் இல்லாவிட்டால் குழந்தைகள் எங்கிப்போய் விடுமே பாவம்......

"சரி, திரும்பவும், திரும்பவும் நீ போன வழிதான். பின்னே ஏன் என்னை வந்து தொந்திரவு செய்கிருய், அநியாயமாக வேலையைக் கெடுத்துக் கொண்டு..."

"இல்லை, உங்களிடம் அவனைத் துரததசொல்லி நான் சொல்லவில்லை. கொஞ்சம் மிரட்டுங்கள் என்றேன்...."

"எப்படியோ போ. அந்த வேலையையும நீயே செய்து கொள், உன்பாடு, என்னை வந்து சும்மா நச்சரிக்காதே" என்பான் நடராஜன். அந்த கூடமான அர்த்தத்தைப் புரிந்து கொண்டு விடுவாள் மீனு. கணவனுக்கும் வேலனை வைத்துக் கொள்வதில் சம்மதம் என்று உணர்ந்ததும் பூரிப்புடன சொல்வாள்,

"ஏண்டா வேலா, ஐயா ரொம்பக் கோபத்தில் இருககார் தெரியுமா?"

ஊம்...

"இனிமேல் இப்படி எல்லாம் சொல்லிக்காதே, கொள்ளாதே போகப்படாது. என்ன?

"ஊம்......அம்மா"

"சரியாக இருக்க வேண்டும். இன்னெரு தடவை இப்படிச் செய்தாயோ வேலையே போய் விடும், என்ன?"

"ஊம்......அம்மா"

"ஐயா, இந்த மாதம் சம்பளமே கொடுக்க வேண்டனரு போரது போ எனறு அவருக குச் சிபார்சு செய்யரேன். இனி மேல் சரியாக இருக்க வேண்டும் என்ன?

"ஊம் அம்மா......"

இவ்வாறு இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டால், தான் வேலனை ரொம்ப ரொம்ப கண்டித்து விட்டதாக எண்ணம் மீனுவுக்கு.

இதை எல்லாம் அறியாதவனு அந்த வேலன்! அவன்தான் மகா கெட்டிக்காரனுச்சே?" "இந்த அம்மா கோபித்துக்கொள்ள மாட்டாருன்னு எனக்கு அப்பொவே தெரியுங்களே! இல்லாங் காட்டி ஊருக்குப் போயிருப்பேனே. ஐயருமாத்திரம் என்ன! பேச்சிலேதான் கண்டிப்பு...... எங்க ஐயரு மனசு தங்கக் கம் பின்னு......அண்ணே! அவுங்க மாதிரி தாராள மனசு சாக்ஷாத் தர்மராஜாவுக்குக்கூட கிடையாதுங்க......" என்று தன் கூட்டாளிகளிடம் பெருமை அடித்துக் கொள்வான் வேலன்.

ஆனல் இந்த மாதிரி எத்தனை தடவைதான் நடப்பது? இந்தத் தடவை சொல்லாமல் கொள்ளாமல் ஊருக்குப் போனவன் பதினைந்து நாள் கழித்து மெதுவாக வந்து நிற்கவே ஐயருக்கு ரொம்பவும் கோபம் உண்டாயிற்று. ஐயரைவிட அம்மாளின் கோபம் உச்ச நிலையை எட்டிவிட்டது. "மடப்பயலே, பாவம், பாவம் என்று பார்த்தால் வரவரத் துள்ளிக் குதிக்கிருன். ஒரே மூட்டாய்த் தொலைந்து போ" என்று அவளையும் அறியாமல் மீறி வந்த கோபத்தில் சொல்லிவிட்டாள் மீனு. ஆபீஸ் ரூமிலிருந்து மீனு இரைவதைச் செவியுற்ற நடராஜனுக்கே அவளுடைய கண்டிப்புத தன்மையைப் பார்த்துப்பரமாச்சரியம் ஏற்பட்டது. வேலன் கண்ணீரும் கம்பலையுமாக, தஞ்சமென்று நின்ற நிலையை ஜன்னல் வழியாகக் கண்டு நடராஜனுக்கே பரிதாபமாக இருந்தது.

"இவ்வளவு நாளாக அவன் வராததின் காரணத்தை விசாரிக்காமலேயே இவள் ஏன் இப்படிக் கடிந்து கொள்ளுகிருள்" என்று அவனுக்கே வியப்பாக இருந்தது. வேலனின் உதடுகள் என்னவோ சொல்ல வேண்டுமென்று துடித்தன. ஆனல் மீனு அவனைப் பேசவிட்டால்தானே. ஒரே மூச்சில் சரமாரியாகப் பொழிந்துவிட்டு சம்பளம் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டுக் கதவைத் தடாரென்று சாத்திக்கொண்டு உள்ளே சென்றுவிட்டாள். எப்பொழுதும் கணவனை வந்து மிரட்டும்படி உதவி கேட்பவள் இன்று ஏனே தானே தைரியமாகக் கொஞ்சம் மன நெகிழ்வின்றி செய்த செய்கை யாருக்கும் ஆச்சரிய மூட்டக்கூடிய விஷயம்தான். வேலன் யஜமானிடம் வந்து ஒரு வார்த்தை பேசி இருந்தால் நடராஜன் நன்ருக விசாரித்திருப்பான். ஆனல் அவன் என்னத்தைக் கண்டான்? பாவம். "அம்மாவே இவ்வளவு கோபத்தில் இருக்கச்சே, ஐயாவிடம் போனல் அடித்தே விடுவர்" என்று பயந்தவனுய் வேலன் காம்பௌண்டை தாண்டிச் சென்று செய்வதென்னவென்று அறியாமல் வெகு நேரம் அங்கேயே அமர்ந்திருந்தான். அம்மாவுக்கு இவ்வளவு கோபம் வரும் என்றும், தன்னை வீட்டை விட்டு இப்படித் துரத்தியே விடுவார் என்றும் அவன் கனவிலும் நினைத்தே இருக்கவில்லை. பெற்ற தாய் இவ்வாறு கோபித்துக் கொண்டுவீட்டைவிட்டுத் துரத்தி இருந்தால்கூட அவன் பொருட்படுத்தி இருக்கமாட்டான். இந்த ஆறு வருஷமாக தன் சொந்தத் தாய் என்றும், தெய்வம் என்றும் போற்றிப் பூஜித்து உழைத்து வந்த யஜமானியம்மாள் ஒரே முட்டாய்க் கொஞ்சமும் ஈவு இரக்கம் இன்றி துரத்திவிட்டாரே என்று பொருமிப் பொருமிக் கண்ணீர் சொரிந்தான். "சே, இனி யார் வீட்டுக்கும் உழைக்கப் போக மாட்டேன். விறகு வெட்டியாவது வயிறு கழுவுவேன். எந்த வூட்டில்தான் நம்ம அம்மாவைப் போன்ற கருணைத் தேவி இருப்பாங்க! அம்மா துரத்தினுலும் உதைத்தாலும் நம்ப மீனம்மாங்கத்தான் என் சொந்த அம்மாங்க ......" என்று உணர்ச்சி பொங்கத் தனக்குள்ளாகப் புலம்பினன். "ஐயோ, ஓடியாந்து ஒரு பேச்சு சொல்லிக்கிட்டுப் போயிருந்தாக்கே எத்தினி நல்லா இருந்திருக்கும். ஆமாம் வாஸ் தவமுங்க......இந்தப் பதினஞ்சு நாளா அம்மா ரொம்பத் தொந்தரவுபட்டுப் போயிருக்காங்க. இல்லாங்கட்டி ஐயா கோபிச்சுண்டால்கூட, எம்மேலே பரிஞ்சுகிட்டு பேச வந்துடுவாங்களே எங்கம்மா! ஏ...கடவுளே, முருவப்பா, நான் எங்கேயாவது பாழாய்ப் போவுறேன். எங்க அம்மாவையும், ஐயாவையும், கொளந்தைகளையும் சொகமா வைக்கணும். அவுங்களை ரொம்ப நல்லவங்கன்னு சொன்னமாத்திரம் போதாது. அவுங்களை நல்லவங்கணு சொல்ல, புதுசா ஒரு ஒசத்தியானப் பேச்சுத்தான் கண்டுபிடிச்சு ஆவணும்...''என்றெல்லாம் புலம்பித் தீர்த்தான் வேலன். அன்று முழுவதும் பித்துப் பிடித்தவன்போல் நின்ற இடத்தில் நிற்காமல், சென்னை முழுவதும் சுற்றி அலைந்தான். குறைந்தபட்சம் ஐந்து தடவைகளாவது ஐயர் பங்களா முன்னல் வளைந்து வளைந்து வந்தான். உள்ளே போகத் தைரியமில்லை.

* * *

இங்கே மீனுமாத்திரம் என்ன? வேலனை அடித்துத் துரத்திவிட்டு, உள்ளே வந்தவள் "அடடா, என்ன பிசகு செய்துவிட்டேன். அவனைச் சரியாக விசாரிக்காம லேயே, அவரையும் ஒரு வார்த்தை கேட்காமல் துரத்தியே விட்டேனே. அவன் மகாரோஷக் காரனுச்சே. திரும்பிக்கூட வர மாட்டானே........." என்றெல்லாம் ஞானேதயம் உதித்தது மீனுவுக்கு. கணவனிடம் போய் இதைச் சொல்லிக்கொள்வதற்கும் தைரியமில்லை. குழந்தைகளா...ஒன்ருெடொன்று சண்டை போட்டுக்கொண்டு உயிரை வாங்குகிறதுகள். அவருக்கு ஆபீஸுக்கு நாழிகை யாகிவிட்டது. 'ஷர்டு'க்கு இன்னும் பித்தான் மாற்ற வேண்டும் புதிய 'ஸுட்' எடுக்க வேண்டும்... மடையன், போய்விட்டானே. அவன் இருந்தால் இந்தக் கவலைகள் ஒன்றும் தனக்கு இல்லையே!" என்று அவள் சிந்தனைச் சுருள் ஓடிற்று. நடராஜன் இதைப்பற்றி வாயே திறக்கவில்லை. 'கம' என்று குளித்துச் சாப்பிட்டு, உடை மாற்றிக்கொண்டு ஆபீஸுக்குச் சென்று விட்டான். குழந்தைகளும் சண்டை பூசல்களை, ஒருவழியாக நிறுத்திக் கொண்டு, சாப்பிட்டுவிட்டு பள்ளிக்கூடம் போய்விட்டார்கள். சடைக் குட்டிராணி கூட 'பேபி கிளாஸு'க்குப் போகிருள்.

அடியம்மா! காலையிலிருந்தும் உள்ளுக்குள்ளே புகைந்து கொண்டிருந்த உணர்ச்சிப் பெருக்கானது அப்பொழுது தனிமையில் குபு குபுவென்று குமுறிக்கொண்டுமேலே எழும்பி வர ஆரம்பித்தது. அவளுடைய உள்ளம் வேலனுக்காகப் பச்சாதாபப் படலாயிற்று. "பகவானே என் ஜன்மத்திலேயே பெரியதொரு தவறு செய்துவிட்டேன். என் குழந்தையானல் இவ்வளவு கடுமையாக இருந்திருப்பேனு? பிறத்தியார் குழந்தை, அதுவும் ஏழை, அனதைக் குழந்தை என்று தானே இத்தனை அசட்டை! கடைசியிலும் மனிதத் தன்மையை இழந்துவிட்டேனே. உலகுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக, ஆதர்ச மங்கையாக, ஏழை எளியவர்களின் கஷ்ட நிஷ்டூரங்களை உணர்ந்து அவர்கள் உள்ளம் நோகா வண்ணம் நடந்து கொள்ளும் கருணு மூர்த்தியாக விளங்க வேண்டுமென்ற என் மனக் கோட்டை எல்லாம் இடிந்து விழுந்து விட்டதே. சீ, நான் ஒரு பெண்ணு!......பேய் தான்...அவர்தான் என்னைப்பற்றி என்ன நினைப்பார்...அவருடைய இதயராணியான நானு இவ் விதத் தகாத காரியம் செய்தேன்......என்றெல்லாம் பலவாருகச் சிந்தனைகள் ஓடின அவளுடைய பூப்போன்ற உள்ளத்தில்.

வேலன் நடராஜனின் வீட்டை விட்டுச் சென்று ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. "அவன் நம் குழந்தை. என்றென்றும் அவனை நம் வீட்டிலேயே இருத்திக்கொள்ள வேண்டும். வயது வந்ததும் நல்ல பெண்ணுய்ப் பார்த்துக் கலியாணம் பண்ணிவைக்க வேண்டும். தொண்டு கிழவன் ஆனுலும் அவனை விடாமல் ஆதரிக்க வேண்டும்" என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்த நடராஜ தம்பதிகளுக்கு தற்சமயம் வேலன் அவர்கள் வீட்டில் இருந்த காலம் கனவுபோல் பரிணமித்தது.

இதன் நடுவில் தீபாவளிப் பண்டிகை வரவே புகழ்பெற்ற பல

பத்திரிகைகளின் தீபாவளி மலர்களுக்கு ஏகக் கிருக்கி ஏற்பட்டது. முன் பணம் கட்டினவர்களுக்குக் கூடப் பிரதிகள் கிடைப்பது அரிதாகிவிட்டது. மீனுவுக்கோ பத்திரிகைப் பித்து ரொம்ப அதிகம். அவள் வரவழைக்காத தமிழ்ப் பத்திரிகைகள் கிடையாது.

அன்று, பகல் பன்னிரண்டு மணி இருக்கலாம். வக்கீல் சோமசுந்தரம் ஐயர் அகத்துச் சேவகன் மொட்டையன் "அம்மா, எங்கம்மாங்க தீபாவளி மலர் கேட்டு வாங்கியாரச் சொன்னுங்க" என்று வந்து நின்றுன். வீதித் தாழ்வாரத்தில் சாவகாசமாக ஏதோ பத்திரிகை படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த மீனு அவன கேட்ட புத்தகத்தைக் கொண்டுவந்து கொடுத்தவிட்டு மறுபடியும் படிப்பில் ஆழ்ந்தாள். மொட்டையன் கையைக் கையைப் பிசைந்துகொண்டு தாழ்ந்த குரலில் "அம்மா, உங்களை ஒண்ணு கேக்கணுமுங்க. வேலனை ஏன் ஓட்டி விட்டேங்க...?" என்று கேட்டான். மீனுவுக்குக் கோபம் வாராமலிருக்குமா?

"அதெல்லாம் உனக்கு எதற்கு? வந்த வேலையைப் பார்த்துக் கொண்டு சும்மா போ" என்று அதட்டினுள் அவள்.

"இல்லேம்மா அவன் உங்க கிட்டே சொல்லாமே ஊருக்குப் போனது அவன் தவறு இல்லேங்க. என் தவறுங்க. அன்னிக்குக் கடைத் தெருவிலே வெத்தலை வாங்கப் போகச்சே வேலனும், அவன் ஊர் ஆள் முருவனும் பேசிக்கிட்டு இருந்தாங்க. வேலனின் ஆத்தாளுக்கு உசிரு போருப்போலே இருக்குதங்க. கையோடே வேலனை அளைச்சுக்கிட்டு வந்துடுன்னு வேலனின் மாமன் முருவனைப் பட்டணம் அனுப்பிச்சானுங்களாம். முருவன் உங்க வீட்டைத் தேடிவர வளி (வழி) யிலேயே வேலன் கடைத் தெருவண்டை கிடைச்சதும் விசயத்தை அவன் கிட்டே சொல்லி ஊருக்கு அளைச்சானுங்க முருவன். இருடா சித்தே. ஒரே ஓட்டமாக ஓடிப்போய் எங்க அம்மாவண்டை விசயத்தைச் சொல்லிபிட்டு வரேன்னு வேலன். அதற்குள்ளாக நான் அங்கே போய்ச் சேர்ந்தேனு? வேலனை "நான் போய் உங்கள் எஜமானியம்மாளுக்குச் சொல்லிபுடறேன். நீ ஊருக்குப் போடா களுதை. ஆத்தா சாகக் கிடக்கிறதாம்" இன்னு மிரட்டி அதை ஊருக்கு அனுப்பிச்சுபுட்டேன் பாவி. அப்பாலே அந்த விசயத்தை உங்க வீட்டண்டை வந்து சொல்ல மறந்தே பூட்டேனுங்க. அப்புறம் அவுங்க ஆத்தாவும் செத்துப்போச்சுங்க. வேலன் ஊருக்குத் திரும்பியாந்து உங்க ஊட்டுக்கு வந்தானு. அதற்கப்பாலே நீங்க வேலையிலிருந்து நீக்கிப்பிட்டேங்கன்னு என்னை ஏகமாத் திட்டிப்புட்டுப் புலம்பினுங்க. "வாடா, தம்பீ, நான் சிபார்சு செய்யறேன்" என்று எத்தினியோ சொன்னேனுங்க. நீங்க அத்தினி திட்டி அனுப்பிச்சூட்டப்பாலே உங்களை வந்து தரும்பவும் தொந்திரவு செய்யப் படாதுன்னுப் பூட்டான். என்னையும் வாவிடலே மவராசன். இப்பொ இருக்கற (இருக்கிற) ஆள் நல்லா வேலை செய்யுதா அம்மா?" என்று வினவினன் மொட்டையன்.

மீனுவின் இதயத்தை ஆயிரம் சம்மட்டிகள்கொண்டு அடிப்பது போன்ற வேதனை ஏற்பட்டது

பிறகு தழுதழுத்த குரலில் இந்த ஆள் சுத்த மடையன். எல்லோரும் நம் வேலனைப்போல் சாமர்த்திய சாலியாக இருப்பார்களா சொல். அடப் பாவமே! வேலன் இப்போ எங்கே வேலை செய்யறான் மொட்டையா? ரொம்ப நல்ல பையன் எங்கேயாவது சுகமாய் ஆயுசோடே இருந்தா சரி'' என்று அவசர அவசரமாக மீனு வாத்சல்யம் ததும்பக் கேட்டாள்.

"உங்க ஊட்டை விட்ட அப்புரம் யார் ஊட்டுலேயும் வேலை பார்ப்பதில்லைன்னு சபதம் செய்துட்டானும் பயல். கொஞ்ச நாள் ரயில்வே ஸ்டேஷனுலே போர்டர் வேலை செய்தானுங்க. அதுவும் சரிப்படலே.பிறகு டிபோவிலே விறகு வெட்டிக் கூலி வாங்கினன். அதுக்குள்ளே பெரிசா காயலா படுத்துட்டானுங்க.'' போய் அம்மாவண்டை சொல்லி மருந்துக்காவது காசு வாங்கியாறேன்னு சொன்னேனுங்க. அவன் கேட்கலே. என் தங்கச்சி ஊட்டுலேதான் காசு கொடுத்துச் சாப்பிடருனுங்க. இப்பொ பத்து நாளாய் ரொம்பக் காயலாவா கிடக்கிருனுங்க. ஞானமே இல்லேங்க. எப்பவும் எங்கம்மா, எங்க ஐயா, ராணியம்மா, கலா தாயே, கிட்டுச்சா மீனுன்னு பேத்திக்கினே இருக்காங்க.யாராவது ஆகாதவுங்க மருந்து கிருந்து வச்சிருப்பாங்கன்னு நெனேச்சுப் பூஜை, கிஜை எல்லாம் கூடப் போட்டுப் பார்த்தாச்சு. ஒண்ணும் பயனில்லேங்கம்மா!

மீனுவின் மனது அளவுகடந்த வேதனையால் பதறிற்று. "ஏண்டா, யாராவது நல்ல டாக்டரை அழைச்சு காட்டப்படாது? என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

"அவனுக்கு அத்தனை அக்கரையாக வைத்தியம் பாக்கரவங்க யார் இருக்காங்கம்மா? பணம் தான் ஏது? டாக்டர் ஐயா, பணம் இல்லாமே சும்மா வருவாங்களா? அதுவும் ஏழைகளின் ஊட்டுக்கு. நானும் என் தங்கைப் புருசனும்தான் கையால் ஆற (ஆகிற) தைச் செய்யருேமுங்க. திடுதிப்புனு நேத்தி ராவுலேந்து மேல் மூச்சு வாங்க ஆரம்பிச்சூடுதுங்க. பாதி ராத்திரியிலே எங்கேயோ போய்க் கெஞ்சி கேட்டு பத்து ரூபாய் கடன் வாங்கியாந்து என் தங்கை புருசன் ஒரு டாக்டர் ஐயாவை அழைச்சுக்கிட்டு வந்து காட்டினனுங்க "இது பொழைக்காது, நாளை இராவுக்குள்ளே போயுடும்'' இன்னு சொல்லிப்புட்டு பத்து ரூவாயும வாங்கி முடிஞ்சுக்கிட்டு போயிட்டாங்க டாக்டர் ஐய்யா. ஒருவாய் பால் வாங்கி குடிப்பாட்டகூட கையிலே பைசா இல்லீங்க அந்தப் பயல் கிட்ட. பிறத்தியார் எத்தனனு செய்வாங்க. திக்கு இருந்தது ஒரு ஆத்தா அவனுக்கு. அதுவும் போசகூங்களே. மாமனுக்கு எத்தினி தடவை ஆள் வுட்டு அனுப்பினலும் "போ போ'' என்கிருனும். பாவம் இன்னேரம் ஊட்டிலே என்ன ஆச்சோ அவன் கதி...?

"ஏண்டா, அப்பவே வந்து சொல்லப்படாது நீ? இத்தனை நாள் தாமதித்து விட்டாயே. ஆஸ்பத்திரிக்காவது கொண்டு போய் விட்டு, நம்ம கையாலான உதவி செய்திருக்கலாமே. ஐயாவுக்கு ஜனரல் ஆஸ்பத்திரியில் பெரிய பெரிய டாக்டர்கள் எல்லாம் தெரியுமே. அப்பவே சொல்லாமல் போய்விட்டானே. என்ன ஜுரம்டா அவனுக்கு?

"நேத்தி வந்த டாக்டர் ஐயா 'டைபாயிடு'' இன்னுங்க''

"வெகு கெட்டிக்காரன் களடா நீங்கள் எல்லாம் 'டைபாயிட் பேஷண்டை' அதெவ்வளவு கண்ணும் கருத்துமா கவனித்துக் கொள்ள வேண்டும்? வீட்டில் வைத்துக் கொண்டால் முடியுமோ? ஓடிப்போய்ப் புத்தகத்தை கொடுத்துவிட்டு அம்மாவிடம் சித்தே லீவ் கேட்டுக் கொண்டு வா, அதற்குள்ளாக எங்க ஐயருக்கு 'போன்' செய்து காரை வரவழைக்கிறேன். வந்து என்னை உன் தங்கச்சி வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவாயாம்'' என்று நாற்காலியை விட்டு எழுந்தாள் மீனு. அவளால் எழுந்திருக்கவே முடியாமல் தள்ளாடினுள், வேதனைப் பெருக்கால்.

வேலன் விஷயத்தைை ஆபீஸுக்கு மீனு 'போன்' செய்ததுமே, நடராஜனே காரை ஓட்டிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான். அதற்குள்ளாக மொட்டையனும் திரும்பி வந்து விடவே மூவருமாகக் காரில் வேலன் படுத்திருந்த வீட்டுக்குப் போனுர்கள்.

போகும் வழி நெடுக மீனு புழுவாய்த் துடித்தாள். "அந்த ஜீவன் நமக்கு எவ்வளவு உழைத்திருக்கு! நாம் போய் பார்ப்பதற்குள் பறவை கூண்டிலிருந்து பறந்து போகாமல் இருக்க வேண்டுமே. பரந்தாமா, பக்தவத்ஸலா, எங்கள் வேலனை காப்பாற்றப்பா. எங்கள் கையாலான உதவியைச் செய்ய அவகாசம் அருள்வாயாக'' என்றெல்லாம் எண்ணி எண்ணி மனம் வெதும்பினுள் மீனு. மணிக்கு முப்பது, முப்பத்தைந்து மைல் வேகத்தில் செல்லும் மோட்டார் கூட, அவளுக்கு அச்சமயம் எறும்பு ஊர்வது போல் தோன்றலாயிற்று.

அங்கே வேலனின் நிலைமை மிக மிகப் பரிதாபகரமாக இருந்தது. அந்தத் தம்பதிகளை கண்டதும் சாக்ஷாத் பார்வதி பரமேசுவரரைக் கண்டது போன்ற களிப்புப் பொங்கிற்று வேலனுக்கு. பேச முயன்ருன். வாயில் பேச்சு எழும்பவில்லை. பகல் பத்து மணியிலிருந்து கொஞ்சம் நினைவு வந்திருப்பதாகவும், மேல் மூச்சு வாங்குவது குறைந்திருப்பதாகவும் மொட்டையனின் தங்கை சொன்னுள். நடராஜன் பரிவுடன் வேலனின் நெற்றியை வருடினுன். உடம்பு நெருப்பாய்க் கொதித்தது. அச்சமயம் வேலனுக்கு அக்கணமே தன் காயலா முழுவதும் வாசியாகி விட்டது போன்ற உணர்ச்சியுண்டாயிற்று. ஆனந்த மேலீட்டால், அந்த நிலையிலும் முகத்தில் புன்முறுவல் அரும்பிற்று. மீனுவிடம் என்னவோ சொல்ல முயன்ருன். முடியவில்லை. கண்களிலிருந்தும் மள மளவென்று கண்ணீர் பொழிந்தான். இந்தப் பரிதாபத்தைக் காணச் சகியாமல் துயரம் நெஞ்சை அழுத்த வெளியே வந்துவிட்டாள் மீனு. வந்தவள் அப்படி கேவிக் கேவியா அழவேண்டும்! அட, அசட்டுப் பெண்ணே! அவனுக்காக அவள் வேண்டிக்கொண்ட வேண்டுதலைகள் எவ்வளவோ!

பிறகு நடராஜன் மீனுவை அழைத்து வந்து பங்களாவில் விட்டுவிட்டு, ஜனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்று டாக்டர்களைக் கண்டு பேசி, ஒரு டாக்டர் சகிதமாக 'ஆம்புலென்ஸ்' கார் ஒன்றைக் கொணர்ந்து வேலனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சேர்த்து விட்டு, அங்கி

ருந்து அப்படியே ஆபீஸுக்கு போனுன்.

வேலனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டு ஒரு வாரம் அவன் நிலைமை ரொம்ப அபாயகரமாகத்தான் இருந்தது. டாக்டர்கள் பிழைப்பது கஷ்டம் தான் என்று சொல்லி விட்டார்கள். அவனுக்கு வைத்தியம் செய்யஎவ்வளவு பணம் வேண்டுமானுலும் தான் சிலவழிக்கத் தயார் என்றும், அவனை மிக மிக எச்சரிக்கையுடன் கவனித்துக் கொள்ளும்படியும் நடராஜன் டாக்டர்களிடம் சொல்லி இருப்பதை அறிந்து, மீனு தன் கணவனின் தயாள குணத்தைக் கண்டு பூரித்துப் போனுள். வேலனுக்காக ஆயிரந் தெய்வத்தை வேண்டினுள்.

நாள்தோறும் ஆபீஸிலிருந்து வீடு திரும்பும்பொழுது நடராஜன் நேராக ஆஸ்பத்திரிக்குப் போய் வேலனைக் கண்டு பேசி தேறுதல் கூறி வருவான். கூட டாக்டர்களையும் கண்டு பேசி, வேண்டிய மருந்து, 'டானிக்' ஆகாரம் முதலியவைகளின் சிலவுக்காக அவ்வப்பொழுது பணமும் கொடுத்துவிட்டு வருவான். மீனுவும் இரண்டு நாளைக்கு ஒரு தடவையோ, நான்கு நாளைக்கு ஒரு தடவையோ முடிந்தபொழுது கூடை நிறைய கிச்சலிப் பழங்களுடன் ஆஸ்பத்திரிக்குப் போய் வேலனைக் கண்டு பேசிவிட்டு அவனுக்கு ரஸம் பிழிந்து கொடுக்கும்படி பழங்களை 'நர்ஸி' டம் கொடுத்துவிட்டு வருவாள். டாக்டர்களின் மருந்து மாயங்களை விட, தன்யஜமான, யஜமானியின் அன்பின் மகிமையிலேயே வேலனுக்கு உடம்பு குணமடைந்து வந்ததோ என்பது போல், சிறுகச் சிறுகக் குணம் ஏற்படலாயிற்று.

கடவுள் கருணுமூர்த்தி. ஏழை வேலன் பிழைத்துக் கொண்டான். இனி அவனுக்கு ஒரு குறைவும் இல்லை. தன் யஜமானர் மற்றும் யஜமானியம்மாளின் பரிபூரண அன்பையும் திரும்பப்பெற்றுவிட்டான். அதை விட அவனுக்கு இந்த உலகில் இன்பம் தரக்கூடிய விஷயம் வேறென்றும் இல்லை அல்லவா!

✲

பாராட்டு

'என்ன இருந்தாலும் நீ செய்த காரியம் மிகவும் பராட்டத்தக்கது தான்' என்று ஒருவர் மற்றொருவரைப் புகழ்ந்து பேசும்போது 'அப்படி என்ன பிரமாதமாகச் செய்துவிட்டேன்?' என்று பதில் வரும். ஆனுல் பதில் சொன்னவன் முகத்தை அச்சமயம் கூர்ந்து நோக்கினுல் அதிலே பெருமிதமும், கர்வமும் கலந்திருப்பது தெரியவரும். 'இன்னும் நம் காரியத்தையும் புத்திசாலித் தனத்தையும் பற்றிப் புகழ்ந்து பேசப் போகிறுர் என்று அவர் எதிர்பார்க்கும் சமயத்தில் 'ஆனுலும் இது அவ்வளவு பிரமாத காரியமில்லை. இதை விடச் சிறப்பாகச் செய்ய முடியும். செய்யக்கூடிய புத்திசாலிகளு மிருக்கிறுர்கள்,' என்று சொல்லிவிட்டால் அந்த முகம்தான் எவ்வளவு துக்ககரமாகவும், துவேஷமாகவும் மாறி விடுகிறது!

எங்கே பெற்ருய்?

எச். விஜய குமார்

1

கவிஞன் : வானுலக வீதிதனில் மதயானை போலுலவும்
மாநிலத்தைக் காக்கின்ற மாண்புமிகும் கருமுகிலே!
உள்ளத்தே யான்கொண்ட ஓர்ஐயம் நீக்கிடுவாய்
உள்நடுங்கும் காரிருளாம் உன்கருமை எங்குபெற்ருய்?

மேகம் : ஆதவனின் வெப்பமதால் அல்லலுற்றத் தமிழணங்கின்
வேதனையை மழைபொழிந்து விலக்கிடவே மகிழ்வுற்றுக்
கரியதன்நீள் குழலினின்றும் கருமையினைப் பரிசெனவே
சிறிதெனக்கு அளித்திட்டச் சிறப்பினை நீ அறியாயோ?

2

கவிஞன் : பூப்படைந்த பெண்ணினைப்போல் பூத்துநின்று மணம்வீசிப்
பார்ப்பவரை மயக்குகின்ற பண்புமிகு ரோஜாவே!
உந்தனையே ஒன்றுகேட்பேன் உண்மையினை உரைப்பாயே?
சிந்தையினைக் கவருமுந்தன் சிவந்தநிறம் எங்குபெற்ருய்?

ரோஜா : சீரியவெண் நிறங்கொண்டு தேனெழுக மலர்ந்தவெனைக்
காரிகையாம் தமிழணங்கு கண்ணுற்றுக் காதல்கொண்டு
ஆர்வமொடு அணைத்தெந்தன் அதரத்தில் முத்தமிடச்
சீர்மிகுந்த அவளிதழின் செம்மையினைப் பெற்றுவிட்டேன்.

3

கவிஞன் : பண்ணிசைக்கும் கலைச்செல்வி பாங்குடனே வீற்றிருக்கும்
வெண்கமல மொட்டெனவே விளங்குகின்ற வெண்சங்கே!
குழந்தையின் உள்ளம்போல் குற்றமற விளங்குமுந்தன்
இழுக்கற்ற வெண்மையினை எங்கிருந்து பெற்றனையோ?

சங்கு : முன்னொருநாள் தமிழ்க்குமரி மூவுலகும் ஐயங்கொண்டு
என்னைத்தன் குமுதவாயால் எத்திக்கும் எதிரொலிக்க
ஊதியக்கால் அவள்வாயின் ஒளிரும்வெண் பற்களென்மேல்
மோதிடவே அவ்வெண்மை முழுதினையும் பெற்றுவிட்டேன்.

4

கவிஞன் : கணப்பொழுதும் ஓய்வின்றிக் கதறுமிளம் கைம்பெண்போல்
முணுமுணுத்து அழுதழுது முத்துதிர்க்கும் ஆழ்கடலே!
சிந்தையினில் நெடுநாளாய்ச் சிறியதொரு ஐயமுண்டு
நிந்தையிலா உந்தனெழில் நீலநிறம் எங்குபெற்ருய்?

கடல் : பிடியிடையாள் தமிழ்ப்பெண்தன் பெரியபுகழ் ஓங்கிடவே
அடிமையினை நீக்கிடாத அறிவில்லா மைந்தரினை
நினைந்தழுது நீலவிழி நீர்சொரிய அக்கண்ணீர்
அனைத்துமொன்ருய்ச் செய்திடவே ஆழ்நீலக் கடலானேன்.

ராதையின் காதல்

குமாரி, எஸ். என். என்

ஒரு வண்டு, தனது தன்மையை அறியாது, ஒரு குளத்தில் செந்தாமரை மலர்ந் திருப்பதைப் பார்த்து மிகவும் அகங்கொண்டு, புஷ்பத்தின் மீது பறந்து வந்து உட்கார்ந்தது. அது வந்து உட்காருமுன் தான் மிகவும் புத்திசாலி யென்று எண்ணமிட்டு, மமதை மிகக் கொண்டு ஒரு தீர்க்கமான 'ரீங்' காரத்தோடு மரத்திலிருந்து தாவி மலரின் மீதமர்ந்தது.

கதிரவன் மலைவாயில் புகுந்தான். தாமரையும் தன் இதழ்களைக் குவித்துத் தெண்டனிட்டது. வண்டு உள்ளே சிக்கிக் கொண்டுவிட்டது. இதுவரை கர்வமும், கடின மனமும், மரத்தைத் துளைக்கும் வல்லமையும் பொருந்தி யிருந்த வண்டுக்கு அந்த மெல்லிய, மிருதுவான தாமரை இதழ்களைத் துளைத்துக் கொண்டு வெளியேற முடியவில்லையாமே!

மலரின் அழகும், மணமும் பிறர் மனதைத் தன்னிடம் எளிதில் இழுத்துக் கொள்ளும் சக்தி வாய்ந்தது. அதைக் காண்போர் இச்சிப்பார்கள், வண்டைக் கண்டால் பயப்படுவார்கள்.

புஷ்பம் தன்னை மறந்து இதழ்களைக் குவிக்கும்போது வண்டு உள்ளிருந்து கொண்டு என்ன செய்யக்கூடும் என்பதையே மறந்து விட்டது. வண்டுக்கும் அந்த இதழ்களைத் துளைக்க மனம் வராமல் பொழுது புலரும்வரை அடைபட்டுக் கிடக்கிறது.

ராஜா நந்தனுடைய பிருந்தாவனத்தில் ராதை யென்றொரு தாமரை மலர்ந்தது. அதைக் கண்ட நீலபாலன் காதல் கொண்டான். சூல்கொண்ட மேகம் போன்ற மதுசூதனன் ராதையின் அதர ரஸத்தைப் பருகப் பாய்ந்து வந்தான். தாமரையிதழ்கள் போன்ற மலர்க் கரங்கள் குவிந்து மாதவனை அணைத்தன. மதுவுண்ட கார் வண்டே போல் ஹரி மயங்கிக் கிடந்தான். காளிங்கனின் மதத்தை அடக்கிய பலம் எங்கேயோ போய்விட்டது. சகடாசுரனை வதைத்த பராக்கிரமம் மறைந்து விட்டது. பூதகியின் உயிரை உறிஞ்சிய அதரங்கள் ராதையின் இன்ப ரஸத்தைச் சுவைத்து வேணுவையும் மறந்து செயலற்று சோர்ந்து விட்டன. என்னே தெய்வீகக் காதலின் வன்மை!

வெளியாகிவிட்டது!

ஆங்கிலம் - தமிழ் அகராதி

ENGLISH - ENGLISH & TAMIL

DICTIONARY

●

தொகுத்தவர் :

தி. நா. சுப்பிரமணியன்

●

500க்கு மேற்பட்ட பக்கங்கள். வெள்ளைக் காகிதம். கலிகோ பைண்டு. அருமையான பதிப்பு.

●

ரூபாய் ஐந்து

தபால் செலவுடன் ரூ. 5-8

வியாபாரிகளுக்கு 15% கமிஷன்

●

சக்தி காரியாலயம்

சென்னை - 14.

பேய் வீடு

●

சகுந்தலா ராஜன்

இடம்: ஒரு தெரு.

பாத்திரங்கள்: அப்பா முதலி, ராமய்யர்.

காலம்: காலை மணி பத்து.

தாரகர்: அப்பா முதலி, (திண்ணையி லிருந்தபடி) ஸ்வாமிகளே! எங்கே இப்படிப் போறீங்க. வெய்யிலிலே......... அடாடாடா...என்ன விசேஷம்?

ராமய்யர்: ஹூம், போகும் போது கேட்டுத் தொலையாதேயும் என்று இத்தோடு எத்தனை தரம் ஐயா சொல்லி யிருக்கிறேன். நானே அகப்படுமோ அகப்படாதோன்னு நடுக்கத்துடன் தினம் கிளம்பறேன்.

முதலி: தினமா? எதற்கு? ரேஷன், கிஷன் வாங்கவா?

ராமய்யர்: அதைப்பற்றி கவலை ஏன் நான் படப்போறேன் குறைஞ்ச ரேஷனோ, மண்ணோ, மண்ணாங்கட்டியோ, நிலக் கடலையோ, போய் கேட்டால் தான் கொடுத்து விடுறனே? அப்பாடா!...உஷ்......ஷ்.

முதலி: பாவம்! ரொம்ப சிரமமாய் இருக்கு போலிருக்கு! வாங்கோ, இப்படி உட்காருங்கோ;...

ராமய்யர்: இனிமே உட்கார்ந்துதான் போகணும் நான். நீர்தான் கூப்பிட்டுக் காரியத்தை கெடுத்து விட்டீரே?

முதலி: உட்கார்ந்தாச்சே இனிமேலாவது சொல்லுமே? என்ன காரியமாய்ப் போறீர் என்று...

ராமய்யர்: ஓய் உம்ம தரகிற்கு உகந்த கல்யாண காரியமாய்ப் போகவில்லை நான். அந்த விஷயமானுல், நான் ஏன் அலையப் போறேன். உங்ககிட்டே ஒரு வார்த்தை சொன்னுல் நடந்துடறது...

முதலி: ஹி....ஹி....ஹி...ஹி ....என்னவோ பெரியவாள் கிருபை......

ராமய்யர்: (கிலேசம் நிறைந்த குரலில்) இப்போ தற் சமயத்திற்கு மனசை 'பெரிய வாள்' கொண்டுதான் அறுக்கிறது.

முதலி: அட என்ன சமாசாரம்? போன மாசம் தானே பெண்ணிற்கு கல்யாணம் முடிச்சேள்?

ராமய்யர்: ஆமாம் முடிச்சேன். உங்களைப் போன்ற ஒரு நண்பர் அவர்தான் தரகு தணிகாசலமய்யர்...அவர் மூலம் தான் கல்யாணம் நிச்சயமாச்சு. கல்யாணத்தை முடிச்சு வைச்சவர் கூட ஒரு காரியத்தை முடித்து வைக்க இயலாதவராய் இருக்கார்......

முதலி: (ஆச்சரியத்துடன்) அதென்ன அது?

ராமய்யர்: ஒன்றுமில்லே. கல்யாணமானதும் மாப்பிள்ளைக்கு வேலையாச்சு. வேலையானதும், குடித்தனம் போடனுமாம். நம் வீட்டில் இருக்க சரிப்படாதாம்.

முதலி: நல்லதாய்ப் போச்சு. பேஷாய் தனிக் குடித்தனம் போடட்டுமே?

ராமய்யர்: அது விஷயத்தில் எனக்கும் பரம திருப்திதான். ஆனல் வீடு......

முதலி: என்னய்யா இது! உமக்கே இன்னும் 2 வீடு இருக்கே!

ராமய்யர்: விஷயம் தெரிந்தும் தெரியாதவர் போல் பேசுறீரே ஓய்! அந்த வீட்டில் தான் 6 மாசமாய் புதுக் குடித்தனம் ஒருத்தரை வைச்சிருந்தேனே? இப்போ பணம் கொடுத்து போகச் சொன்னல்கூட அந்த ஆசாமிகள் போகமாட்டேங்கராளே......

முதலி: ஓ.....அப்படியா...... (சிறிது மௌனம், பின் சிந்தனையுடன்) ஒரு காரியம் செய்வீரா?

ராமய்யர்: என்ன சொல்லுமே?

முதலி: அவரை வீட்டை விட்டுப் போகும்படி செய்கிறேன். அதுதானய்யா உம் வீட்டில் குடி யிருப்பவரை......

ராமய்யர்: (சந்தேகக் குரலில்) ஊஹூம்! நடக்காது. உம்மால் முடியவே முடியாது...

முதலி: உமக்கென்ன அதை பற்றி. இன்றைக்குப் பதினைந்தாவது நாள் வீடு காலியாயிடும் உமக்கு. என்ன தரீர் எனக்கு?

ராமய்யர்: (சந்தோஷமாக) தேவலேயே? இதோ இப்போதே 100 ரூபாய் தரேன். அவர்கள் போனபின் இன்னுமொரு நூறு.

முதலி: இனிமேல் கவலை என்னுது......

ராமய்யர்: அப்பாடா! விசாரம் விட்டது போய் வரட்டுமா?

முதலி: ஆஹா......

இரண்டாம் காட்சி

இடம்: சென்னையில் 'ராம விலாஸ்' என்னும் வீடு.

காலம்: நடுப்பகல்.

பாத்திரங்கள்:

சிறு பையன் (வாயில் கை வைத்து) குப், குப், குப், எழும்பூர் ஸ்டேஷன்......

தாயார் தங்கம்மாள்: (உள்ளிருந்து) என்னடா கோபு! எப்போ பார்; ரயில் விளையாட்டா? வாசலிலே கறி காய் காரன் வந்தா கூப்பிடுடா.........

கோபு: அந்தக் கோடியில் வரானம்மா! கூப்பிடறேன்.

கூ...கூ...குப்...குப்...குப்...

கறிகாய் காரன்: (பாடிக் கொண்டே வருகிறுன்.)

ஆஹாஹா கத்தரிக்காய்,
அருமையான கத்தரிக்காய்
ஓஹோ—ஹோ ஒரே வீசை
ஒன்பதணு கத்தரிக்காய்.
வாங்கிப்பார், வறுத்துப்பார்,
வாணலியில் வதக்கிப்பார்......

ஆஹாஹா கத்தரிக்காய்
ஜோரான 'டோமாடோ' ஜூஸ்
மிகுந்த டோமாடோ நைஸ் ஆக
ஐஸ் இல் வைத்து குடிச்சிடலாம்
டோமேடோ...ஆஹா ஹா!

கோபு: எய்! கத்தரிக்காய்... கத்தரிக்காய்...கத்தரிக்காய்...

கறிகாய்: யாரப்பா கூப்பிடறது?

தாயார்: (உள்ளிருந்து) இருக்கச் சொல்லுடா கோபு. பிரமாதமாய்ப் பாடரானேன்னு பார்த்தேன் கறிகாய்க்கார குப்புசாமியா.........(வெளியே வந்து) என்னப்பா! இங்கிலீஷூம் தமிழும் கலந்தடிக்கிறே!

குப்பு: இல்லேம்மா! இந்த சோல்ஜர்களிடம் பேசிப் பேசி கொஞ்சம் பழக்கத்திலே வந்துட்டதம்மா. சரி, என்னம்மா வேணும்?

தாயார்: பாட்டு என்னவோ வேடிக்கையாய் இருந்தது! ஆனால், நிஜம்மா இந்த டோமேடோவில் அத்தனை ஜூஸ் இருக்காது போல் இருக்கே!

கறிகாய்: என்னம்மா இது? சாப்பிட்டுப் பாருங்கள் ரொம்ப, ரொம்ப 'அச்சா' வாய் இருக்கும்.

தாயார்: போறுமே! ஹிந்தி வேறயா?......எங்கே நிறுத்தி எடைபோடு...

கறிகாய்: (நிறுத்துக் கொண்டே) எம்மா! எப்போ வந்தீங்க இந்த வூட்டிற்கு... முன்னாடியே எனக்குத் தெரியாமே போச்சே?...

தாயார்: எம்பா! உன்னைத் தான் இந்தப் பக்கமே காணுமே?

கறிகாய்: இந்த வூட்டிலே குடிவருவாங்கன்னு எனக்குத் தெரியுமா அம்மா...அதோ என் பொண்ஜாதி வரா...

தங்கம்: ஆமா! இந்த வீட்டிலே குடி வருவான்னு ஏன் நீ நினைக்கல்லே? வீட்டுக்காரரா பொல்லாதவர்களா?

கறிகாரன்: சேச்சே! தங்கமானவராச்சே!...... என்னமோ பாவம்! வந்துட்டிங்க இந்த வூட்டிற்கு...கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க...

கறிகாய்க்காரன் மனைவி: எய்! என்ன சொல்லறே அம்மா கிட்டே! எதிரச்சும் பயப்படப் போறுங்க. பேசாம இரு...

தங்கம்: ஏன் தடுக்கிறே அவனை? சொல்லப்பா நீ உம்.

கறிகாய்: அவ சொல்றது நாயம்தான். நீங்க சின்னஞ் சிறிசு. சின்னச் சின்னப் புள்ளேங்க இருக்கிற வூடு....

தங்க: (ஆவலையடக்க மாட்டாதவளாய்) ஏன் அப்பா! என்ன தான் இருக்கு இங்கே சொல்லித் தொலையேன்...

கறிகாய்க்காரன் மனைவி: ஊம்! உன் வாய் சும்மா இராதே. நீங்க பேசாம இருங்கம்மா! ஆமாம் புள்ளேங்களை மட்டும் கொஞ்சம் ஜாக்கிரதையாப் பார்த்துக்குங்க. ராவிலே தோட்டப்பக்கம் போகாதீங்க...

குப்புஸாமி: நீ மட்டும் சொல்றயே? தேவலையடி ஆத்தா...

தங்கம்: (பயந்த தொனியில்) இப்படி இரண்டுபேரும் சண்டை போடறியளே தவிர விஷயத்தைச் சொல்ல மாட்டேங்கறயளே... சொல்லப்போறேளா இல்லையா...

குப்புசாமி: ஊம்...ம்...ம்

மனைவி: இல்லே...வந்து...ஊ...ம்...ம்...

குப்புசாமி: நானே சொல்லட்டுமா...

மனைவி: இல்லையில்லே. நானே சொல்லறேன்.

குப்புசாமி: எம்மா! ராவிலே தோட்டத்திலே எதிரச்சும் ஓசை கீசை கேக்குதா?...கிணத்திலே ஜலம் மொள்ளுறுப்பலே...தப், திப்புன்னு சாணி தட்டறுப்பலே.

தங்கம்: (திகைத்து) ஆமாம்... ஆமாம். நேற்றுத்தான் கவனித்தேன். கதவைத் திறந்து பார்க்கலாமா என்ற எண்ணம். அவரும்

ஊரில்லே. தனியே போக வேண்டாம் என்றிருந்தேன்.

குப்புஸாமி மனேவி: பாத்தீங்களா! பாத்தீங்களா! நல்ல வேளே அந்தப் பக்கம் போகாமல் அந்த மாரியாத்தா காத்தா உங்களே. அடியம்மா! போன வாட்டி இருந்தாங்களே... அந்தம் மாளே அடிச்சு...

தங்கம்: (உதறல் எடுக்க) அடிச்சா...

குப்பு: ஆமாங்கறேன். அந்த காட்டேறி இருக்குல்ல... அதுவும் ரத்தவெறி பிடிச்சதாச்சே...

தங்கம்: நல்ல வேளேயாய் சொன்னயே அப்பா. போறும் போறும். எதுடா பட்டணத்திலே வீடே கிடைக்காதே; இவருக்கு எப்படி கிடைச்சதன்னு பார்த்தேன்.

குப்பு: நாங்க போய் வாரோம் அம்மா! பத்திரமாய் இருங்க...

தங்கம்: போய் வாங்கோ... என்னமோ இந்த மட்டும் சொன்னேளே, அதுவே போதும்.

மூன்றும் காட்சி

இடம்: ராமய்யர் வீடு.

காலம்: மாலே.

பாத்திரங்கள்: ராமய்யர், அப்பாமுதலி.

ராமய்யர்: வாரும், வாரும். உட்காரும். நீர் செய்த உதவிக்கு எத்தனே கொடுத்தாலும் தகும். இந்தாரும் மற்றுமொரு 100 ரூபாய்.

அப்பாமுதலி: ஹி... ஹி... ஹி... அதற்கென்ன அவசரம்?

ராமய்யர்: ஆமாம். அவாள் எப்படி போனுள் கடைசியில் வீட்டைவிட்டு. ஒருமாத வாடகை போனலும் போகட்டும் மென்று போய் விட்டாளே?...

முதலி: அதெல்லாம் வியாபார முறை. உமக்கு சொல்லிக் கொடுத்தால் முடியாது.

ராமய்யர்: ஏதோ பிசாசு வந்து கொல்லேப்பக்கம் தண்ணீர் இழுத்துதாமே?

முதலி: (சிரித்துக்கொண்டே) பிசாசுமில்லே. மண்ணுங்கட்டியும் மில்லே. அந்த குப்புசாமி கையில் ஒரு பத்து ரூபாய் நோட் அழுத்தினேன். அவனும் அவன் மனேவியும் பிசாசா மாறினர்கள்...

ராமய்யர்: பேஷ்! பேஷ்! நான்கூடப் பயந்தேன் ஐயோ பிசாசு இருக்கும் வீட்டில் நம் குழந்தையை அனுப்புவதாவது என்று... நல்ல வேலே செய்தீர்... ஆனல் ஒரு விஷயம். நம் குழந்தை அங்குபோன பிறகு ஏதாவது உம் வேலேத்தனத்தைக் காட்டாதேயும்.

முதலி: செய்வேனு அப்படி! போய்வரட்டுமா!

ராமய்யர்: ஆஹா...

மரகதம்

நாகு

சேலத்திலிருந்து சுமார் இருபது மைல் தூரத்தில் தாரமங்கலம் என்றொரு ஊர் இருக்கிறது. இப்பொழுது அது ஒரு சிறு கிராமம். சுமார் நானூறு வீடுகள்தான் இருக்கும். ஒரு கணக்கப்பிள்ளை பிராமணர் ஒரு கைக்கோளர் முனிசீப்பு. இவர்கள் தான் இந்தக் கிராமத்தில் காருண்ய பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் பிரதிநிதிகள். மற்றக் கிராமக் குடிகள் எல்லாம் நெசவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள். ஒரு சிலர் பயிர்த் தொழிலும் செய்கிறார்கள்.

ஊருக் கருகில் ஒரு பிரும்மாண்டமான கோவில் இருக்கிறது. அக்கோயில், பித்தளையில் பொதிந்த வைரம் போலும், ஏழை குடியிற் பிறந்த அழகிய ரம்பைபோலும் பொலிவுடன் விளங்குகிறது. அதே ஊரில் அஷ்டஸகஸ்ர வகுப்பைச் சேர்ந்த அந்தணர் ஒருவர் இருக்கிறார். அவரது குடும்பம் பூர்வீகமானது. அவர் பாட்டனார் அன்னக் கொடி கட்டி வாழ்ந்ததாகக் கேள்வி. சுமார் இருபது வேலி நிலமும் கையில் இருபதினாயிரம் ரொக்கமும் அவர் வைத்திருந்தாராம். நிலத்தின் வரும்படியோடு ரொக்க லேவா தேவியில் மாதம் இருநூறு முன்னூறு சம்பாதிப்பாராம. மன்னன்போல் இரட்டைக் குதிரை சாரட்டில் பவனி வருவாராம். இதுவெல்லாம் அவர் பேரன் சொல்லிக் கேள்வி தான். அந்த செல்வமெல்லாம் மறைந்து இருந்ததே சந்தேகாஸ்பதமான விஷயமாய் விட்டது. பெருங்காய டப்பியின் மணத்தைப் போல அந்தச் செல்வத்திற்கு அறிகுறியாய் எஞ்சியிருப்பது ஸ்ரீ அய்யர்வாளின் டாம்பீகமானபேச்சும்அவர்மேல் அங்கவஸ்திரமாக அணியும் காசி பீதாம்பரமும்தான். தாரமங்கலம் கோயிலை ஸ்ரீ அய்யரின் பட்டுப் பீதாம்பரத்திற்குத்தான் உபமானமாகச் சொல்லலாம், ஊரின் பழைய எழிலெல்லாம் விட்டது. எல்லாம்போயும், அழியாக் கலைத் திறனோடு கட்டப்பட்ட அந்த ஆலயம் ஸகாரா பாலைவனத்தில் தோன்றும் 'ஓயஸிஸ் கிணறு களைப் போன்று, சிற்பக் கலையின் ஊற்றாக இருக்கிறது. கலையின் ஊற்று வற்றாமல் இன்றைக்கும் நாளைக்கும் அக்கோயில் வழி போவோரின் கலா தாகத்தைத் தணிவிக்கிறது. கண்ணுடைய எவரும் அச் சிற்பங்களைக் கண்டவுடனே வெளியேற முடியாது, அக் கற்சிலைகளை உற்று நோக்கும் உயிர்ச்சிலைகளாய்ச் சமைந்து விடுவார்கள்.

அவனுக்குக் கிடைத்த அந்தச் சந்தர்ப்பத்தை அவன் சரியான படி பயன்படுத்திக் கொண்டிருந்தானானால்... செல்வராஜனை மறந்திருப்பாள் அந்தச் செல்வி...

இவ்வளவு பொலிவும் வனப்பும் பொருந்திய கோயில் இவ்வூரில் எப்படி வந்து முளைத்தது என்று சரித்திராசிரியர்களைத் தான் கேட்கவேண்டும். ஆனால் இதே கோயிலில் சுமார் ஐம்பதாண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இதோ இதே யாளியின் மறைவில்தான் அவள் நின்றிருந்தாள்.

காளியாத்தா முதலியின் அருந்தவச் செல்வி. அப்பொழுது, கோயில் இப்பொழுதுபோல் பாழுடைந்து கிடக்கவில்லை. ஊரில் இரண்டாயிரம் வீடுகளுக்கு மேல் இருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் தனலட்சுமி தாண்டவமாடினாள். வறுமையென்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. ஒவ்வொரு வீட்டிலும் நாலைந்து தறிகள் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருந்தன. பெண் மகளிர் தாழ்வாரங்களில் உட்கார்ந்துகொண்டு நூற்றுக் கொண்டிருந்தனர். சிலர் வாசலில் முளையடித்துப் பாவு போட்டுக் கொண்டிருந்தனர். சோம்பலென்பது மருந்துக்கும் கூடக் கிடைக்காது. தரித்திரம் எங்கிருந்து தலைகாட்டும்?

அப்பொழுது மகாத்மா காந்தி கதர் இயக்கத்தை ஆரம்பிக்கவில்லை. அவ்வூர் மக்கள் தங்கள் பரம்பரைத் தொழிலைத்தான் செய்து வந்தனர். செல்வமும் பெருகிக்கொண்டே வந்தது.

ஐயோ பாவம்! காளியாத்தா முதலியின் மகள் மரகதத்தை மறந்து விட்டேனே! அவள் அந்த யாழியின் மறைவில் மறைந்து நின்றாள். கோயில் நிறைய ஜனங்கள். எங்கே பார்த்தாலும் அகல்கள் எரிந்துகொண்டிருந்தன. "கலகல" வென்று இரைச்சல். குருக்கள் உறக்க அஷ்டோத்தர நாமங்களைச் சொல்லி அர்ச்சனை செய்து கொண்டிருந்தனர். குழந்தைகள் மணிகளையடித்துக் கொண்டு அகன்ற தூண்களிடையே ஓடி விளையாடிக் கொண்டிருந்தனர். மரகதம் ஒன்றையும் கவனிக்காமல் நின்று கொண்டிருந்தாள். அவளுள்ளம் அதே இடத்தில் சுமார் நான்கு வருடங்களுக்கு முன் நேர்ந்த ஒரு இன்பக் கனவைக் கண்டு கொண்டிருந்தது.

அய்யாமுத்து அவள் அத்தை மகன். ஆறு தறிகள் வைத்துக் கொண்டிருந்தான். எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் சேலைகளுக்குக் கரை கட்டுவதிலும் பாவு போடுவதிலும் அவனுக்கு நிகர் யாருமில்லை. அவன் கைப்பட்ட மாத்திரத்தில் பஞ்சு பட்டாயிற்று. அவ்வளவு நயம் அவன் செசவு. சிறுபிள்ளை பிராயத்திலேயே தகப்பனை இழந்தவன். காளியாத்தா முதலி வீட்டுக்கு வடவண்டை வீடுதான் அவனும் அவன் தாயாரும் வசித்த இடம்.

மரகதம் பிறந்த உடனேயே காளியாத்தா பிள்ளை தங்கையைக் கூப்பிட்டு, "அடி யாத்தா! ஒனக்கு மருமவ பொறந்திருக்கிறு" என்று பெண்ணின் கலியாணத்திற்கு நிச்சயதார்த்தம் செய்திருந்தார்.

மரகதத்திற்குப் பதினொன்கு வயது. தன் தாயாருடன் கோயிலுக்கு வந்திருந்தாள். சேலத்திலிருந்து ஜவுளிக்கடை அங்கமுத்து முதலியின் மகனைக் கோயிலில் கண்டாள். அவன் பெயர் செல்வராஜா. பத்துப் பனிரண்டு வயதிருக்கும்போது மரகதத்தின் எதிர் வீட்டில் வசிக்கும் தன் பாட்டனார் வீட்டிற்கு வந்திருந்தான். அப்பொழுது ஏழு வயது பெண்ணாயிருந்த மரகதம் அவனோடு கண்ணாமூச்சி விளையாடியிருக்கிறாள். இப்பொழுது நல்ல ஆக்ருதியாக வளர்ந்திருந்தான். கருக்கு விடாத இளம் மீசை அரும்பிய உதடுகளில் பெண்கள் மனதை மயக்கும் மெல்லிய புன்சிரிப்பு. வெயிலே அறியாத

மிருதுவான அழகிய வதனம். கன்றுக் குடுமிக்குப்பின் வாரி முடியப்பட்ட நீண்ட மயிரும்; அகன்ற நெற்றியின் நடுவில் சிறிய சவ்வாதுப் பொட்டும் அவன் மேனி யழகைப் பன் மடங்கு எடுத்துக் காட்டிற்று. மரகதத்தைக் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டே தன் விசிறி மடிப்பு சரிகை அங்கவஸ்திரத்தை ஓய்யாரமாக தோள்மே லிருந்து சரிந்து விழும் வண்ணம் போட்டுக் கொண்டான். மரகதம் தன் உள்ளத்தை அவனுக்குப் பறி கொடுத்து விட்டாள். அதே காட்சிதான் அவள் கண்கள் முன் இப்பொழுதும் தோன்று கிறது. ஆனால் அவள் முகத்தில் புன்முறுவல் இல்லை. பொலிவும் இல்லை.

சூரியனைக் கண்ட தாமரை மலர்கிறது. தாயாகிய தண்ணீரை விட்டு வெளியேறியதும் சூரிய ரஸ்மியாலேயே வாடி விடு கிறது.

கோயிலில் நடந்த சம்பவத்திற்குப் பிறகு அடிக்கடி தெருவுக்குக் குறுக்கே கண்கள் சந்தித்தன. மரகதம் தலைவாரிப் பின்னிக் கொண்டு மயிரை வாசலில் எறிவதற்காக வெளி வருவாள். அப்பொழுது செல்வராஜன் எச்சிற் தாம்பூலத்தைத் துப்ப வருவான். இருவர் கண்களும் ஒரு கணம் உற்று நோக்கும். உடனே சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு மரகதம் உள்ளே சென்று விடுவாள். கள்ளக் காதல் வேரூன்றி வளர்ந்து வந்தது.

பெண்ணுக்கு வயதாகி விட்ட படியால் கலியாண ஏற்பாடுகளை துரிதப்படுத்தினர். காளியாத்தா முதலி, மாப்பிள்ளை கைக்குள் இருப்பதாக மனப்பால் குடித்துக் கொண்டிருந்த படியால் அவர் அதைக் குறித்துக் கவலைப் படவேயில்லை. கலியாணத்திற்கு நாள் குறித்தாய்விட்டது. மரகதத்திற்கு என்ன செய்வதென்று தெரியவேயில்லை. தன் தகப்பனார் கலியாணத்தைக் குறித்துத் தன்னிடம் பேசுவார் என்று எண்ணினாள். பல விதத்திலும் தகுதியுள்ள அத்தானை மணாளனாக அடையத் தன் மகளுக்கு ஒருவிதை யோசனையும் இராதென்று எண்ணிய முதலி அவளிடம் திருமணத்தைக் குறித்துப் பேச வேண்டுமென்று நினைக்கவே யில்லை.

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தாள் மரகதம். தைரியமாக அத்தை மகனை மணக்க முடியாதென்று தகப்பனாரிடம் சொன்னாள். அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று எண்ணினார். அந்தப் பைத்தியத்திற்கு இணங்குவதாக அவர் நினைக்கவில்லை. சிரித்துக் கொண்டே, "அசட்டுப் பெண்ணே! கலியாணத்தைக் குறித்து உனக்கென்னத் தெரியும்? விளையாடப்போ!,' என்று சொல்லிவிட்டார். தன் பெண்ணின் மனதை அவர் அறியவில்லை.

மரகதம் பலமுறை யோசித்தாள். ஒரே வழிதான் அவளுக்குத் தோன்றிற்று. அய்யாமுத்து தனக்காக எந்தத் தியாகத்தையும் செய்வான் என்பதை இளம் பெண்ணாயிருந்தும் அவள் அறிந்திருந்தாள். மறுநாள் சாயுங்காலம் அத்தை கோயிலுக்குப் போகும் வரையில் காத்திருந்தாள்.

அய்யாமுத்து தறியருகில் உட்கார்ந்து ஒரு சரிகை சேலை செய்து

கொண்டிருந்தான். மரகதம் உள்ளே நுழைந்தபொழுது அவன் பிசகியஒருஇழையைச்சீர்திருத்து வதில் முனைந்திருந்தான். அவள் வந்ததை அவன் கவனிக்கவில்லை. மரகதத்திற்கு எப்படி ஆரம்பிப் பது என்று தோன்றவில்லை. சுமார் அரை நிமிஷநேரம் நின்று கொண்டு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். செக்கச் செவேலென்ற நிறம் கதிரவனின் தங்கக் கிரணங்கள் உயர இருந்த பலகணியூடே நுழைந்து அவ னைச் சொர்ணமய மாக்கியது. ஒரு புறமாய்ச் சாய்ந்திருந்த அவன் உடல் நன்ருகத் தேகப் பயிற்சி செய்து திரணை திரணை யாய்ச் சேர்ந்திருந்த தசை நார் களை எடுத்துக் காட்டிற்று. தலையி லிருந்த நீண்ட குடுமியை சேர்த்து லேசாக முடிந்திருந் தான். மரகதம் அந்த அரை நிமி ஷத்தில் அய்யாமுத்தா அல்லது செல்வராஜனு அதிக அழகு என்று யோசித்திருக்க முடி யாது. அப்படி ஒரு கண நேரம் யோசித்திருந்த போதிலும், செல்வராஜனை விட அய்யாமுத்து பல மடங்கு அதிக அழகுடையவ னென்று தெரிந்துகொண் டிருப் பாள்.

ஒரு பெருமூச்சைக் கேட்டு அய்யாமுத்து நிமிர்ந்தான். மர கதம் தன் கண் முன் நிற்கிருள் என்பதை அவனுல் நம்ப முடிய வில்லை. "அம்மா கோயிலுக்கு —" என்று அசடு வழிந்து கொண்டு ஆரம்பித்தான். மரக தம் என்ன சொல்ல வேண்டு மென்பதை முன் கூட்டியே யோசனைசெய்துவைத்திருந்தாள்.

"அது எனக்குத் தெரிந்து தான் வந்தேன். உங்களை ஒரு உபகாரம கேட்க வந்தேன்" என்ருள்.

அய்யாமுத்து நவீன வாலிப னல்ல. ஆகையால் அவனுக்கு அவளிடம் பேசத் தெரியவில்லை. அவளைப் பார்த்துத் 'திரு திரு' வென்று விழித்தான்.

"என்ன, செய்வீர்களா? சொல்லுங்கள்!" என்று மரக தம் கேட்டாள்.

இந்தச் சமயத்தில் அவளிடம் காதல் பேச்சுத் துவக்கி இனிமை யாகப் பேசி யிருந்தானுனல் அவள் செல்வராஜனை மறந்திருப் பாள். அய்யாமுத்து அவளை மணந் திருப்பான். ஆனல், கிராமவாசி யாகிய அவனுக்கு காதலுக்கும் கத்தரிக்காய்க்கும் வித்தியாசம் தெரியாது. ஆகையால் மிகவும் உணர்ச்சியற்ற குரலில், சர்வ சாதாரணமாக, "என்ன செய் யச் சொல்கிருய்? சொல்லு! அம்மா வருகிற வரையில் காக்க முடியாத அவ்வளவு அவசரமான காரியம் என்ன வந்தது?" என் ருன்.

அவன் விசித்திரமான ஒரு சேலையை நெய்து கொண்டு இருந்தான். மரகதத்திற்காகத் தான். தன்னுடைய கலையின் பூர்ணத் திறமையையும் அதில் காட்டி யிருந்தான். அதில் ஈடு பட்டிருக்கும்போது மரகதமே நேரில் வந்திருந்த போதிலும் அது ஒரு தொந்தரவாகவே அவனுக் குத் தோன்றிற்று.

"நீங்கள் என்னைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன்" என்று அப்பாவிடம் சொல்ல வேண்டும். என்னல் உங்களைக் கலியாணம் செய்து கொள்ள முடியாது. நான் கலியாணம் செய்து கொண்டால் செல்வராஜ னைத்தான் செய்து கொள்வேன்'

"இளங் கன்று பயமறியாது. 'படபட' வென்று மரகதம் தன்

மனதில் குமுறிக்கொண் டிருந்ததை வெளியிட்டாள். அவள் குரலில் வெறுப்புக் கலந்திருந்தது. இவ்வளவு உணர்ச்சியற்ற புருஷனுக்கா வாழ்க்கைப்படுவது என்ற எண்ணம் மின்னல் போல் அவளுள்ளத்தில் தோன்றி மறைந்தது எனலாம்.

அய்யாமுத்து கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டான். சதா நிழலிலேயே வேலை செய்வதால் ஏற்கெனவே வெளுத்திருந்த அவன் முகம் நீலம் பாய்ந்த பாலைப் போல் தோன்றிற்று. அவன் கையிலிருந்த இழை நழுவிற்று. தலை சுற்றுவது போலிருந்தது. உலர்ந்த உதடுகளை பசையற்ற நாவினால் தடவினான். தன் மாமன் மகள்தானா இப்படிப் பேசினாள் என்று அவனால் நம்ப முடியவில்லை. அந்த நிமிஷத்தில் கூட அவன் நெய்து கொண்டிருந்த அந்த அற்புதச்சரிகைச் சேலையை மரகதம் உடுத்திக் கொண்டால் எப்படியிருக்கும் என்று அவன் மனம் சித்தரித்துக் கொண்டிருந்தது. தன் காதலியோடு இன்ப வாழ்க்கை நடத்துவது போல் கனவு கண்டு கொண்டிருந்த காவற் கைதியை தூக்கு மேடைக்கு அழைக்க வந்த காவலர்கள் எழுப்பினால் அவன் உள்ளம் எப்படியிருக்குமோ, அப்படியிருந்தது, அய்யாமுத்து வெளிச்சம் வருவதற்காகப் பலகணியைத் திறந்து ஒரு சிறிய கல்லை முட்டு வைத்திருந்தான். ஒரு எலி, கல்லைத் தள்ளி விட்டதால், 'படேரெ'ன்ற சப்தத்தோடு கதவு சாத்திக் கொண்டது. அறையில் இருள் மூண்டது. அய்யாமுத்துவின் இருதயத்திலும் இருள் சூழ்ந்தது.

மெதுவாக எழுந்திருந்து பலகணிக் கதவைத் திறந்து முன் போல கல்லை முட்டு வைத்தான். இதற்குள் அவன் மனதில் பல எண்ணங்கள் தோன்றி மறைந்தன. ஆனால் அவனுக்கு மரகதத்தின் மேலாவது செல்வராஜன் மேலாவது ஆத்திரம் ஏற்படவில்லை.

மரகதம் இடம் பெயராமல் பதுமையைப் போல் நின்று கொண்டிருந்தாள். அவள் கண்களில் அலட்சியம் தாண்டவமாடிக்கொண் டிருந்தது. அதை அய்யாமுத்து கவனிக்கவில்லை.

"உனக்கு ஏன் திடீரென்று என் மேல் வெறுப்புண்டாயிற்று?" என்று சற்று நேரம் கழித்து அய்யாமுத்து கேட்டான்.

"உனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. சதா பட்டிக் காட்டானைப் போலத் தறியோடு தறியாய் உட்கார்ந்திருக்கிறாய். செல்வராஜனுக்கு இங்கிலீஷ்கூட வரும். அவனுக்குத் துரைத்தனத்தில் உத்தியோகம் கூட ஆகியிருக்கிறதாம்," என்று 'பளிச்' சென்று பதில் வந்தது.

அய்யாமுத்து பெருமூச்சு விட்டான். "சரி அப்படியே. நான் உன்னைக் கலியாணம் செய்து கொள்வதில்லை. நீ போகலாம்" என்றான். அவன் குரலில் விரக்தி நிரம்பியிருந்தது. மரகதம் போய் விட்டாள்.

அன்று ராத்திரி அய்யாமுத்து தூங்கவேயில்லை. தறியண்டை உட்கார்ந்து நெய்து கொண்டேயிருந்தான். அவன் தாய் பல முறை வேண்டியும் அவன் தறியை விட்டு நகரவில்லை.

எங்கேயோ கோழி கூவிற்று. புடவை முடிந்து விட்டது. அய்யாமுத்து நிதானமாக எழுந்து ஜன்னல் வெளியே

பார்த்தான். பனிப்புகை பரவி ஊனந்திருந்த சாலேயில் ஒருவித அடிச்சுவடும் தென்பட வில்லே. சுவற்றிலிருந்த பிறையிலிருந்து ஒரு பையை எடுத்தான். அதில் இருந்து ஐம்பது ரூபா யெடுத்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளிக் கிளம்பினன்.

சூரியோதயமானதும் ஊரெல்லாம் அமர்க்களப்பட்டது. அய்யாமுத்துவின் தாயாரின் துயரத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. இப்படி ஊரை விட்டுப் போய் விடுவான் என்று மரகதம் எண்ணவில்லே. ஏதோ பெரிய தவறு செய்து விட்டதாக அவள் உள்ளத்தில் தோன்றிற்று. அன்று முழுதும் அவள் ஒருவரிடமும் பேசவில்லே.

கலியாணம் நிச்சயிக்கப் பட்ட முதல் நாள் காளியாத்தா முதலிக்குக் கடிதம் வந்தது. சேலத்திலிருந்து ஒரு ஆள் அதைக் கொண்டு வந்திருந்தான்.

"மாமா அவர்களின் பொற்பாத கமலங்களுக்கு அடியேன் திக்கு நோக்கி தொண்டனிட்டு தெரிவிப்பது யாதெனில் :—

சில வெளியிடக் கூடாத காரணங்களே முன்னிட்டு என்னல் மரகதத்தை மணம் செய்து கொள்ள முடியாது என்று வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவள் இஷ்டப்பட்ட புருஷனுக்கு அவளைக் கலியாணம் செய்து வைக்கும்படி வேண்டிக் கொள்கிறேன். எல்லாமறிந்த தங்களுக்கு நான் அதிகம் சொல்லுவது அதிகப் பிரசங்கமாகும்.

தங்களிடம் நேரில் சொல்லிக் கொள்ளாமல் வெளியேறியதற்கு மன்னிக்கவும். என் தாயாரைத் தாங்கள்தான் பாதுகாக்க வேண்டும். நான் என்றுமழியா இன்பத்தைத் தேடிச் செல்கிறேன். என் ஞான குருவுக்கு என் அநந்த கோடி நமஸ்காரம். அவருக்குப் பாதகாணிக்கையாக ஒரு சேலேயைத் தயார் செய்திருக்கிறேன். அதைக் கலியாணத்தின் போது மரகதம் அணிந்தால் எனக்குப் பரம சந்தோஷம்.

இப்படிக்கு

இந்தக் கிறல் அய்யாமுத்துவுடையது.

காளியாத்தா முதலியின் கண்களில் கண்ணீர் பெருகிற்று. அவர் மரகதத்தைக் கோபித்துக் கொள்ளவில்லே.

*

பூட்ஸின் தோல் பள பளப்பா யிருப்பதற்கு 'வெல்வெட்' துணி உபயோகிக்கவும். 'வெல்வெட்' துணியை மடித்து ஒரு பையாகத் தைத்து அதற்குள் கிழிந்த மேஜோடைத் திணிக்கவும். 'வெல்வெட்' தலேயணேயால் தோல்மேல் தேய்த்தால் பாலிஷ் நன்ருக ஏறித் தோல் பளபளப்பாயிருக்கும்.

பயங்கரக் கனவுகளேக் குறித்து பேசிக்கொண்டிருந்தோம். லட்சுமி சொன்னள்: "இந்த பயங்கரக் கனவுகள் ரொம்பரொம்பக் கெடுதல். என் நாத்தனர் திருடன் வந்து மென்னியைப் பிடிப்பதுபோல கனக்கண்டாள். காலேயில் பார்த்தபோது செத்துக்கிடந்தாள்." நீங்கள் லட்சுமியை நம்புவீர்களா?

ஜைனப் பெண்கள்

ஸ்ரீ ஜெயின்

எந்த விஷயத்திலும் ஜைன சமயம் உக்கிரமான ஒருதலைக் கொள்கைகளைக் கண்டிப்பது நாம் தற்காலத்தில் அறிய வேண்டிய ஒரு உண்மை. சமத்துவத்தைப் பற்றி முழக்கமிடும் இக் காலத்தில் யாதொரு வேற்றுமைகளும் ஒப்புக் கொள்ளப்பட மாட்டா. மேலும் சமத்துவம் இல்லையென்றால் உடனே அடிமைகள் என்று கூறிவிடுவார்கள். ஆனால் இவ்விரண்டிற்கும் மத்தியிலுள்ள நிலைமையே ஜைனப் பெண்களின் நிலைமை. பெண் மக்கள் ஆண்மக்களுக்கு முற்றிலும் சமம் என்றும சொல்ல முடியாது. அடிமைகள் என்றும் சொல்ல முடியாது. இரண்டு ஒருதலைக் கொள்கைகளும் ஜைனசமயத்திற்கு ஒவ்வாதவை. ஒரு ஆங்கிலப் பெண்மணி கூறியிருப்பதுபோலச் சில பெண்கள், சில ஆண் மக்களைவிட புத்தி சாதுரியமுள்ளவர்களாக இருக்கலாம். வீரர்களாக இருக்கலாம். ஆனால் பொதுவாகப் பார்ப்போமானால் பெண் மக்களுக்கும் ஆண் மக்களுக்கும் அநேக வேற்றுமைகள் உண்டு.

முற்றிலும் சமத்துவமில்லையென்கிற காரணத்தால் பெண்களுக்கு அநேக உரிமைகள் உண்டு என்பதை மறந்துவிடலாகாது. ஒவ்வொருவரின் ஆன்மாவும் தனித்தனி. ஆன்மாக்களின் இயற்கைக் குணங்களில் வித்தியாசம் இல்லை என்பது உண்மையே. ஆனால் ஒரு ஆன்மாவிற்கும் மற்றொன்றிற்கும் சம்பந்தம் கிடையாது. ஐக்கியமும் கிடையாது. ஒவ்வொரு உயிரும் தன்தன் செயலுக் கேற்றவாறே இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றது. ஒருவர் செய்யும் வினை மற்றொருவரை அணுகாது. ஆகையால் ஒரு பெண் தன் கணவனால் ஏவப்பட்ட போதிலும், தீய காரியங்களில் ஈடுபடலாகாது. முற்காலத்தில் சில ஜைனப் பெண்கள், பௌத்தர்களை மணந்த பிறகும் தங்கள் சமயத்தையே பின்பற்றி வந்தனர். அவர்கள் மாமிசத்தைச் சமைக்க இணங்கவில்லை.

தீய வழியில் கணவன் செல்லும்போது புத்தி புகட்டி அவனை நல்வழியில் திருப்புவதும் பெண்ணின் கடமை. ஒருவருக்கொருவர் நன்மை புரிந்து ஒருவர் மற்றொருவர் நலனைநாடி நடக்க வேண்டுவது முக்கியம். ஆனால் ஒருவருக்கு மற்றொருவர் இணங்கி இருவருக்கும் தீங்கை விளைவிக்கும் காரியத்தில் உடன்படவேண்டுமென்று ஜைனம் கூறவில்லை. தன்னுடைய ஆன்மாவிற்குக்கேட்டை விளைவிக்கும் எந்தச் செய்கையிலும் மற்றொருவருக்கு இணங்கி உடன்பட வேண்டுமென்கிற நிபந்தனை யாருக்கும் கிடையாது. தகப்பன்—மகன், கணவன்—மனைவி, முதலிய உறவுகளெல்லாம் ஒருவருக்கொருவர் நன்மை புரியவே தவிர, தீங்கிழைப்பதற்கல்ல.

ஒரு தகப்பன் தன் மைந்தனை ஒரு கிணற்றில் மிருக ரத்தத்தை நிரப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு, மகன் அந்தப் பாவகாரியத்தில் உடன்படக் கூடாதென்று முனிவர் விளக்கியிருக்கிறார். ஜைன புராணங்களில் அநேக கதைகள் எவ்வாறு அநேகர் தங்கள்

மனைவிகளால் நன்மை அடைந்தனர் என்று கூறுகின்றன.

ஆனுல் ஒரு நிபந்தனை. தற்காலத்தவருக்குப் பொருத்தமாகத் தோன்ருது. பெண்கள், பெண் ஜன்மத்திலேயே முக்தியடைய முடியாதென்பது ஜைனசமய முடிபு. அதற்குத் தகுந்த ஆற்றல், தேக வலிமை முதலியன பெண்களுக்கு அமையாதென்றும் அவர்கள் முக்தியடைவதற்கு இன்றியமையாத கடுந்தவம், தியானம் புரிய முடியாதென்றும் ஆகையால் அவர்கள் அப்பொழுதே முக்தி பெறமுடியாதென்றும், கூறப் படுகிறது. ஆனுல் அவர்கள் எப்பொழுதும் முக்திபெற முடியாதென்பதல்ல. முக்தியைப் பெறும் வழியைப் பின்பற்றலாம். அதற்கு அடிகோலலாம். தவம் புரியலாம. துறவும் மேற்கொள்ளலாம். முக்திநெறியில் எவ்வளவு தூரம் செல்லக்கூடுமோ அவ்வளவு தூரம் முன்னேறுவதில் தடையில்லை. கடைநிலையை மாத்திரம் அப்பொழுது பெற முடியாது. என்றும் அழியாத முக்திநிலையை அடைய உயிர்கள் அநேக பிறவிகள் எடுத்து அவ் வழியைப் பின்பற்றவேண்டுமென்பதை உணர்ந்தவர்கள் இதற்காகச் சலிக்க மாட்டார்கள். ஆனுல், இருபாலருக்கும் ஒருவித வேறுபாடும் கூடாதென்று எண்ணுபவர்களுக்கு இது பொருத்தமாகத் தோன்ருது.

உண்மையில் இயற்கையாக உள்ள வேறுபாடுகளை உள்ளபடி ஒப்புக்கொள்ளுபவர்களுக்கு இதில் ஆட்சேபம் இராது. ஜைன சமய நூல்கள் மனித வகுப்பினர் பற்றி மாத்திரம் கூறவில்லை. மக்கள்; தேவர், நரகர், விலங்கு—இந்நான்கு இனங்களைப் பற்றியும் இந்த நூல்கள் கூறுகின்றன. மக்களினத்திலிருந்து தான் முக்தியடையலாம். அதிலும் ஆண் பிறவியில்லாமல் முக்திபெறலாகாது. தேவர்களிலும் சில நிலைக்குமேல் ஸ்திரீகள் கிடையாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

உயர்வு தாழ்வு, ராஜாங்கம்—இவைகளும் சிலதேவ வகுப்பினர் வரையில்தான் உண்டு. இதற்குமேல் சமத்துவ நிலை. ஒருவருக்கொருவர் வேற்றுமை கிஃடயாது; உயர்வு தாழ்வும் கிடையாது. இது நாம் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம். எங்கு வேற்றுமைகள் இல்லையோ அங்குதான் உண்மையான சமத்துவம் சாத்தியம். இதை மறந்து நாம் பேச்சளவில் சமத்துவத்தை நிறுத்திக் கொண்டு பெரிய முழக்கம் செய்கிருேம்!

✲

தூக்கம் வர......

சிலருக்கு விளக்கு எரிந்தால் தூக்கம் வருகிறதில்லை. கணவன் இரவில் வெகுநேரம் கண் விழித்திருந்து படிக்கும் குணமுடையவன். தூக்கம் வராத பெண்களுக்கு ஒரு யோசனை. ஒரு 'சில்க்' கைக்குட்டையை பல மடிப்புகளாக மடித்து இமைகளின் மேல் வைத்துக் கொண்டு தூங்கினல் நித்திராதேவி அசைந்து வந்து சீக்கிரத்தில் அணைந்து கொள்வாள்.

197642

அரிய புத்தகங்கள்

நாவல்கள்

வானவில்	வாண்டா வாசிலெவ்ஸ்கா	ரூ. 5-0
காதல்	,,	3-12
சுந்தரி	வ. ரா.	5- 0
பவானி	'லக்ஷ்மி'	2- 8
வனிதாலயம்	சகுந்தலா ராஜன்	2- 0

சிறு கதைகள்

மஞ்சி விரட்டு	கொத்தமங்கலம் சுப்பு	3- 8
சஞ்சீவி	குகப்ரியை	3- 4
ஜெயகாதல் கீதம்	துர்கனேவ்	0- 8

கட்டுரைகள்

வாழ்க்கைச் சித்திரம்	வ. ரா.	2- 8

(தபால் செலவு தனி)

பவானி பிரசுரம்

ராயவரம் : (புதுக்கோட்டை) ஸ்டேட்

சுதந்திர தினம்
ஆகஸ்டு 15-ல்

சக்தி

சுதந்திர மலர் வெளிவருகிறது

●

அரிய கட்டுரைகள், அழகிய படங்களுடன்
சுமார் 180 பக்கம்

●

ரூ. இரண்டு
தபால் செலவு அணா நான்கு

●

சக்தி காரியாலயம்
சென்னை—14.



படம் :— ஆர். கிருஷ்ணன்

இப்பொழுதே பையன் டாக்டர் வேலை
செய்ய ஆரம்பித்துவிட்டான்.

Regd. No. M. 4845. MANGAI August 194

உங்கள் வர்ணஜால அச்சுவேலைகளுக்கு
சென்னை-ராயப்பேட்டை சக்தி பிரஸில்
கலந்து ஆலோசியுங்கள்

Printed & Published by Vai. Govindan at Shakti Press Ltd., P.I.C. No. MS 23.
For Shakti Karyalayam Royapettah, Madras. P.I.C. No. MS. 202